ISSN 2815-0333

# நெற்கதிர்

இந்தியா - இலங்கை கலை இலக்கியச் சமூக இணைப்பிதழ்

## உழவுக்கும்
## தொழிலுக்கும்
## வந்தனை செய்வோம் !



## பொங்கல் சிறப்பிதழ்

சுறவம் – திருவள்ளுவராண்டு 2053

# நெற்கதிர்

இந்தியா - இலங்கை கலை இலக்கியச் சமூக இணைப்பிதழ்

மலர் 5 : இதழ் 1

## உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!

*கௌரவ ஆசிரியர்*
**முனைவர் செ.சுதர்சன்**

*பொறுப்பாசிரியர்*
**கார்த்திக்**

*வெளியீடு (இந்தியா)*
**0/2, சோழன் நகர்,**
**வெங்கமேடு, கரூர்**
**தமிழ்நாடு, இந்தியா**

*வெளியீடு (இலங்கை)*
**தேடல் பதிப்பகம்,**
**இலங்கை**

*மின்னஞ்சல் முகவரி*

**nertkathir@gmail.com**

**ISSN 2815-0333**

**நெ**ற்கதிர் தைப்பொங்கல் சிறப்பிதழ் உங்கள் கரங்களில் தவழ்வதில் பேருவகை கொள்கிறேன். இத்“தைப்பொங்கல்“ நாள் தமிழின அடையாளங்களுள் ஒன்று. இன்றைய உலகில் இன அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன; மறைக்கப்படுகின்றன; மறுக்கப்படுகின்றன; வலிந்து இன்னொரு அடையாளத்துடன் கரைக்கப்படுகின்றன. இந்த நிலை, ஆதிக்க அரசியல் தன் அடையாளத்தை நிறுத்தவும் திணிக்கவும் ஏனைய அடையாளத்தை விழுங்கி ஏப்பமிட்டுச் செல்லும் ஒரு காலத்துயர். இனமொன்றின் அடையாளம் கால ஓட்டத்தில் மாறுவது இயல்பு. ஆனால் அது தன் வேர் அறுப்பதில்லை. அடையாளப் பேணுகை என்பது, மூடுண்ட சுய பண்பாட்டு வெளிக்குள் நிகழ்வதல்ல. அது ஆரோக்கியமான அடையாளப் பேணுகையும் அல்ல. கால நீரோட்டத்திற்கு ஏற்பவும் பண்பாட்டு இயங்கியலுக்கு ஏற்பவும் அடையாளத்தைத் தகவமைத்துக்

கொள்வதுதான் சிறந்த அடையாளப் பேணுகை. இந்தப் பின்னணியிலேயே தைப்பொங்கல் என்ற தமிழின அடையாளத்தையும் கருத வேண்டும். தைப் பொங்கலை ஒரு வணக்க முறையாகவும் விழாவாகவும் நோக்குவதைவிடவும் அதனை ஒரு தமிழின அடையாளமாக நோக்கும்போதுதான், அது 'பண்பாட்டு முதுசொம்' என்பது புலனாகும்.

ஏர் பின்னே இந்த உலகம் நின்று இயங்குகிறது என்பதற்கும் உழைக்கும் மானுடரின் உதய நாளோடு வருடம் புதிய பாதம் பதிக்கிறது என்பதற்கும் ஒரு சிறந்த பரிசாக மானுடம் தழுவிய உலகிற்குத் தமிழர் வழங்கிய பண்பாட்டு நன்கொடைதான் தைப்பொங்கல்.

உலகம் பரவிய தமிழர்கள் இதனைக் கொண்டாடுகிறார்கள் எனில் இது ஒரு பல்தேசிய நாள். சமய பேதமற்ற முறையில் இதனை எல்லோரும் ஏற்றிருக்கிறார்கள் எனில், இது சமய எல்லைகளை நீக்கி, எழும் பெரும் பண்பாட்டு அடையாளந்தான். உழவர் திருநாள், தைத்திருநாள் என்றெல்லாம் தமிழ்ப்பண்பாட்டு வெளியில் சிறப்புப்பெறும் தைப்பொங்கல், தமிழர் ஆண்டின் முதல் நாளாகவும் புதுவாழ்வின் திசைகாட்டியாகவும் நற்செயல்களின் கால்கோல் தினமாகவும் கவனிப்புப் பெறுகிறது.

தைப்பொங்கல் கடந்து சென்ற ஆண்டிற்கும் இனிப் பிறந்து தொடரப் போகும் ஆண்டிற்கும் முடிச்சுப்போடும் நாளாகையால், கடந்த ஆண்டு நிகழ்த்திய இலக்கியப் பயணத்தை, பிறந்த ஆண்டில் புதுப்பொலிவோடும் தீவிர சிந்தையோடும் தொடர நெற்கதிர் உறுதிகொள்கிறது. சென்ற ஆண்டின் சிறப்பு நிகழ்வுகளில் ஒன்றாக, பரந்த அளவில், பாரதியாரின் நினைவு நூற்றாண்டு நிகழ்வுகள் இலக்கிய வெளியில் இனிதே நிறைவேறின. அதனையொட்டி இந்திய இலங்கைக் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி, பாரதியார் நினைவு இளையோர் கவிதைச் சிறப்பிதழாக நெற்கதிர் மலர்ந்ததும் பலராலும் வரவேற்கப்பெற்றதும் பாராட்டப்பெற்றதும் மகிழ்வுதரும் அம்சம்.

மலரும் இந்த இதழில் தமிழுலகில் நன்கறியப்பட்ட ஆய்வாளர்களும் கவிஞர்களும் எழுதியுள்ளமை நெற்கதிரின் இவ்வாண்டுப் பயணத்தின் நல்ல தொடக்கம் என்றே கருதுகிறேன். ஆக்கங்கள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி. இவ்விதழ் வெளிவருவதற்கு முழுமையாக நெறிகாட்டி, ஆற்றுப்படுத்திய இவ்விதழின் கௌரவ ஆசிரியர் முனைவர் செ.சுதர்சன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

பல இடையூறுகளுக்கு மத்தியிலும், சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னேறும் நெற்கதிரை, ஆதரவுக் கரங்களெனும் காற்றால் அரவணைக்கும், அனைத்து எழுத்துலகச் சிற்பிகளின் கரங்களையும் நன்றியுணர்வோடு பற்றிக்கொள்கிறேன்.

உங்கள் தொடர்ச்சியான ஆதரவையும் பங்களிப்பையும் நெற்கதிர் வேண்டிநிற்கிறது.

அன்புடன்

*பொறுப்பாசிரியர்*

# இதழில் விளைந்த புதுக்கதிர்கள் . . .

**கட்டுரை**


**நவீனத் தமிழ்க் கவிதைகளில் விடுதலைக் கருத்தியங்கியல் (இன்குலாப் கவிதைகளை முன்வைத்து)**
சி.விஜய் (பக்கங்கள் : 05 – 23)

---

**தமிழ் மகள் – பாரதி பார்வையில் ஔவை**
பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் (பக்கங்கள் : 24 – 30)

---

**பெண்ணிய நோக்கும் மணிமேகலைக் காப்பியமும்**
முனைவர் இரா.டயானா கிறிஸ்டி (பக்கங்கள் : 31 – 41)

---

**குறுந்தொகை முல்லைத்திணையில் தலைவியின் கற்புக்கால நிலைகள்**
முனைவர் சு.சீனிவாசன் (பக்கங்கள் : 42 – 52)

---

**பெரிய எழுத்து நூல்கள் – சில குறிப்புகள்**
எம்.எம்.ஜெயசீலன் (பக்கங்கள் : 53 – 59)

---

**பகையின் நிலமே பாலை நிலம்**
ம.கலைச்செல்வன் (பக்கங்கள் : 60 – 64)

---

**இலங்கையின் மலையகப் பெருந்தோட்டத் தமிழர்களின் நிலவுரிமை**
இராமசாமி விஜயகுமார் (பக்கங்கள் : 65 – 71)

---

**இலங்கையில் தமிழ் மீதான சவால்கள்**
சி.சிவகஜன் (பக்கங்கள் : 72 – 75)


---

**<u>கவிதை</u>**

**தாயிரங்கு பாடல்கள்**
செ.சுதர்சன் (பக்கங்கள் : 76 – 82)

---

**விடிவுக்காகக் காத்திருப்போம்**
சபாநாதன் கிசாந்தி (பக்கம் 83)

---

**வரம் கேட்ட மரம்**
அ.கண்மணி (பக்கம் 84)

---

**இருண்ட வாழ்வின் சுகமான இரவுகள்**
சிறீபாஸ்கரன் சகிர்தா (பக்கம் 85)

---

**தோகையர் மேன்மை**
சி.விஜய் (பக்கம் 86)

---

**உறைந்த காலத்தின் உள்ளே**
வி.விமலாதித்தன் (பக்கம் 87)

---

**இனிது**
கலைவாணி இளங்கோ (பக்கம் 88)

---

**<u>பிற</u>**

**அலையாத்திக்காட்டின் தேன்**
(ஒருபக்கக் கதை)
சிவானந்தி கணேசராயன் (பக்கம் 89)

---

**அன்பு குளோரிஸ்**
(மொழிபெயர்ப்புக் கவிதை)
ஆங்கில மூலம்: இராபர்ட் பர்ன்ஸ், தமிழில்: கார்த்திக் (பக்கம் 90)

---



(இதழில் வெளிவந்துள்ள ஆக்கங்களுக்குப் படைப்பாளிகளே முழுப்பொறுப்பு உடையவர்கள்)

சி.விஜய் – இந்தியா



# நவீனத் தமிழ்க் கவிதைகளில் விடுதலைக் கருத்தியங்கியல்

[இன்குலாப் கவிதைகளை முன்வைத்து]

கவிதை என்பது அனுபவ அவதானிப்புகளின் ஊடாக மனச்சலனத்தின் நுண்தளத்தில் கருக்கொண்டு, வெளிப்படும் தனித்துவமான ஆற்றல்களைக் கொண்ட கலை வடிவமாகும். சமூகத்தளங்களோடும் தனிமனித எண்ணப் போக்குகளோடும் அனுபவமாகியதை மொழிவழி வெளிப்படுத்தும் பண்பினது கவிதை. கவிதைக்குள் கவிஞனின் அக, புற வாழ்க்கைச் செயல்பாடுகளும், ஆளுமையும், கருத்தியல் நிலைப்பாடுகளும் தவிர்க்க இயலாதவை. குறிப்பாக, இலக்கியத்தை மக்களுக்கானதாகவும் மக்களை முன்னிறுத்துகிறதாகவும் கையாளும் கவிஞன் தன் காலத்தியச் சமூகத்தைக் கருதியோ, கருதாமலோ படிஎடுத்துக் கொள்கிறான். இலக்கியப் படைப்புத்தளங்களில் பல்வேறு அறிவியல், அரசியல் கருத்துக்களின் தாக்கங்களைக் கொண்டிருந்து, மக்களை மய்யப்படுத்தியதாக புதிய இலக்கிய இலக்குகளை நோக்கி, படைப்பிலக்கியம் நகர்ந்த இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் தேவைகளும், கருத்தியல் முரண்களும், காரணங்களும் இலக்கியத்தின் மய்யவாதத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

அறிவியலுக்கு ஒவ்வாத மரபார்ந்தப் பிற்போக்குக் கருத்தியல், அடித்தளங்களின் மீது கட்டமைக்கப்பட்டு, மக்கள் வாழ்க்கையில் நிலைத்தத் தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் காரணிகளை அடையாளங் காட்டி, ஆய்ந்தறிந்துத் தீர்வுகளை முன்மொழிகிறத் தன்மையில் கவிதை இலக்கியத்தளம் பயணித்திருக்கிறது. சுரண்டலுக்கு ஆட்பட்டு வாழ்வுரிமை இழந்த உழைக்கும் மக்கள் இருபதாம் நூற்றாண்டில் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் வீரியமிக்க கருத்தியல்சார் மொழிப் புலத்தைப் பெற்றிருக்கின்றனர். காலத்தினை அறிவியல் ரீதியிலான அணுகுமுறைகளின் வாயிலாக முன்னை வரலாற்றோடும் பின்னை நோக்குகளோடும் பதியச் செய்து இயங்குகின்ற நவீனக் கவிதை மரபின் உள்ளடக்கத்தினுள் தமிழ்ச்சமூகம் காட்சிப்படுகிறது. காலந்தோறும் கவிதை காட்டும் சமூக மதிப்பீடுகளைக் கவனத்தில் கொள்வதும், கவிதையின் பரிணாமங்களின் வழியாகச் சமூக இயக்கத்தின் பல்வேறு நுண்ணியத் தன்மைகளையும் ஆய்ந்தறிவதன் வாயிலாக ஒரு மக்கட்குழுவின் பொதுவானக் கட்டமைப்பின் தன்மை மற்றும் தேவைகளைப் புரிந்துகொள்ள முடியும். அவ்வாறான முயற்சியாக மக்கள்கவிஞர் இன்குலாப் எனும் படைப்பாளுமையின் மொழிவழியாக இருபதாம் நூற்றாண்டின் சமூகத்தை அறியும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

### கருத்தியல் இயக்கமான இருபதின் இலக்கியங்கள்

உலக வரலாற்றில் முக்கியத் தாக்குரவுகளை ஏற்படுத்திய இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தனியுடைமைக் காலனிய வல்லாதிக்கத்திலிருந்து மீண்ட பின்னர், இந்தியச் சிந்தனை வெளி மரபார்ந்த புராணக் கட்டுகளினின்று அறிவியல் கல்வியால் நீங்கத்தலைப்பட்டது. குறிப்பாக, தமிழ் இலக்கியவெளி முற்போக்குக் கருத்தியல்சார் சிந்தனை மட்டங்களில் பயணித்தது. உலகமயத்திற்கு ஆட்பட்ட பொருளாதாரக் கொள்கைகளால் வாழ்வாதாரத் தீர்மானக் கூறுகளான அரசியல், சமூகம், மொழி மற்றும் பண்பாட்டு நிலைகளிலும் குறிப்பிடத்தக்க நேர்மறை – எதிர்மறை விளைவுகளை நிகழ்த்திய இருபதாம் நூற்றாண்டுக் கால வெளியில், தனியுடைமையையும் அறிவுக்கு ஒவ்வாத முன்னை மரபுகளையும் மறுத்த அறிவியக்கங்களான மார்க்சிய, பெரியாரியச் சிந்தனைகளை உள்வாங்கியவாறு இயக்கம் கண்ட உழைக்கும் மக்களின் கருத்தியல்

ஓர்மையையும், முதலாளியச் சமூகத்தின் ஆதிக்க மய்யங்களுக்கு எதிரான எதிரெழுச்சியையும் தமிழ்ச் சமூகம் கண்டது. இலக்கிய நிலையிலும், கருத்தியல் நிலையிலும் கேள்விகளோடும் தீர்வுகளோடும் இயக்கங்கள் தலையெடுத்த இருபதாம் நூற்றாண்டின் கவிதைமொழி இயக்கம் பெறுகின்றப் பாங்கினை உற்று நோக்குகையில் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்று, பொருளிய அடிமைத்தனங்களுக்கானக் காரணங்களை அறிதலோடு, தமிழ்ச் சமூகம் கொண்டிருந்த நிலைப்பாடுகளை விரிவாகவும் நுட்பமாகவும் அறியமுடிகிறது.

**இருபதாம் நூற்றாண்டில் கருத்தியல் இயக்கங்கள்**

காலனிய ஆதிக்கத்திலிருந்து போராடி விடுபட்ட உழைக்கும் மக்கள், விடுதலைக்குப் பிந்தைய பாராளுமன்ற மக்களாட்சி உருவாக்கத்தின் போது மீண்டும் இந்தியாவின் புராணமயப்பட்ட சாதியப்படிநிலைச் சமூகமாகி இருந்தநிலையில் நிலவுடைமையாளர்களிடம் இருந்து விடுபட வேண்டிய கட்டாயத்திலேயே இருந்தனர். சாதிய, வர்க்க அடிமைத்தனக் கட்டமைப்புகளுக்குள் இயங்கும் படிநிலைச் சமூக அமைப்பைச் சீர்படுத்தும் நோக்குடன் பல்வேறு மாற்றுக் கருத்துருக்கள் காலனியத்திலேயேக் கருக்கொண்டு விட்டன.



என்றாலும் உழைக்கும் மக்களின் விடுதலைக் கருத்தியல்கள் வீரியத்துடன் இலக்கியமயப்பட்டது, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் எனலாம். குறிப்பாக, இரஷ்யப்புரட்சி (1907) வெற்றிக்குப்பின் உலகளாவியப் பொருளியச் சமநிலைக்கு வழிகோலும் காரல்மார்க்சின் பொருளியச் சிந்தனையுடன் இந்தியாவில் இயக்கங்கண்ட பொதுவுடைமைக் கருத்தியலும், மரபார்ந்தச் சாதியக் கட்டமைப்பின் இழிநிலைகளுக்கானக் காரணங்களைக் கண்டறிந்து களைவதோடு இழப்பீடுகளைப் பெறப்போராடிய தலித்தியச் சிந்தனையும், சமூகத்தின் ஆதிக்க வேர்களைப் பாதுகாத்து, கிளைபரப்பி நின்ற சமயக் கட்டுமானங்களின் மீது வலுவான எதிரியக்கம் கண்ட பெரியாரின் பிராமணிய மேலாதிக்கப் படிநிலையாக்கத்திற்கு எதிரான திராவிடச் சிந்தனையும் வலுவாகக் களம்கண்டன. மார்க்சியப் பொதுவுடைமைக் கருத்தியலோடு இந்தியாவில் இயக்கங்கண்ட பொதுவுடைமைக் கட்சியும், வலதுசாரி பிராமணியக் கருத்தியலோடு இராஷ்டிரிய சுயம்சேவக்சங்கமும் இயக்கங்கண்ட 1925–ஆம் ஆண்டு இந்தியக் கருத்தியல் தளத்தில் முக்கியமானதாகும். எழுபதுகளுக்குப் பின் முதலாளிய நாடுகளிடையேயானச் சந்தைப் பிடிப்புப் போட்டிகளால் ஏற்பட்டப் பொருளியக் குழப்பங்களும், இந்தியாவின் உலகமய ஒப்பந்தங்களும் இந்தியாவின் அனைத்துப் பொருளாதார மட்டங்களிலும் கடும் தாக்கங்களை ஏற்படுத்தின. முதலாளியத்தின் காலனியக் கொடுமைகளை முன்பே உணர்ந்திருந்ததாலும், மரபார்ந்த உள்நாட்டுப் புராணப் படிநிலைச் சமூகக் கட்டமைப்பினால் அடிமைத்தனங்களின் வடிவங்களை நன்கு உணர்ந்திருந்ததாலும் அசமத்துவத்தை எதிர்த்து இந்தியா முழுக்க நிகழ்ந்த எதிரெழுச்சியால் பிராந்தியக் கட்சிகளின் தோற்றங்களும் நிகழ்ந்தன. தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் பெரியாரின் திராவிடச் சிந்தனை, அண்ணாதுரை தலைமையில் அரசியல் அதிகாரத்தை நோக்கித் தலைப்பட்டு, சமத்துவச் சமுதாயத்துக்கான முன்னெடுப்பாகச் சமூகநீதிக் கருத்தியலுடன் மக்களை அரசியல்படுத்தியது. இடது, சனநாயக முற்போக்குக் கருத்தியல்கள் மக்களை அணிதிரட்டி வகுப்புவாரி பிரதிநிதித்துவம், இடஒதுக்கீடு, சமயச்சார்பின்மை, பன்முகப் பண்பாட்டு ஓர்மைப்பாடு என மக்களாட்சியின் மாண்புகள் முன்னெடுக்கப்பட்டாலும் மரபார்ந்த, பழமைவாதச் சிந்தனையுடன்

சாதிய, சமயமேலாதிக்கத்தின் வழியாகப் பொருளிய மேலாதிக்கத்தை நிலைப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து வந்தன. அதிகாரத்தின் உயர்மட்டங்களில் தம்மை நிலைநிறுத்திக் கொண்ட பிராமணிய முதலாளியக்கூறுகள் சனநாயகத்தைத் தங்களுக்குச் சாதமான அமைப்பாக மாற்றியிருந்தன.

## கருத்தியல் சார் தமிழ்க்கவிதை இயக்கத்தளம்

தமிழ்நாட்டில் வர்க்க, பொருளாதார, சமூகச் சமநிலையுடன் சுயமரியாதை வாழ்வை நிலைபெறச் செய்யும் முனைப்புடன் களமாடியக் கருத்தியல்களுக்கு உழைக்கும் மக்களிடம் கிடைத்த பெரும் வரவேற்பும் மக்களின் இயக்கப் பங்கேற்பும் குறைந்தபட்ச அரசதிகாரப் பிரதிநிதித்துவமும் நவீன இலக்கியத்தின் போக்கையும் மாற்றியமைத்தன. இந்திய அரசியல் வெளிக்குள் தனித்த அடையாளங்களுடன் சிறந்திருந்த மக்களினங்களின் சுயாதீனச் சிந்தனைக்கும் கருத்தரசியல் தளங்களே வழி கோலின. ஒற்றைமயத்தை நோக்கிய அரசதிகாரப் போக்கை மக்களாட்சியை நோக்கி மய்யங் கொள்ளச் செய்ததில் இடதுசாரி, தலித்திய, திராவிடக் கருத்தியல் புலத்திற்கு மிகப்பெரியப் பங்குண்டு. என்றாலும், இவ்வியக்கங்கள் அரசியல் ஓர்மையுடன் அணியமாக இயலாமையினாலும் அதிகாரப் பங்கேற்பில் அதிககவனம் கொள்ளாமையினாலும் காங்கிரஸ் பேரியக்கத்தினுள் மய்யங்கொண்டு மறைந்திருந்த ஏகாதிபத்தியச் சார்புடையப் பிற்போக்குப் பிரிவினை மனுவாதக் கருத்துருக்கள் அரசியல் வலுப்பெற்று மக்களாட்சியைத் தமக்கேற்பக் கட்டமைத்த காலகட்டத்தில் முற்போக்குக் கருத்தியல் இயக்கங்களால் இலக்கியங்கள் சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரக் கருவிகளாக மாற்றம் கண்டன.

## இந்தியாவில் முதலாளியம்

இந்தியாவில் முதலாளியம் என்பது சனாதனிய முதலாளியமாகவே அமைந்திருக்கிறது. முதலாளியம் எப்போதும் பொருளிய ஆதிக்க நோக்கில்தான் நடைமுறையில் இயங்குகிறது என்றாலும், இந்தியாவில் சாதியப் படிநிலைச் சமூகமாகப் புராண மத நம்பிக்கைகளோடு இறுகக் கட்டப்பட்டுள்ளது. இந்தியாவின்

சிக்கலான பொருளியல் அசமத்துவம் முதலாளியக் கருத்தியலாருக்கு மட்டுமன்றி பொதுவுடைமை இயக்கக் கருத்தியலாருக்கும் எளிதில் புலப்பட்டிருக்கவில்லை. இந்தியாவின் மரபார்ந்த புராணக் கட்டுமானங்களுக்குள் அசமத்துவக் கூறுகள் பிணைக்கப்பட்டுள்ளன. மக்களின் வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளும் மிக இறுக்கமாகத் திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ளன. சமத்துவத்தை நிகழ்த்திக்காட்ட நாட்டின் பன்முகப் பண்பாட்டுக் கட்டமைப்பினை அறிவதும் காரணிகள் ஒவ்வொன்றையும் தொடர்புப்படுத்தியும் விடுதலைக்கானக் கருத்துருவை அடைவதில் பெருமளவுச் சிக்கல்களையேக் கொண்டுள்ளன. இருபதுக்கு முந்தைய நூற்றாண்டுகளில் எழுந்த சீர்திருத்த இயக்கங்களும் சமூக முரண்களின் வேர்களைத் தொடாமல் கிளைகளையே அசைத்துக் கொண்டிருந்தன. இருபதில் இந்தியாவில் அரசியல்பட்ட பொதுவுடைமைக் கருத்தியல் எளிய உழைக்கும் மக்களிடம் தத்துவக் கருத்தியலோடு உலகளாவியப் பொருளியச் சிக்கல்களை விவாதமாக்கியதோடு அரசியலை மக்களிடம் வேகமாகக் கொண்டு சேர்த்தது. காலங்காலமாக நிலைபெற்றுள்ளக் கட்டமைப்பின்மீது நேரெதிர் உடைவுகளை ஏற்படுத்துவது சுரண்டலுக்கு ஆட்பட்ட மக்களை ஆதிக்கவாதத்திற்கு எதிர் திசையில் நிறுத்தி இருந்தது. எனவே, தீர்க்கமான சமூகப் புரட்சிக்கான மாற்றுச் சிந்தனைகளை மக்கள் விரும்பும் கலையியலின் வழியாக முன்வைக்கிற இயக்கங்கள் ஊக்கம் பெற்றன. இலக்கியங்களில் சமூக விடுதலைக் கருத்தியல்கள் மய்யப் பொருண்மையாயின. இலக்கியங்கள் பிரசார இயக்கங்களாகி சமூகப் பயனுறு தளங்களாயின. இத்தகைய இருபதாம் நூற்றாண்டு இலக்கிய அரசியல் காலச் சூழலைக் கருத்தில் கொண்டு இன்குலாப் கவிதைகளை அணுகுவது மேலதிகப் புரிதல்களுக்கு வழி கோலும்.

## இன்குலாப் எனும் தனிமனிதக் கவிதை இயக்கம்

இருபதாம் நூற்றாண்டின் மக்களை மய்யமிட்ட அரசியலைச் சமூகத்தின் அறிவுத் தளங்களின் விவாதத்திற்கு எடுத்துச் சென்ற சிறப்பு தமிழ்க் கவிதை இலக்கிய வெளிக்கு உண்டு. இடதுசாரி இயக்கங்கள் எளிய உழைக்கும் மக்களிடம் கலைப் புலங்களின் வழியாகக் கருத்தியல் பரப்புரைகள் மேற்கொண்டு வெற்றிகண்டதைத் தொடர்ந்து பல்வேறு முற்போக்குக் கருத்தியலாரும் தலைப்படவே

கலைப்புலம் அரசியல்தன்மை பெற்று எழத்தொடங்கியது. தமிழ் இலக்கிய உலகிற்குச் சமூகப் பதிவு நிலையும் அறிவுசார் மாற்றுச் சிந்தனைப் பரப்புரையும் புதிதல்ல என்றாலும் இருபதாம் நூற்றாண்டின் காலச்சூழல் வீரியமிக்கதும் காலத்தின் கட்டாயமானதுமாகும். அரசியல் இயக்கமாகவும், இலக்கியக் குழுமமாகவும், இதழ்களாகவும் சிறந்த விவாதப் போக்குடன் இலக்கிய உலகு இயங்கியபோது இன்குலாப் எனும் விடுதலை முழக்கத்தைப் பெயராகத் தாங்கி சமூக அவலங்களை வெளிக்கொணர்ந்து, விடுதலைக் கருத்தியலாகத்தான் நம்புகின்ற கருத்தியல்களை வலுவேற்றினார் பாவலர்.

"விரியும் எனது கவிதை வரிகளில்
கரியும் உன் காயங்கள்" (பக்–203)

என சமூகத்தை வாஞ்சையோடுஅணுகி,

"போராட்டம் என் பிறப்பின் நியதி...
வாழ்வின் நியதி... முடிவின் நியதி..." (பக்–186)

என்றவாறு தம் கவிதை நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் இன்குலாப், தம் சமகாலத்திய கவிஞர்களினின்று மாறுபட்டு வெளிப்படுகிறார். தமிழ்ச் சமூகத்தின் தனிநபர் கவிதை இயக்கங்களின் தலைமைப் பாத்திரத்தை இன்குலாப் தமது சமரசமற்ற மக்கள் பாடுநிலைகளாலும், மிகையற்றச் சொல்லாட்சிகளாலும், நடப்பியலைக் காட்சிப்படுத்தும் நேர்மையினாலும் தமதாக்கிக் கொண்டுள்ளதை அறியமுடிகிறது.

"புலம்ப மறுக்கும் குரல்கள் உரிமை கேட்குது...
எழுத்து வடிவம் கொடுக்க நமது குரல்கள் ஒலிக்குது" (பக்–271)
"கவிதையை அலங்காரத் தூசு களங்கப்படுத்தும்" (பக்–327)


என அவலங்களைப் பாடுகையில் அலங்காரத்தின் தன்மைகளைக் குறைத்துக்கொண்டு தம் இலக்கியக் கலையின் நோக்கினை முன்னிறுத்திப் பயணிக்கின்றன இன்குலாப் கவிதைகள்.

"அரவாணியின் குரலாய்... போராளியின் நம்பிக்கையாய்...
தலித்தின் நாக்காய் என் சினத்தீ" (பக்–260)

என, விளிம்புநிலை மக்களின் குரலாய் நின்று சமூகநிலைகளில் மட்டுமன்றி ஒவ்வொரு தனிநபரின் வாழ்க்கையிலும் தாக்கங்களை ஏற்படுத்தவல்ல அரசியலின் தன்மைகளை உடைத்துப் பேசும் இன்குலாப், எல்லா அரசியல், கருத்தியல் நெறிகளுடனும் உழைக்கும் மக்களின் பிரதிநிதியாக வாதிடுகிறார்.

"மானுடம் கூடும் சுவரில்லாத சமவெளிதோறும்
மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்" (பக்–415)

என இன்குலாப்பின் கவிதைகள் விடுதலைக் கருத்தியலின் மய்ய நோக்கமான மானுட மீட்புக்கான இயக்கத்தை மேற்கொள்கின்றன. அறிவியலின் அபரிமிதமானப் பரவலால் முன்னை இலக்கிய ஆக்கியோன்களால் போற்றிக் கொண்டாடப்பட்ட புராணக் கட்டுகள் நகைப்புக்குள்ளாக்கிய இருபதாம் நூற்றாண்டின் அறிவியக்கத்தை சமூக மதிப்பீட்டுக் காரணிகளுடன் தொடர்புபடுத்தி ஆராயுந்தன்மையதாய் இன்குலாப்பின் கவிதை இயக்கம் காண்கிறது. இடதுசாரிக் கருத்தியலுடன் போராட்ட அரசியலுக்கு உழைக்கும் மக்கள் தலைப்பட்டு வக்கப் புரிதலோடு ஒரு புள்ளியில் மய்யங்கொள்ள வேண்டியத் தேவை, இன்குலாப்பின் கவிதை முழுக்க விரவிக்கிடக்கிறது.




**இன்குலாப்பின் சனநாயக எதிர்க்கருத்தியக்கம்**

காலனிய விடுவிப்புக்குப் பின் மக்களாட்சி நிலைப்பட்டு உழைக்கும் மக்களின் வாழ்வில் ஒளியேறும் என பாமர்கள் நம்பிக் களைத்துப்போன இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் எழுத்துலகில் பயணப்படுகிறார் இன்குலாப். காலனியத்தின் வர்க்கச் சுரண்டல்கள், பண்பாட்டு அடக்குமுறைகள், வாழ்வுரிமை மறுப்பு என கனத்த இழப்புகளுக்குப் பின் இந்தியா எனும் கூட்டாட்சித் தத்துவ ஏற்புடன் பயணப்பட்ட உழைக்கும் மக்களின் வாழ்நிலை காலனியத்தைவிட கேடான சனாதன முதலாளியக் கட்டமைப்புக்குள் சிக்குண்டிருப்பதை மய்யமிட்டு இயக்கங்கொள்கிறது இன்குலாப்பின் கவிதைத்தளம். 1970களில் பொருளியச் சமநிலையேத் தீர்வாகும் எனப் பயணப்பட்ட இன்குலாப்பின் கவிதைக் கருத்தியக்கம், சனாதனப் படிநிலைச் சமூகத்தில் ஆதிக்குடிகள் தம் விடுதலையைப்பெற பொருளியச் சமநிலைக்குத் தடையாக இருக்கும் காரணிகளைக் கண்ணுற்று சுயமரியாதை திராவிடக் கருத்தியலுடனும்

தமிழ்த்தேசியக் கருத்தியலுடனும் தலித்தியக் கருத்தியலுடனும் ஒத்திசைகின்ற தன்மையும் காணக்கிடைக்கிறது. தமிழ்ச் சமூகத்தின் படிநிலையாக்க இழிவுகளுக்கான காரணங்களாவன, பொருளியச் சுரண்டலைப் பின்புலமாகக்கொண்டு, பிராமணிய மேலாதிக்கத்தை நடைமுறையாக்கி, மதநம்பிக்கைகளோடு இறுகக் கட்டப்பட்ட சனாதனம் என்பதைக் கண்டுகொண்ட இன்குலாப் கவிதையின் இயக்கத்தன்மையைப் பிராமணியத்தை நோக்கித் திருப்புகின்றமையை இன்குலாப் கவிதைகளின் அடிக்குறிப்புகள் உணர்த்தி நிற்கின்றன. கவிதைகளின் மய்யப் பொருண்மையின் தன்மையை ஒட்டி இன்குலாப்பின் கவிதைத் தளத்தை இருநிலைகளில் அடையாளம் குறிக்கலாம்.

**1.மறுப்பியக்கம் 2.எதிரியக்கம்**

என்ற வகைமைவழி இன்குலாப்பின் மொழிதலைக் கண்ணுறுகையில் கிடைக்கின்றத் தமிழ்ச் சமூகத்தின் காட்சி, காலத்தின் பலபட்டத்தன்மைகளையும் தேவைகளையும் இலக்குகளையும் தெளிவுபடுத்துகின்றன.

**மறுப்பியக்கங்கள்**

சமூகத்தில் மாற்றங்கள் இயல்பானவை. அவற்றைத் தடுத்திட இயலாது. முதலாளியச் சமூகத்தில் உழைக்கும் மக்களுக்கான சமூக மாற்றத்தை, வளர்ச்சியினைச் சாத்தியப்படுத்தும் செயல்பாட்டின் முதல்படியாவது அமைப்பை ஏற்கமறுத்தல் எனும் எதிர்நிலையே வரலாற்றின் இயங்கியல்தன்மையை உற்றுநோக்கும் யாரும் ஒப்புகின்ற உண்மையாகும். இந்திய விடுதலைக்குப் பிந்தைய மக்களாட்சி முன்னெடுப்புகளின் மீது கனத்த நம்பிக்கைகளோடு காத்திருந்து ஏமாற்றம் கண்டவர்களான, சமூக, பொருளாதார நிலைகளில் வஞ்சிக்கப்பட்ட உழைக்கும் மக்களின் பக்கம் நின்று அவலங்களைக் கண்ணுறும் இன்குலாப், சமகால அனுபவங்களின் ஊடாக 1950–ல் உருக்கொண்ட இந்தியதேசிய அரசமைப்பின் மீதான நம்பிக்கை இழக்கிறார். வஞ்சிக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்கான சமத்துவச் சமுதாயத்தின் தேவையை உணர்ந்து உணர்த்த விழைகிறார். கவிதைக் கலைக்குப் போர்க்கலை வடிவம் கொடுத்து விடுதலைச் சிந்தையோடு சமகால அமைப்பினை வலுவாக மறுக்கிறார். மறுப்பின் தன்மைக்குள்ளான ஒவ்வொன்றையும்

காரணங்களுடனும் தீர்வுகளுடனும் அவலக்காட்சிகளாக முன்வைத்து வாதிடுகிறார்.

**சனாதனிய முதலாளிய மறுப்பியக்கம்**

காலனிய ஆதிக்கத்தின் தனியுடைமைக் கொள்கைகளின் மூலத்தை நோக்கி வாசகனைக் கவனப்படுத்துகிற இன்குலாப்,

“வெள்ளை மாளிகை...

மண்ணின் மைந்தர்களின் மண்டை ஓடுகளில்...

பற்றி எரிந்த பாலஸ்தீனக் கூடாரங்களில்...

தென்னாப்பிரிக்கச் சிறைகளில்...

ஹிரோசிமாவில்... நாகசாகியில்...

ஒரு கையில் டாலரும்... மறுகையில் துப்பாக்கியுடன்...

வலம் வந்த வழியெல்லாம் விபசார விடுதி...

கரை தாண்டி உன்காமம்"

என எல்லையின்றி அடிமைத்தனக் காலனிய வல்லாதிக்க அரசுகளின் வரலாற்றைக் காட்சிக்குத் தந்து முதலாளியத் தனியுடைமை அபாயங்களை முன்வைக்கிறார்.

“மானுடம் பிளந்து உறிஞ்சும் வாய்"

“வெள்ளை மாளிகை விரிசலிலிருந்து...

செவ்விந்தியஅம்பும்... ஆப்பிரிக்கக் கருங்கைகளும்...

வியட்நாமின் செங்கொடியும் முளைக்கும்"

என, விடுதலைக்கான கனவு இந்திய சனநாயக அரசமைப்புடன் முற்றுப்பெறவில்லை என்பதும், அமெரிக்க, ஐரோப்பியக் காலனிய அடிமைத்தனங்களை எதிர்த்து இந்தியத்தேசிய உணவூட்டப் பெற்றுக் களம்கண்ட உழைக்கும் மக்களால் இந்திய விடுதலை சாத்தியப்பட்டிருக்க, விடுதலைக் களமாடிகளின் வாரிசுகள் அரசியல் வலுவிழந்து பழமைக் கட்டுகளுக்குள், நிலவுடமைச் சமூகத்தின் பிற்போக்குகளுக்குள் பாராளுமன்ற மக்களாட்சிச் சட்டங்களின் மூலமாகவே அடைக்கப்படுவதைக் காலமறிந்து காட்சிப்படுத்தியுள்ள இன்குலாப் கவிதைகள்,

“ஜெயஹே.! என

ஏகாதிபத்தியத்தின் குறட்டை ஒலியாய் ஒலிக்கும்"

“மானம் இழந்து மண்டியிட்டால் சனநாயகம்"

எனக்கேலிக் கூத்தாகும் ஏகாதிபத்தியத்திற்குத் துணைபோகும் சனநாயக இந்தியாவைக் காட்சிக்குத் தருகின்றன. பொருளியச் சுரண்டலுக்கானப் பன்னாட்டுச் சந்தைகளை வலுப்படுத்த இந்தியாவின் மரபார்ந்த அடிமைத் தனங்களுக்கு வழிவிட்டு நின்ற முதலாளியச் சதிவலைகளை முன்னுணர்ந்து காட்சிக்குத் தந்தமை கவனத்துக்குரியது. நடப்பின் மறுப்புக்கானக் காரணிகளை உலக அரசியலிலிருந்து உள்ளது. அரசியல்வரை காட்சிக்குத் தந்து விவாதிக்கின்றன இன்குலாப்பின் கவிதைகள். ஏகாதிபத்தியத்தின் உலகளாவியச் சுரண்டல் வெறிக்கு நிலைக்களனான காலனியத்தின் அடுத்த நகர்வாகவே இந்திய விடுதலைக்குப் பின்னான ஒப்பந்தங்களையும் விளைவுகளையும் இவை குறிக்கின்றன.

> "கழனிகள் உவர்மண்ணாய் களவு போகும்..."
> "அயலாதிக்கத்துக்கு மூவண்ணக் கொடியே பாதுகாப்பாக..!"
> "ரவுலட் சட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும்"
> "உலோக மரத்தில் வேரின்றிப் பரவும்
> "பிளாஸ்டிக் கொடியில் மணமில்லா மூவண்ணங்கள்"

என முன்வைத்துப் பேசுகின்றன. இன்குலாப்பின் வரிகள். அறிவினுக்கு ஒவ்வாத புராணக்கட்டுகளே அனைத்துப் பிற்போக்குத் தனங்களுக்கும் அடிப்படையாய் விளங்குவதைக் கண்டுகொண்டு அறிவியல் ரீதியிலானச் சமூகநீதிப் பார்வையுடன் மறுப்புச் சிந்தனையைக் காட்சிப்படுத்துகின்றன இன்குலாப் மொழிதல்கள்.

**தமிழ்ச் சமூக எதிர்க்கருத்தியங்கு நிலைகள்**

படிநிலைச் சமூக அமைப்புக்குள் கட்டுண்ட தமிழ்ச் சமூகத்தின் நிலையினைக் கவிதைக் காட்சிகள் அப்படியே வெளிப்படுத்துகின்றன. இந்தியத் தேசியத்துள் கொண்ட உடன்பாட்டினால் உலகளாவிய மானுட நேயக் கூட்டுறவு நோக்குடன் இலங்கிய தனித்த மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களைத் தொலைத்து நிற்கும் தமிழ்ச் சமூகத்தின் காட்சி இன்குலாப் கவிதைகளில் வெளிச்சத்துக்கு வருகின்றன. மனுவாத இந்தியச் சமூகத்துக்குள் மதியிழந்த தமிழ்ச் சமூகத்தின் பிராமணீய மனுவாதக் கோட்பாடுகளால் புராணகால மரபுகளுக்கும் பிறப்பின் அடிப்படையிலான அடிமைத்தனங்களுக்கு மறுமலர்ச்சி தரும் நடைமுறைகளால் பாதிப்புக்குள்ளான வெகுமக்களைக் காட்சிப்படுத்துகையில் இன்குலாப்பின் மறுப்பில் சினம் தெறிக்கிறது. நந்தனார் எரிப்பு என புராண வரலாற்றையும்,

அறிவியல் யுகத்தில் திண்ணியத்தில் நிகழ்ந்த மலந்திணிப்பு, கீழவெண்மணி எரிப்பு, பாப்பாப்பட்டியின் அரசியல் சனநாயக உரிமை மறுப்பு, தமிழ்ச்சமூகத்தின் சாதிய மனோநிலையும் குறுங்குழுவாதங்களும் மனுவாதச்சார்பு பெற்றிருத்தலைச் சுட்டிக்காட்டிக் காத்திரமாக அரசமைப்பினை முற்றிலும் மறுத்துரைக்கிறார்.

**சமய மறுப்பியக்கம்**

சாதிய இழிவுகளின் சமூக நிறுவனமாக சமயங்கள் தனது மூர்க்கத்தனமான நியமனங்களால் நவீனத்தின் அறிவியல் அடிப்படைகளை ஏற்காமல் முன்னை அடிமைத்தனங்களுக்கும் வாழ்வுரிமைத் தடைகளுக்கும் அரண் செய்வதோடு சாதிய, பொருளியச் சுரண்டலின் வேர்களைப் பாதுகாக்கின்ற தன்மையைக் காட்சிப்படுத்தி சமயமறுப்பினை முன்னெடுக்கின்றன பாவலரின் வரிகள். இத்தகைய சமயப் பிரிவினைகளில் சாதியம் மாத்திரம் நிராகரிப்பின்றி ஏற்கப்பட்ட இயங்குத் தளத்தினைக் குறித்த எதிர்க்கருத்தியலை வடிவமைத்த பெரியாரின் சிந்தனைகள் இன்குலாப்பின் கவிதைகளின் மய்யங்கொண்டு இயங்குகின்றன. கிறித்தவ, இசுலாமியரல்லாத பெரும்பான்மையான கடவுள் நம்பிகைகளை இந்து என ஒற்றை மயப்படுத்தியப் பின்னணியில் வர்க்கமாக உழைக்கும் மக்கள் அணிதிரள்வதைச் சிதைக்கும் முயற்சியாகவேப் பார்க்கும் இன்குலாப்,

“மதம் வேண்டாம் – நல்ல மனம்தான் வேண்டும்"
“வானரப் படையாய் இலங்கையில் மடிந்தாய்,
வரலாறு நெடுக உன்னை இழந்தாய்"

என மதவாத அரசியலில் தமிழ்ச் சமூகநிலையைக் கடிகிறார். நிலவுடைமைச் சமுதாயக் கழிவுகளான சாதியக் கட்டமைப்பை வலுப்பெறச் செய்யவதன் வாயிலாக பொருளிய அடிமைத்தனங்களை நிலைநிறுத்திக்கொள்ள முயற்சிக்கும் ஆதிக்கச் சக்திகளின் செயற்களனாக மாறிப்போன இந்தியத் தேசியத்தின் சாத்திரச் சழக்குகளில் தன்னிலையிழந்து நிறம்மாறும் தமிழ்ச் சமூகத்துக்கு முன் வரலாற்றை நினைவுறுத்தி அமைப்பை மறுக்கின்றன இன்குலாப்பின் வரிகள்.

“மதங்களின் வடிவில் மரபின் அழுத்தத்தில்
சட்டங்களின் அச்சுறுத்தலில் ஆதிக்கங்கள்..."

என மதங்களே சட்டங்களாகி ஆதிக்கங்களின் புகலிடமாக இயங்குவதைக் காட்சிப்படுத்தி நிற்கிறார். பிராமணியம் காலனியாதிக்கத்தில் பலப்பல காரணங்களைக் காட்டி, யாரையெல்லாம் பொது எதிரிகளாகக் காட்சிப்படுத்தி, உழைக்கும் மக்களை அணிதிரட்டி முன்களத்தில் போரிடச் செய்ததோ, அதே ஏகாதிபத்திய வழித்தோன்றல்களுக்குப் பாதையமைத்து உழைக்கும் மக்களைச் சுரண்டும் உரிமையளிக்கும் ஒப்பந்ததார இந்தியத் தேசியத்தை அம்பலப்படுத்தி உறுதியாக மறுக்கின்றன இன்குலாப்பின் அனல் வரிகள்.

**இன்குலாப் கவிதையில் விடுதலைக் கருத்தியல்கள்**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூகத்தின் இயக்கங்களின் தன்மை இன்குலாப் கவிதைவழி எளிதுணரத்தக்கதாகிறது. கழிவிரக்க மனோநிலையினின்று நீங்கி எழுச்சிமிகு எதிர்ப்பியக்கத்தின் வாயிலாகத் தமிழ்ச்சமூகம் அடைந்திருக்கும் கருத்தியல்சார் அரசியல் தளங்கள் கவனத்துக்குரியன. அவ்வாறு நோக்கினால் மறுத்தும் கலகம் செய்தும் ஆதிக்கப் படிநிலைச் சமூகக்கட்டமைப்பைக் கலைத்துப் புனரமைத்திடும் நோக்குடன் களமாடிய இயக்கங்களைக் காட்சிப்படுத்திநிற்கின்றன இன்குலாப் கவிதைகள்.

**பெரியாரிய விடுதலைக் கருத்தியல்**

தமிழ்ச் சமூகத்தின் சாதிய இழிவுகளுக்குக் காரணமான யாதொன்றையும் சமரசமின்றி எதிர்த்த எதிர்ப்பியக்கமே பெரியாரியம். பெரியாரியக் கருத்தியல் கடவுள் முதலான எல்லா அடிப்படைக் கட்டுமானங்களையும் புனிதங்களையும் கேள்விக்கு உட்படுத்தி அறிவின் சார்புகொண்டு அம்பலப்படுத்தியது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ச்சமூகம் கண்ட மாபெரும் எழுச்சியான பெரியாரிய இயக்கத்தின் தன்மைகளை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக்கொண்டு விடுதலைக் கருத்தியலாக முன்மொழிவதோடு, முற்போக்கு இயக்கங்கள் பெரியாரியச் சிந்தனைகளின்பால் ஓர்மைப்பட வேண்டியத் தேவையையும் அறைகூவலையும் முன்வைக்கின்றன இன்குலாப்பின் கவிதைகள்.

> "நால்வருணம் மனிதரைப் பிரிக்கும் – எம்
> பெரியாரியம் கறையை வெளுக்கும்"

இந்தியச் சமூகத்தின் பொருளிய அடிமைத் தனங்களுக்குப் பின்னணியில் மனுவாதச் சாதியக் கட்டமைப்பும் அதனைப் பாதுகாக்கும் பிராமணியச் சமயக் கட்டமைப்பும் இயங்குவதை நுட்பமாகக் கண்டறிந்த பெரியார், இந்தியாவில் நிலவுவது சனாதனிய முதலாளியம் என்பதை முன்குறித்துக் களம்கண்டார். பெரியாரின் கருத்தியலுடன் சற்றும் முரண்படாமல் ஒத்திசைந்து பயணிக்கிற இன்குலாப் திராவிடக் கருத்தியலின் அதிகார நிலையைக் கடுமையாக விமர்சித்தும் நிற்கிறார்.



**மார்க்சிய விடுதலைக் கருத்தியல்**

மார்க்சின் தத்துவங்களை வியந்தோதும் இன்குலாப், உலகளாவிய மானுட ஒன்று கூட்டலுக்கானத் தீர்வாக மார்க்சியக் கருத்தியலை முன்னிறுத்துகிறார். தமிழ்ச் சமூகத்தில் மார்க்சிய இயக்கங்களின் களப்பணிகளிலும் களமாடிய இன்குலாப், தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கப் பொருளியச் சிந்தனையிலான வர்க்க ஒருங்கிணைப்பின் அவசியத்தை உணர்த்துகிறார்.


"நெருப்பாற்றில் நீந்தக்கற்ற ஒவ்வொரு கம்யூனிஸ்டும்...
வர்க்கச் சுரண்டலுக்கு மவுன சாட்சியாகமாட்டான்...
செங்கொடி முகமூடியாக அவனது கைகள் அனுமதியாது"

எனவும்,

"களத்து மேட்டிலும் பாக்டரியிலும்
வீட்டிலும் தெருவிலும்...
கிடக்கும் தீப்பொறிகளே
வர்க்க நெருப்பாக மூண்டெழுங்கள்"

எனவும் அறைகூவல் விடுக்கும் இன்குலாப் நடப்புகளில் பொதுவுடைமை இயக்கத்தின் போதாமையையும் வீரியமற்றத் தன்மையையும் கண்டு சாடாமலும் இல்லை. முரணற்று இயங்குகிற

எந்தக் கருத்தும் புனிதப்பட்டு கெடுவதே வரலாறு. ஆக, முரண் ஆதலும் விமர்சித்து நெறிப்படுவதும் பொதுவுடைமைக் கருத்தியலின் சிறந்தத் தன்மையாகக் கொள்ளலாம். வியட்நாம் புரட்சி வெற்றியும், மே-தினம் குறித்த வருணிப்புகளிலும், வெண்மணி சாட்சியங்களிலும் இடது இயக்கத்தின் மீதான உறுதியான நம்பிக்கையைப் புலப்படுத்தி நிற்கிறார் இன்குலாப். நிலவுரிமையைக் கோரவும் வேளாண் நிலையை விவாதிக்கவும் சுரண்டலை எதிர்க்கவும் தொழிலாளர் உரிமைகளைப் பெறவும் பொதுவுடைமைக் கருத்தியலைத் தீர்வாக முன்வைத்தே இயங்குகிறது இன்குலாப்பின் கவிதை இயக்கம். தமிழினத்துக்கென தனிநாடு அடைகின்ற ஈழவிடுதலைப்போரை முன்னிறுத்தும்போது,



"ஒடுக்கப்படுகிற உலகமானுடத்தோடு
கண்ணீரையும் எழுத முனைந்தால்...
சங்கடப்படுமோ உன் சரவதேசியம்"

எனக் கடுமையாகச் சாடியுள்ளார். குறிப்பாகப் பொதுவுடைமைக் கருத்தியலாரின் மாறுபட்ட அல்லது குழப்பமான முடிவுகளையும் விமர்சித்து நிற்கிறார்.

**தலித்திய விடுதலைக் கருத்தியல்**

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைகளை மீட்டு அரசியல் அதிகாரமடைதலை இலக்காகக்கொண்ட தலித்தியக் கருத்தியல் இந்திய விடுதலைக் கருத்தியல்களில் முக்கியமானதாகும். இந்தியத் தேசியத்திற்குள் மறுக்கப்பட்ட உரிமைகளைச் சட்ட அமைப்புக்குள்ளாகவேப் பெறப்போராடி சாதி, மத, இன, மொழி பிரிவினைகளால் பாதிப்பட்ட விளிம்புநிலை மக்களின் துணை நிற்கும் கருத்தியக்கமாக தலித்தியத்தைக் காட்சிப்படுத்துகிறார் பாவலர்.

"கூடுகளில் புதிய சிறகுகள் முளைக்கின்றன...
மனுநூல் எம்மை அடிமைப்படுத்தும்
அம்பேத்கரியம் எம்மை விடுதலை செய்யும்"


என உறுதியாகக் கட்டியங்கூறும் தலித்திய விடுதலைக் கருத்தியல் மீதான நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. உழைக்கும் மக்களான ஒடுக்கப்பட்ட தொல்குடிமக்கள் அணியமாதலும் அதிகாரமடைதலுக்குமானத் தேவையைத் தலித்தியக் கருத்தியல் தளத்திலிருந்தே இன்குலாப் முன்வைக்கிறார்.



**பெண்ணிய விடுதலைக் கருத்தியல்**

மனித சமூகத்திலேயே ஒடுக்கப்பட்ட இனங்களில் பெண்களின் நிலை மாறுபட்டத்தன்மைகளைக் கொண்டது. எல்லா நிலைகளிலும் கீழ்ப்பட்டு உலகின் அனைத்து வகையிலான அடக்கு முறைகளுக்கும் ஆட்பட்ட, ஆட்படுகிற பெண்களின் நிலை குறித்த மாற்றுச் சிந்தனை தமிழ்ச் சமூகத்தில் வீரியமாக இயக்கம் கண்டிருந்தாலும் சாதிய, மத, கலாச்சாரக் கட்டுகளை உடைத்து, பெண் மீட்சி காண்பதில் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்து வருகின்றன.

"சமையல் அறையில் மண்டும் புகையில்
சபம்பிய வேர்வை மலர்க்குலமோ...
எத்தனைக் காலம் இக்கூண்டுக்குள்ளே...
வளைக்கரங்கள் இனி ஆயுதக்கரங்கள் ஆகட்டும்"



என்று பெண்விடுதலைக்கானச் சிக்கல்களை எதிர்கொள்ள பெண்களே முன்னின்று களமாடவேண்டும் என்றும், தமக்கான விடுதலையைத்தாமே தீர்மானிக்கக் களமாடிட வலியுறுத்துகின்றன இன்குலாப் கவிதைகள்.

**பிராமணிய எதிர்ப்பின் திராவிடக் கருத்தியல்**

பொருளிய ஆதிக்கமனோநிலையுடன் பார்ப்பனியக் கூட்டமைப்பாகவே மாறிப்போன காங்கிரஸ் இயக்கத்தினின்று நீங்கி, எதிரெழுச்சியாக களம்கண்ட பெரியாரின்

ஆரிய எதிர்க்கருத்தியலே திராவிடம். பெரியாரின் சமூகநீதி இயக்கச் சிந்தனைகளுக்கு அரசியல் அதிகாரமடைந்து செயல்வடிவம் தரும்முகமாக அண்ணாத்துரை தலைமையில் தேர்தல் அரசியல் களப்பட்ட இயக்கம் தன் நோக்கத்தினின்று மாறுபட்டு சாதிய வாக்கரசியல் மயப்பட்டும், முகத்துதி விளம்பர அரசியலுக்கு ஆட்பட்டும் இயங்கிய போது,

"மனக் குகையில் எழுந்த சிறுத்தை
சிறைவைக்கப்பட்டது"

என்றும்,

"உயர்த்தப்பட்ட கறுமை
நய வஞ்சகத்தின் திரையாகிவிட்டது"

எனவும், கடுமையான விமர்சனங்களை அடுக்குகிறார். கீழவெண்மணி நிகழ்வுக்குப் பின்னும் ஈழப்போரின் தோல்விக்குப் பின்னும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்முறைகளை எதிர்த்தியங்கியமையும் குறிப்பிடத்தக்கன. தான் நம்பிய விடுதலைக் கருத்தொன்று தன் நோக்கத்தினின்று விலகியும், கருத்தியல் தளத்திலிருந்து நீர்த்தும்போனபோது கடுமொழிகளால் கழுவேற்றிய சமரசமின்மை இன்குலாப் கவிதையின் தனித்துவமாகும்.

**தமிழ்த்தேசிய விடுதலைக் கருத்தியல்**

தமிழீழம் கோரிப் போராடிய தமிழர்களின் குரலுக்கு வாழ்நாள் முழுக்க வலுவேற்றிக் கொண்டேயிருந்த இன்குலாப்,

"தன்னினம் காக்க நஞ்சுதறிக்கும்
காந்தளம் பூக்களே
தமிழீழத்தின் தேசியப் பூக்களாய்..."

என விடுதலைக் கனவினை வியந்துப் போற்றிக்கொண்டே தமது கவிதையின் இயக்கத்தை அமைத்திருக்கிறார். ஈழப்போரின் இறுதிக்கட்டங்களில் இன்குலாப்பின் கவிதை அங்கலாய்த்துப் புலம்பு தலையும் காணமுடிகிறது.

**இன்குலாப் கருத்துப் புலப்பாட்டு உத்திகள்**

**கவனப்படுத்தும் கூவல்**

இன்குலாப் கவிதைக்கலையை ஒரு மக்கள் பிரச்சார இயக்கமாகக் கையாள்கிறார். உழைக்கும் மக்களின் குரலாகவும், சமூக, பொருளிய,

சமத்துவ மானுட மீட்சியின் முன்னெடுப்பிற்கானப் பொதுத்தளத்தினை உருவாக்க பரப்புரை செய்கிறார். மக்களின் இழிவுகளுக்கானக் காரணங்களைக் காட்சிப்படுத்தி, மறுகட்டமைப்புக்கு வழிதிறக்கும் வகையாக வெகுமக்களை சமூக அவலங்களின் மீது கவனப்படுத்துகிறார். மாற்றத்திற்கான முன்மொழிதலைக் கவிதைவழி நிகழ்த்துகிறார்.

## நடப்பனுபவக்காட்சி ஆக்கம்

அனுபவத்தின் ஊடாக, நடப்புகளிலிருந்தே கருக்கொள்ளும் இன்குலாப் பின் கவிதைகள் நடப்புகளை உள்ளது உள்ள படிக்காட்சிப்படுத்தத் தலைப்பட்டுள்ளன. சமூக அவலங்களைக் காட்சிப்படுத்துகையில் கலையின் நோக்கங்களைக் கருத்தில் கொண்டு மிகையற்றக் காட்சிப்படுத்தங்களால் வாசகனைக் கருத்தோடு ஒன்றி நிற்கிறத்தன்மையினை ஏற்படுத்தி வாதத்திற்கு வலு கூட்டிக்கொள்கிறார் இன்குலாப்.

## சாடலும் கலகமும்

சமூக மாற்றத்திற்கான முதற்காரணமாகிய நடப்பின் அநீதிப் போக்கினைக் காட்சிக்குத்தரும் இன்குலாப், அநீதியான சமமற்றச் சூழலை விவரித்துச் சினந்துச் சாடுகிறார். களத்தின் நடப்புகளுடன் ஒன்றித்தச் சிந்தனைக்கும் செயலுக்கும் வழிநடத்தும் இன்குலாப் பின்மொழிதல் நுட்பம் வாசகனைப் புரிதலுக்கு உட்படுத்தி மாற்றத்துக்கு முன்னான கலகநிலைக்குள் செலுத்துமாறு இயக்கம் பெறுகிறது.

## சிதைப்பும் புனரமைப்பும்

நீதியற்ற சமூக நடப்பியலின் கூரிய அவதானிப்பிலிருந்து கலக மனநிலையை எட்டும் வாசகன் இயல்பாகவே தீர்வைப் பற்றியச் சிந்தனைகளுக்குத் தலைப்படுவான். முன்னை அமைப்புக்குள்ளிருந்து மாற்றம் சாத்தியமில்லை என்பதை உணர விட்டு கலைப்பு மற்றும் மீள் கட்டுமானத்திற்கான நியாயங்களையும் வாய்ப்புகளையும் பொதுவுடைமைச்சார்பு நிலையினின்று முன்வைக்கிறது இன்குலாப்பின் கவிதை இயக்கம். இன்குலாப்பின் தனிமனித கவிதை இயக்கம் மக்களை மய்யமிட்டதாக அமைந்திருக்கிறது. மக்களின் அடிமைத் தனங்களுக்கான தீர்வுகளைத் தேடும் முயற்சியாகவே

கவிதை இயக்கம் கண்டுள்ளது. உழைக்கும் மக்களின் விடுதலை ஒன்றே இலக்காகக் கொண்டிருந்த இன்குலாப், எழுத்துலகத் தொடக்கத்தில் மார்க்சியக் கருத்தியேலோடும், பின்னர் பெரியாரியக் கருத்தியலோடும், தலித்தியக் கருத்தியலோடும் பயணிக்கின்றமையைக் காணமுடிகிறது. சமகால நடப்புகளிலிருந்து வரலாற்றையும், மாற்றத்திற்கானத் தேவையையும் நோக்கக் கூறாக்கி செயல்படுகிற இன்குலாப், தமது நோக்கத்திற்கு அதிக முக்கியமானதாகக் கருதுகிற முற்போக்குக் கருத்தியல்களைச் சார்ந்தியங்கியமைப் புலனாகிறது. தமிழ் இலக்கிய வெளிக்கு அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் எடுத்தோது நிலையிலும் சொல்தோரணங்கள் இன்றியும் புதிய உச்சங்கங்களைத் காட்டி இயக்கம் கண்டுள்ளமைத் தெளிவு. உழைக்கும் மக்கள் சமத்துவம் எய்துவதும், இந்திய சனாதனிய முதலாளியக் கூறுகளின் நாகரீக வளர்ச்சிப் பரிணமிப்புகளையும் இன்குலாப்பின் கவிதை வழி முழுதுணர முடிகிறது.

**சான்றாதாரங்கள்**


1. அறவாணன்,க.ப. *(1977)* **கவிதையின் உயிர் உடல் உள்ளம்,** பாரிநிலையம்.
2. இன்குலாப். *(2017)* **ஒவ்வொரு புல்லையும் பெயர்சொல்லி அழைப்பேன்,** தஞ்சாவூர்: அன்னம் பதிப்பகம்.
3. கரிகாலன். *(2005)* **நவீனத் தமிழ்க்கவிதையின் போக்குகள்,** மருதா பதிப்பகம்.
4. கைலாசபதி,க. *(1979)* **சமூகவியலும் இலக்கியமும்,** சென்னை: நியூ செஞ்சுரி புக்ஸ்.
5. சம்பத,இரா. *(1992)* **புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம்**, புதுவை : உமா பதிப்பகம்.
6. செகந்நாதன்,ஆ. *(1983)* **புதியக் கவிதைகளில் மார்க்சியம்,** மணிவாசகர் பதிப்பகம்.
7. ஞானி *(1975)* **கலை இலக்கியம் ஓர் தத்துவப்பார்வை,** கோவை : வேள்வி வெளியீடு.
8. பாலா. *(1999)* **புதுக்கவிதை புதுப் பார்வை,** அகரம் வெளியீடு
9. வானமாமலை, நா. *(1976)* **மார்க்சிய சமூகவியல் கொள்கை,** சென்னை : நியூ செஞ்சுரி புக்ஸ்.

பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் – இலங்கை



# ‘தமிழ் மகள்’

## பாரதியின் பார்வையில் ஔவை

“யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை,
உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை”

என்றும்,

“கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு – நல்ல
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு”

... ...

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு”

என்றும் பாரதியார் தம் பாடல்களில் பல இடங்களில் திருவள்ளுவர், கம்பர், இளங்கோ ஆகிய மூன்று கவிஞர்களையும் பாராட்டிச் செல்கின்றார். பாடல்களில் மட்டுமல்ல, தன் கட்டுரைகளிலுங் கூட “தமிழ்நாட்டில் இப்போது புதிய உயிர் தோன்றியிருப்பதால் நாம் இவ்விசயத்தில் தமோ குணஞ் செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருசோத்ஸவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்” என முற்குறிக்கப்பெற்ற கவிஞர் மூவரையும் மீண்டும் மீண்டும் அவர்

போற்றத் தவறவில்லை. இவ்வாறு, மேடைகளிலும் பத்திரிகைகளிலும் அடிக்கடி எடுத்தாளப்படும் இம் மேற்கோள்கள் மூலமாக, "தமிழ்க்கவிஞர் கூட்டத்துள் இம்மூவரையும் மட்டுமே மிகப்பெரும் ஆளுமைகளாக" பாரதியார் கருதினார் எனும் அபிப்பிராயம் எப்படியோ ஏற்பட்டு நிலைபெற்றுவிட்டது. இது உண்மைதானா என நோக்குதல் வேண்டும். அதற்கான முயற்சியில் ஈடுபடும்பொழுது, இம் மூன்று படைப்பாளிகளையும் விட பாரதியார் பெரிதும் போற்றிய கவிஞர் ஒருவரைக் கண்டுகொள்ளலாம். அவரே, ஔவையார்.

> **"தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் சமைத்துக் கொள்ள வல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம், அது மீட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப்பெரும் செல்வம்"**

என்று தமது கட்டுரையொன்றிலே குறிப்பிடுகின்றார் பாரதி. இங்கு ஔவையாரின் பாடல்களை அவர் 'தனிப்பெருஞ் செல்வம்' என்றும், அவை மீளவும் யாராலும் படைக்கப்பெற முடியாதவை என்றும் சுட்டுவதைக் கருதிப்பார்க்க வேண்டும். இவ்வளவில் அமையாமல், பாரதியார் ஔவையாரைப் பற்றிக் கூறியுள்ள பின்வரும் வாசகங்களையும் நோக்கினால், அவர் அப்பெண் கவிஞர் மீது கொண்டிருந்த கட்டற்ற பெருமதிப்பு இலகுவில் புலனாகும்.

> **"மேல் நாட்டில் சேக்ஸ்பியர் என்ற கவியரசர் எழுதியிருப்பதுபோல எழுதுந் திறமை கொண்ட ஸ்திரி ஒருத்தி தோன்றியதுண்டா? என்று கேட்கிறார்கள். ஔவையார் வாழ்ந்த தமிழ் நாட்டில் அப்படி ஒரு கேள்வியை யாரும் கேட்க மாட்டார்கள். ஆனால், ஔவையார் போலக் கவிதையும் சாஸ்திரமும் செய்யக்கூடிய ஓர் ஆண் மகன் இங்குப் பிறப்பானா? ஏன்று வேண்டுமானால் கேட்கலாம்."**

தமிழ்க் கவிதையுலகை நவீனப் பாதையில் அழைத்துச் சென்றவரும், தேச விடயங்களிலும் ஈடுபாடு கொண்டு உழைத்தவருமான பாரதியார், ஔவையாரில் மிக்க பெருமதிப்புக் கொண்டிருந்துள்ளார் என்பதை, மேற்படி மேற்கோள்கள் ஐயமற எடுத்துக்காட்டி நிற்கின்றன.

பல்லாயிரக் கணக்கான கவிஞர்களைக் கண்ட தமிழ் இலக்கியப் புலத்தில் இருபதாம் நூற்றாண்டில் வந்து இணையும் பாரதியார், தனக்கு முன்னே வாழ்ந்த அவர்கள் அத்துணைப்பேரிலும் ஔவையாரை ஏன் இவ்வாறு சிலாகித்துப் பேசுகிறார், என்பதற்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டும். ஔவையார் மீது அவர் கொண்டிருந்த இந்த அபரிமிதமான மதிப்புக்கு ஒருவிதத்தில் பின்வருவன அடிப்படைக் காரணங்களாக அமைந்திருக்கலாம் என, உரைப்பது தவறாகாது:

(அ) கவிதையில் எளிமையை வலியுறுத்தியவர் பாரதியார். "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு.." ஆகியவற்றை உடைய இலக்கியங்களே படைக்கப்பட வேண்டும் என்பது பாரதியாரின் படைப்புக் கொள்கையாக இருந்துள்ளது. இவ்வாறு, சாதாரண பொதுமக்களும் புரிந்து கொள்ளத்தக்கதாக, தமிழ்க் கவிதை விளங்கவேண்டும் என்பதை வலியுறுத்திய அவர், தானே முன்னுதாரணராகி எளிமைப் பண்புமிக்க நவீன கவிதைப் பாதையை, தமிழில் திறந்து விட்டவர்.

இத்தன்மையரான அவர், எளிமையாக, சாதாரண மக்களுக்கும் புரியும்படியாக நீதிநூல்களை வழங்கிய ஔவையாரில் மதிப்புக் கொள்வது இயல்பானதே.

> **"ஆண் மக்களிலே கூட உயர்ந்த கல்வி பயின்றோர் மாத்திரமே ஜன சமூக விதாயங்களில் வள்ளுவர் குறள், நாலடியார் முதலியவற்றைப் பிரமாணமாகக் கூறுவர். அதிக படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண் பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி"**

என்கிறார் பாரதியார். அவரே மற்றொரு இடத்தில், "ஔவையின் நூலோ மிகத் தெளிந்த மிக எளிய தமிழ் நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும்படி எழுதப்பட்டிக்கின்றது" என்று பாராட்டுகின்றார். இக் கூற்றுகள், ஔவையாருடைய இலக்கியங்களிற் காணப்பெறும் எளிமைத் தன்மை பாரதியாரைக் கவர்ந்துள்ளமையை உறுதிசெய்கின்றன.

(ஆ) "விடுதலைக்கு மகளிர் எல்லோரும் வேட்கை கொண்டனம்" என்று மகளிர் விடுதலைக்காய் பாடியவர் மகாகவி பாரதியார். "பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லையென்றால் பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை" என்பது அவரின் ஆணித்தரமான கருத்து. இத்தன்மையராகிய அவரை, பல ஆண்டுகளுக்கு முன்பாகவே "அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி" மிக்கவராக விளங்கிய பெண் கவிஞர் ஔவையார் கவர்ந்திருப்பார் என்பது ஏற்கத்தக்கதே. இதனை,

> **"தமிழ் நாட்டு நாகரிகத்துக்கு இத்தனை பெரும் செல்வமாகவும் இத்தனை ஒளிசான்ற வாடா விளக்காகவும் தனிப் பேரடையாளமாகவும் தமிழ் மாதொருத்தியின் நூல்கள் விளங்குவது நமது நாட்டு ஸ்திரீகளுக்குப் பெரு மகிழ்ச்சி தரத்தக்கதொரு செய்தியன்றோ? இஃது தமிழ் ஸ்திரிகளுக்கு வெறுமே புகழ் விளைப்பது மாத்திரமன்று, அவர்களுக்கு கிரமமாக காவலுமாகும்....."**

எனும் பாரதியாரின் கட்டுரைப் பகுதியொன்று உறுதிப்படுத்துகின்றது. அவர், தமிழ்நாட்டுப் பெண்களை ஔவையாரின் வாரிசுகளாகவே கருதுகின்றமையும் இவ்விடத்திற் சுட்டத்தக்கது. "ஔவையார் பிறந்த நாட்டு மாதரை, ஔவையார் இனத்து மாதரை ஆண்மக்களைக் காட்டிலும் அறிவே குறைந்த கூட்டத்தாரென்று வாய் கூசாமல் எவனும் சொல்லத் துணிய மாட்டான்" என்பது பாரதி கூற்று.

(இ) ஒரு கவிஞராக, இலக்கியப் படைப்பாக்கத்தில் ஈடுபட்டு, ஏட்டுக்குள் மட்டும் வாழ்ந்துவிடும் வாழ்க்கையை பாரதியார் எப்போதும் எதிர்த்தே வந்துள்ளார். சமூக மனிதனாக இலக்கியவாதி இயங்க வேண்டும் என்பது அவர் கொள்கை. "நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்" என்னும் அவரது பிரசித்தமான முழக்கம் இதனையே வலியுறுத்துகின்றது. தான் விரும்பிய இந்தக் கொள்கையினை உடையவராகவே ஔவையாரும் இருந்துள்ளார் என்பது பாரதி கருத்து. ஔவையார் மீது பாரதியார் மதிப்புக் கொள்வதற்கான காரணங்களுள் ஒன்றாக இதுவும் இருந்துள்ளது எனலாம்.

> **"ஔவையார் வெறுமே நூலாசிரியர் மட்டுமல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜ ரீதியில் மிகவும் வல்லவரென்று தமிழ்நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்று ராஜாங்கத் தூதில் நியமனம் பெற்றிருக்கிறார்"**

என்பது பாரதி கூற்று. ராஜாங்க அரசியல் விடயங்களிலே, சுதந்திரப் போராட்ட காலத்தில் ஈடுபட்டுழைத்த பாரதியாரை, ஔவையாரின் இவ்வியல்பு நன்கு கவர்ந்திருக்கும் என எதிர்பார்ப்பது பொருத்தமானதே.

(ஈ) தேசவிடுதலை, பெண்விடுதலை போன்றவற்றுக்காகக் குரல் கொடுத்துவந்த சமுதாய மனிதராகிய பாரதியார், ஒருபுறத்தில் ஞானநாட்டங் கொண்டு ஆன்ம விடுதலைக்காகவும் அயராது உழைத்து வந்தவர். "சீருக்கெல்லாம் முதலாகும் - ஒரு தெய்வம் துணைசெய்ய வேணும்" என எச்செயலுக்கும் ஆதாரமாக தெய்வத்தை முன்னிறுத்தியவர். தன்னை ஒரு சித்தராகவே அறிவித்த அவர், அக்கால ஞானியர் சிலரோடு கொண்டிருந்த உறவும் நினையற்பாலது. இந்த சமுதாய – ஆன்மிகக் கலவை மிகவும் அபூர்வமானது. இவ்விணைப்பில் இயங்கிய படைப்பாளிகள் மிகச்சிலரே. இத்தகைய தனித்துவமான இணைப்பாளுமையோடு இயங்கிய பாரதியாரை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அவ்வாறு இயங்கிய ஔவையார் கவர்ந்திருப்பார் என்பதும் எதிர்பார்க்கக் கூடியதே. ஔவையார், ஞானநூல் படைத்தளித்தமை குறித்து,

> **"மகிமை பொருந்திய ஆத்ம ஞானியாகிய ஔவையார் இயற்றியிருக்கும் 'ஔவை குறள்' எனும் ஞானநூல் தமிழ்நாட்டு யோகிகளாலும், சித்தர்களாலும் உபநிஷத்துக்களுக்குச் சமானமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது"**

என்கிற பாரதியார்,

> **"ஞான நூல் எழுதுவது தெய்விகத் தொழில் என்றும், இது தெய்வ சக்தி பெறாத சாதாரண மனிதர்களுக்குச் சாத்தியப்படாத தொழில் என்றும் கருதுகிறார்கள். இந்த அற்புதத் தொழிலிலும் ஔவை, நிகரற்ற திறமை வாய்ந்தவள்"**

என்றும் கூறுகின்றார். இவை, ஆன்மிக நாட்டங் கொண்டிருந்த பாரதியாரது மனதை, அதேபோன்று ஞான நாட்டமுற்றிருந்த ஔவையார் கவர்ந்துள்ளார் என்பதற்கான சான்று வரிகளாக விளங்குகின்றன. இத்தகைய காரணங்களாலேதாம் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதியார், தானறிந்த படைப்பாளிகள் அனைவரிலும் ஔவையாரை உயர்வாகக் கருதிப் போற்றினாரெனக் கருதலாம்.

இனி, பாரதியாரின் படைப்புகளை ஔவையார் எவ்வகையிலே பாதித்துள்ளாரென்பதை நோக்குவது அவசியமானதாகும். ஒரு தரமான முன்னைய ஆளுமை, தனது சாயல்களைப் பின்வருவோரிடம் விளைவிப்பது இயல்பே. அவ்வகையில் தன்னால் பெரிதும் போற்றப்பட்ட ஔவையாரின் சாயல்கள் பாரதியாரின் படைப்புகளில் பாடல்களில் ஆங்காங்கே தலை காட்டுகின்றன. தன்னைப் பெரிதும் கவர்ந்த பெண் கவிஞரான ஔவையாரின் வழியில் பொருத்தமான இடங்களில் பாரதியார் நடைபோட விழைந்தமையாலேயே இது நேர்ந்தது எனல் வேண்டும். இவற்றுள் தலையாயது பாரதியார் படைத்த புதிய ஆத்திசூடியாகும். நல்லவற்றையும் தருமங்களையும் குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமெனும் விருப்பில், ஔவையார் பாடிய “ஆத்திசூடி” மிகவும் சுருங்கிய வடிவினது. கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த திருக்குறளைவிட, அடியளவில் சிறியது. ஓவ்வோரடியில் ஒவ்வொரு அறஞ் சொல்லும் அமைப்பினையுடையது. இந்நூலானது பாரதியாரை மிகவும் கவர்ந்துள்ளது. இதனாலேதான், தமது காலத்துக்குத் தேவையான அத்தியாவசிய விடயங்களை இணைத்து அவர் ‘புதிய ஆத்திசூடி’ பாடினார். ஒழுக்க விழுமியங்களை உயிரெனப் போற்றிய காலத்து ஆத்திசூடி ஔவையுடையது. ஆனால், பாரதியாருடைய ஆத்திசூடியோ தேச விடுதலைக்கான சுதந்திர போராட்ட காலகட்டத்தது. அதனால் ‘ரௌத்திரம் பயில்’ என்கிறார் பாரதியார். இவ்விரு படைப்புகளையும் அவை தோன்றிய காலப் பின்புலத்தில் வைத்து மிக விரிவாக நோக்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மேலும்,

> “சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
> நீதி வழுவா நெறிமுறையில் – மேதினியில்
> இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
> பட்டாங்கில் உள்ள படி”

என ஔவையார் 'நல்வழி' நூலில் எழுதிய பாடற் கருத்தை அப்படியே வழிமொழிந்து,

"சாதி இரண்டொழிய வேறில்லை என்றே
தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்"

என்கிறார் பாரதியார். இப்பாடலில் ஔவையாரை, 'தமிழ் மகள்' என்று அவர் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. இதனை, 'தமிழின் மகள்' எனப் பாராட்டியுள்ளதாகவும், 'அவரே தமிழ் ஆகிய மகள்' எனப் பாராட்டியதாகவும் கொள்ள முடியும். இதுமட்டுமல்லாமல் கொன்றைவேந்தனில், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என ஔவையார் கூறியதையும் அப்படியே அநுவதித்து உரைக்கின்றார் பாரதியார்,

"உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவள் என்று அறியீரோ? உணர்ச்சி கெட்டீர்
பண்டாய்ச்சி ஔவை 'அன்னையும் பிதாவும்
பாரிடை முன்னறி தெய்வம்' என்றாள் அன்றோ?"

என்பது அவரது பாடல். இவற்றைத் தொகுத்து நோக்கும்பொழுது, தமிழ்க் கவிஞர் பெருமரபில் ஔவையாரை மிகவும் உன்னதமான இடத்தில் வைத்து பாரதியார் போற்றியுள்ளார் என்பதையும், ஔவையாரிடம் காணப்பெற்ற எளிமை, நேர்கொண்ட பார்வை, சமுதாய அக்கறை, ஞான நாட்டம் என்பன பாரதியாரை மிகவுங் கவர்ந்துள்ளன என்பதையும், அவ்வாளுமையின் வழியில் பொருத்தமான இடங்களில் பாரதியார் நடைபோடத் தொடங்கியுள்ளமைக்குச் சான்றாக, புதிய ஆத்திசூடி முதலிய படைப்புகள் காணப்படுகின்றன என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**உசாத்துணை**


1. குருசாமி, ம.ரா.போ.(ப.ஆ.), (2001),**பாரதி பாடல்கள் – ஆய்வுப் பதிப்பு**, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
2. **பாரதியார் கட்டுரைகள்** (1988) சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
3. மணி, பெ.சு., (1995),**தமிழ்ப்புலவர் மரபும் பாரதி மரபும்**, சென்னை: பூங்கொடி பதிப்பகம்.
4. ஜீவானந்தம், ப. (1964) **பாரதி வழி**, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.

முனைவர் இரா.டயானா கிறிஸ்டி – இந்தியா

# பெண்ணிய நோக்கும் மணிமேகலைக் காப்பியமும்

பவுத்தக் காப்பியங்கள் தோன்றிய காலம் வேறு. பெண்ணியம் எனும் துறைத் தோன்றிய காலம் வேறு. பௌத்தக் காப்பியமான மணிமேகலை ஒரு புரட்சிக் காப்பியம். பெண்ணைத் தலைவியாகக் கொண்ட காப்பியம். பெண் உரிமைக்குக் குரல் கொடுக்கும் கருத்துக்களும் பெண்ணை அடையாளப்படுத்தும், பெண் தனித்துவத்தை நிலைநிறுத்தும், சிந்தித்து முடிவெடுக்கும் தன்மைகளை வெளிப்படுத்தும் காப்பியம் என்றால் அது மிகையில்லை. பெண்ணியம் என்பது பிறபாலருக்கு இணையாக மானுடச் சமத்துவத்தை வலியுறுத்துவது. பெண்களுக்கு எதிரான நடைமுறைகளைக் கேள்விக் கேட்பதாகவும் அவற்றை விவாதிப்பதாகவும் அமையும் துறையாகும். சமய, சமூக, பொருளாதார வாழ்வில் பெண் உரிமைகளை நிலைநாட்ட மேற்கொள்ளும் முயற்சியில் முனைப்பாக ஈடுபடுவதும் பெண்ணியமாகும்.



சமயங்கள் அத்தனையும் ஆண் மையக் கருத்துக்களை வலியுறுத்துவன. எனினும் மணிமேகலைப் போற்றும் பௌத்தமோ கூடுதலாக மானுட விடுதலையை வலியுறுத்துவது. பெண் துறவுக் குறித்து முதன்முதலில் விவாதித்த சமயம் பௌத்தம் எனலாம். “புத்தர் போதித்த அறங்களைத் தொகுத்து நான்காகக் கூறலாம். அவை ஒழுக்கம், புணிணியம், பொதுநலம், செயல்பாடு என்பனவாகும்” (ராஜ்கௌதமன், க.அயோத்திதாசர் ஆய்வுகள், ப.18). பௌத்தத்தின் அடிப்படைக் கருத்துக்களுள் ஒன்று பசிப்பிணி அகற்றுவது. அக்கோட்பாட்டைப் பின்பற்றும் மணிமேகலைச் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றி, பசிப்பிணிப் போக்குகின்றாள். பௌத்தம் கடைப்பிடித்த அசோகரும் நீதியை நிலைநாட்டி, சிறையிருப்போருக்கு இரக்கம் காட்டியதை அவரது ஆட்சி நமக்கு வெளிப்படுத்துகின்றது. (மாக்ஸ்,அ. தீராநதி இதழ், மார்ச் – 2017) இதன் வழிப் பௌத்தம் போற்றும் கோட்பாடுகளுள் பசிப்பிணிப் போக்குதலும் ஒன்றாகும் என்பது தெளிவு. அத்தகைய வாழ்வைத் தன் வழியாக மேற்கொண்டு மணிமேகலை வாழ்வதாகக் காப்பியம் பதிவு செய்கின்றது. “மணிமேகலைப் பௌத்தத்தின் அறச் செயல்கள், வைதீக வருண மறுப்புக் கொள்ளைகள் பலவற்றையும் பற்றி விளக்கமாக எடுத்து இயம்பியுள்ளது. பசிப்பிணிப் போக்குவதே சிறந்த அறமாக மணிமேகலை வலியுறுத்துகிறது. சிறைச்சாலைகள் அகற்றப்பட்டு அறச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன.” (ராஜ்கௌதமன், அயோத்திதாசர் ஆய்வுகள் ப.27)



**சமயம் தேர்வு**

மணிமேகலைத் துறவினை மேற்கொள்ளும் முன் தன் தாய் கேட்டற்காகப் பௌத்தத் துறவியானரா? எனின் இல்லை என்றே கூறவேண்டும். சமயக் கணக்கர்த் தம் திறம் கேட்டக் காதையில் பல்வேறு சமயங்களின் தன்மைகளைக் கேட்டறிந்து அவற்றில் தான் விரும்பும் சமத்துவம் நாடும் பௌத்தம் சார்கிறாள். மற்ற சமயங்களைக்

குறைகூறாமல் தான் சாரும் பௌத்தம் இத்தன்மையது என மற்றவற்றில் இல்லாத சிறப்பினைக் கூறிப் பௌத்தம் சார்கின்றாள். "புத்தர் சமூகச் சுதந்திரத்திற்காகவும் அறிவுச் சுதந்திரத்திற்காகவும் பொருளாதாரச் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டார். ஆண்களுக்கிடையில் மட்டும் சமத்துவம் வேண்டுமென்று கூறவில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் சமத்துவம் வேண்டுமென்று கூறினார்" (ஏ.பி.வள்ளிநாயகம், நாம் இந்துக்கள் அல்லர் பௌத்தர்கள், ப.7) அதனை உணர்ந்தே மணிமேகலைப் பௌத்தம் சார்ந்தாள். தன் வாழ்வின் முடிவினை யாருடைய சார்பும் இன்றி எடுக்கின்றாள். புத்தம் அடிப்படையில் சமத்துவம் நாடுவது, அதனை அறிந்தே தெளிந்து தேர்ந்து முடிவுசெய்கிறாள். இதற்கான பல்வேறு தடைகளும் ஏச்சுக்களும் வந்தாலும் எதனையும் பொருட்படுத்தாமல் தன் வழியை மேற்கொள்கின்றாள். சமயத்தேர்வு என்பது மனிதனின் அடிப்படை உரிமை. அதனை மணிமேகலை நிலைநாட்டியிருப்பது அவரது உரிமையை நிலைநாட்டியதாகும். பொதுவாகச் சமயங்கள் எல்லாம் ஆணை மையமாகக் கொண்டு பெண்ணை இரண்டாம் நிலையில் வைத்து ஏற்றத்தாழ்வுடனேயே கட்டமைக்கப்பட்டுள்ளன. சடங்குளும், சம்பிரதாயங்களும், நம்பிக்கைகளும் பெண்களை வஞ்சிப்பதாகவே அமைந்துள்ளன. ஆணுக்கு விருப்பமானதைச் செய்தல், கணவனின் பாராட்டைப் பெறுதல், கணவனுக்காக வாழ்தல், கற்புக் கலாச்சாரம் போன்றவை பெண்களின் கடமைகளாக ஆக்கப்பட்டுப் போதிக்கப்பட்டன. இத்தகைய மதீப்பீடுகளை உள்வாங்கிய மணிமேகலை, கணிகையர்க் குலத்தோன்றல். தன்வாழ்வே பிரச்சினையான சூழலில் துணிந்துச் சமயவாதத்தில் ஈடுபடுகின்றாள். அவற்றில் உள்ள அடிமைத்தனக் கூறுகள் பௌத்தத்தில் இல்லை என்று வலியுறுத்துகிறார். சைவ வாதம், பிரம்ம, வைணவ வேத வாதம், ஆசீவகம், வைசேடிகம் போன்ற சமய வாதங்களைக் கேட்டறிந்து புரிந்துகொள்கிறாள். பின் அவற்றில் பெண்ணுக்கு மதிப்பின்மையை அறிந்து அதனையும் தாண்டி வேறொரு ஆன்மிகத்தின் தேடலில் ஈடுபடுகின்றாள். பெண்களுக்கு எதிரான வைதீக ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலையைத் தேடுகின்றாள். சமய ஆதிக்கக் கட்டுகளிலிருந்து விடுதலையைத் தேடும் நோக்கில் மானுடம் போற்றும் பௌத்தம் நாடி ஓடுகின்றாள். இங்கு மணிமேகலை சமூக, சமய எதிர்ப்புணர்வினை

வெளிப்படுத்துவதோடு தன் முடிவினைத் தடைகளைத் தாண்டி நிலைநிறுத்துகின்றாள்.

**கைம்மையும் பெண்களும்**

*தந்தைவழிச் சமுதாயத்தின் கலாச்சாரம், சமயம் போன்றவற்றில் ஆணாதிக்கம் முழுமையாகப் பரவியிருந்தது. அது பெண்ணடிமைக்குச் சாதகமான கட்டுப்பாடுகளையும் சடங்குமுறைகளையும் கொண்டிருந்தது. அவற்றில் முக்கியமானவை விதவையர்நிலை, கைம்மை நோன்பு மேற்கொள்ளுதல், உடன்கட்டை ஏறுதல், போன்றவையாகும். இதுபோன்றநிலை மணிமேகலையிலும் காட்டப்படுகின்றது. பழங்காலந்தொட்டே கற்புடைய பெண் கணவன் இறந்தான் என்ற சொல்லைக் கேட்டவுடன் உயிர் விடுவாள். இல்லையெனின் தீப் புகுந்து உடன்கட்டை ஏறுவாள். கைம்மை நோன்பு மேற்கொள்வாள் என்பது போன்ற கற்பிதங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. மணிமேகலையோ அத்தகைய அடிமைத்தன மரபை உடைக்கின்றது. பத்தினிப் பெண்டிரின் இயல்பு என்று கூறும் சமூக மரபை உடைத்துக் கண்ணகி நீதிக் கேட்டு மதுரையை எரித்தாள். அவளது மகள் முறையினளான மணிமேகலை, கணிகையர் மரபினை உடைத்தாள். மாதவி உடன்கட்டையும் ஏறாமல் கைம்மை நோன்பும் மேற்கொள்ளாமல் துறவைத் தெரிவுசெய்கிறாள். இதனை மணிமேகலை, காதலர் இறப்பிற் கனை எரிபொத்தி, … காவலன் பேரூர் களையெரி யூட்டிய, மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை, அருந்தவப் படுத்தல் அல்லதியாவதும்" (மணி 2 :41 – 51 வரிகள்) என்று விளக்குகின்றது. இங்குக் கண்ணகி, மாதவி, மணிமேகலை மூவரும் தன் தாழ்நிலையை உணர்ந்து மாற்று வழிகளைத் தேடி அடைகின்றனர். கணவனை இழந்தப் பெண்கள் சந்திக்கும் ஓர் அநீதி உடன்கட்டை ஏறுதலாகும். விதவை என்பதால் எண்ணில்லாக் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. வாழ்நாள் முழுவதும் அணுவணுவாகச் சித்திரவதைப் பட்டுச் சாவதை விட உடன்கட்டை ஏறுவதே மேல் என்று பெண்கள் தம் கணவனின் சிதையில் பாய்ந்து மாய்ந்தனர். இதனை ஊக்குவிப்பதாக இன்றும் உடன்கட்டை ஏறியப் பெண்ணைச் சக்தி மாதாவாக்கிக் கோயில் கட்டிக் கும்பிடும் நிலைத் தொடர்கின்றது. "சக்தியில் எரிக்கப்பட்ட*

பெண்களைத் தெய்வமாக்கிச் சக்தி மாதா என்றழைத்துக் கோவில் கட்டி இன்று ஓகோவென வியாபாரம் நடக்கின்றது. ரூப் கன்வர் எரிக்கப்பட்ட இடத்தைத் தரிசிக்க நாள் ஒன்றுக்கு 10000 பேர் வந்தனராம். காணிக்கை 70 இலட்சத்தைத் தாண்டிவிட்டதாம்" (ஐ.ராஜ் சே.ச சக்தி திரண்டால்,ப.32) இஃது இன்றைய நிலை. மாதவியோ அத்தகைய மரபை உடைத்துத் துறவு மேற்கொள்கிறாள். மணிமேகலைக் காப்பியம் உருவான காப்பியப் பின்னணியில் இன்னும் ஒடுக்கு முறைகள் இருந்திருக்கும். அவற்றிலிருந்து தப்பித்து வாழமுடியாத நிலைத் தொடரும் என்பதற்காகக்கூட மாதவி தப்பிக்கத் துறவினைத் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்று கருத இடம் உள்ளது. மாதவி மணிமேகலையைத் தன் மகள் என்று கூறினால் எங்கு அடிமைத்தன அடக்குமுறைக்குள் சிக்கிவிடுவாளோ என்று மாபெரும் பத்தினி தெய்வம் கண்ணகியின் மகள் என்று கூறுவது மணிமேகலைக்கு ஒரு பாதுகாப்பினை ஏற்படுத்தும் செயலாகவே அமைகின்றது.


## ஆண்பிறப்பும் அங்கீகாரமும்

ஆண்மையச் சமூகத்தில் ஆணின் பிறப்பு மேன்மையானதாகவும் வரவேற்கத் தகுந்ததாயும் கருதப்பட்டது. பெண்பிறப்போ இழிவானதாக, பாவத்தின் விளைவு என்றெல்லாம் கீழாகக் கருதப்பட்டது. ஆண்பிறப்புக் கொடையாகவும் ஆண் குழந்தைப் பெற்றவர்கள் வீடுபேறு அடைவர் என்பது போன்ற மூடநம்பிக்கைகள் சமூகத்தில் நிலவி வந்ததன. "ஆண் குழந்தைப் பிறந்தால் ராசா, சிங்கம், காளை பிறந்திருக்கிறான் என்று பெருமிதத்தோடு சொல்கின்றனர். பெண் குழந்தை பிறந்துவிட்டால் பொட்டைக் கழுதை பிறந்திருக்கிறது. பொட்டச்சி, செலவு பிறந்திருச்சு என்று பிரித்துப் பார்க்கும் கொடுமையும் உள்ளது". (ஐ.ராஜ் சே.ச, சக்தித் திரண்டால், ப.15) இவ்வளவு அங்கீகாரம் ஆண் குழந்தைகளுக்குக் கிடைத்த சூழலில் அதனை எதிர்க்கும் தன்மையில் மணிமேகலை, "புத்தேள் உலகம் புதல்வரும் தாரார், மிக்க அறமே விழுத்துணை யாவது" (மணி 16 : 84 – 85 வரிகள்) என்று பதிவுசெய்கின்றது. இளமையும் நிலையில்லாதது. யாக்கையும் நிலையில்லாதது. செல்வமும் நிலையில்லாதது என்று புத்தேள் உலகினைப் புதல்வரைப் பெற்றாலும் பெற இயலாது. அறம் செய்வதே துணையாகும் என்று கூறுகின்றது. சாதுவன் கதைவழியும் "நல்லறம் செய்வோர் நல் உலகு

அடைவர்” என்று வலியுறுத்துகின்றது. இங்கு அறமே வாழ்க்கைக்குத் துணையாகும் என்று வலியுறுத்தி மூடநம்பிக்கையை எதிர்க்கும் போக்கினைக் காணமுடிகின்றது.

## மணிமேகலையும் கிளைக்கதைகளும்

மணிமேகலையில் கூறப்படும் கிளைக்கதைகள் ஒவ்வொன்றும் சமூகத்தில் நடைபெறும் ஏழை மக்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை முன்மொழிவன. ஒரு வகையில் பிரச்சினைகளை வெளியில் சொல்வதும் தீர்வுக்காகப் போராடுவதும் பெண்ணிய நடைமுறைகளே! அந்த வகையில் அடிமைத்தனச் சூழலை வெளிக்காட்டும் நிலையிலேயே அக்கதைகள் படைக்கப்பட்டுள்ளன.


உ

மணிமேகலை,

இஃது

மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்பாடியது.

புரசை - அட்டாவதானம் - சபாபதி முதலியார்

அவர்கள் மாணாக்கர்

திருமயிலை

சண்முகம் பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு

கயப்பாக்கம். இரத்தினசெட்டியார் குமாரர்

க. முருகேச செட்டியாரால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1894.

விஜய வருஷம் தனுர்ரவி.

சுதமதியை வித்தியாதரன் தூக்கிச் சென்று காமம் நுகர்ந்தப் பின் பூம்பட்டினத்தில் விட்டுச் சென்றான் என்பதை எடுத்துக்கூறி மணிமேகலைத் தனியே செல்லக் கூடாது என்று எச்சரிக்கும் மொழியிலேயே ஒலிக்கின்றது. இலக்குமி, ஆதிரைக் கதைகள் கணவனை இழந்தப் பெண்கள் உடன்கட்டை ஏறும் சூழலை வெளிப்படுத்துகின்றது. அதிலும் ஆதிரைக் கதைவழிப் பரத்தையர் ஒழிப்பு, கள், காமம் களைவதின் அவசியத்தையும் வலியுறுத்துவதை அறிய முடிகின்றது. ஆபுத்திரன் கதை வழியாகப் பிராமணிய மதத்தின் சாதியமும் வன்முறையும் உயிர்க் கொலையும் சடங்கும் வேள்வியும் வேதமும் விமரசிக்கப்படுகின்றன. மருதியின் கதை இனக்குழுச் சமூகத்தில் பெண் கணவனது நலனுக்காக மட்டுமே வாழவேண்டும் என்று வலியுறுத்துவதையும் அக் கருத்துக்களை நிலைநிறுத்தச் சமயத்தின் வழி வலியுறுத்து வதையும் அறியமுடிகிறது.

மருதிக் காவிரியில் நீராடிவிட்டுத் தனியே வரும்போது சுகந்தனது இளையமகன் அவளைக் கண்டு காமம் கொண்டான். இதை அறிந்த மருதி நான் பிறர் நெஞ்சு புகுந்தேன். பத்தினிப்பெண் பிறர் நெஞ்சு புகார். இனி நான் கணவருடன் வாழத் தகுதியற்றவன் என்று தெய்வத்திடம் முறையிடுகின்றாள். அதற்குக் காரணம் கூற வந்த தெய்வம் நீ கொழுநனைத் தொழவில்லை, நகைச்சுவைக் கதைகளை விரும்பினாய், திருவிழாக்களில் கலந்து கொண்டாய் எனவே இவ்வாறு நிகழ்ந்தது என்று கூறுகிறது. இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள கதையில் நிகழ்ந்த நிகழ்வுக்குச் சமயச் சாயம் பூசப்பட்டுப் பெண்களுக்குக் கற்பை வலியுறுத்துவதைக் காணமுடிகின்றது. இதனை, "தெய்வம் தொழாஅள்..., மழையும் நின் வழியது (22 : 59 – 69 வரிகள்) என்னும் பாடலில் பெண்கள் தன் கணவனை மட்டுமே தெய்வமாக வணங்கவேண்டும். கதைக் கேட்பது, திருவிழாக்களுக்குச் செல்வது, நாடகம், சினிமா இசைநிகழ்ச்சிகளுக்குச் செல்வது, தெய்வ வழிபாடு இவற்றைச் செய்வது தவறாகும் என்பதை வலியுறுத்துகின்றது. இதுவும் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை தான். "மதம் மட்டுமே பெண்களை நுண்ணிய முறையில் ஒடுக்குகிறது. மதம் தனக்கான விசயங்கள் அனைத்தையும் குடும்பம் வழியாக நிறைவேற்றிக்கொள்கின்றது." (பாக்கியம், பாலியல் நிகர்நிலைப் பார்வை விவாதங்கள்,ப.35) இங்குப் பெண்ணை மதப் போதனை வழி ஆணாதிக்க நடைமுறைக்கு ஒத்துப்போகத் தூண்டுவதை மிக அப்பட்டமாகக் காணமுடிகின்றது.

தருமதத்தன் என்னும் வணிகன் தான் காதலித்த விசாகையைத் தவிர வேறு பெண்ணை மணப்பதில்லை என்று உறுதிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனிடம் ஒர் அந்தணன் "பத்தினி இல்லோர் பலஅறம் செய்யினும், புத்தேள் உலகம் புகாஅர் என்பது, கேட்டும் அறிதியோ! (மணி.22:117–119 வரிகள்) பத்தினியைக் கூடிப்பிள்ளை பெறாதவர்கள் பல தருமங்களைச் செய்யினும் தேவர் உலகைப் பெற மாட்டார்கள் என்கிறது பிராணமதம். இதனை, மறுத்த மணிமேகலை "புத்தேள் உலகம் புதல்வரும் தரமுடியாது." என்றுத் தன் எதிர்ப்பின் குரலைப் பதிவுசெய்கின்றது. சங்கம் மருவிய காலத்தில் சமண, பௌத்தச் சமயங்கள் தோன்றி வளர்ந்தன. அவை ஆடவர் துறவை வலியுறுத்தும் அதே வேளையில் ஆடவர் துறவிற்குப் பெண்கள் தடையாக உள்ளனர் எனக் கருதின.

பெண்கள் இழித்துரைக்கவும் ஆணுக்குக் கீழாகக் கருதவும்பட்டனர். அதற்குக் கருவியாகப் பெண்களையே இச்சமூகம் பயன்படுத்தியது. இன்றும் ஆணாதிக்கம், பெண் அடிமைத்தனம், சமூக வன்முறைகள் என்றதும் ‘பெண்களும் அதற்கு ஒத்துழைக்கின்றனர்’, ‘பெண்களுக்குப் பெண்களே எதிரி’ என்பது போன்ற கற்பிதங்கள் முன்மொழியப்படுகின்றன. ஆணாதிக்கத்தை உள்வாங்கியப் பெண்கள் ஆணாதிக்க உணர்வுடன் செயல்படுகின்றனர் என்பதே உண்மையாகும். சமூகக் கட்டமைப்பில் பெண்ணடிமைத்தனத்திற்குப் பெண்களையே பயன்படுத்திய சதியை மணிமேகலை வெளிப்படுத்துகிறது. மேலும் விதவைக் கொடுமை, கைம்மை நோன்புக்குத் தள்ளப்படுதல், உடன்கட்டை ஏறுதல், சமூகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பின்மையினால் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாதல் போன்ற பெண்களுக்கு எதிரான கொடுமைகளை வெளிப்படுத்துகின்றது. இன்றளவும் பல இடங்களில் இத்தகையக் கொடுமைகளையும் வன்முறைகளையும் பெண்கள் அனுபவித்து வருகின்றனர். அவற்றை வெளியில் சொல்ல முடியாமல் தனக்குள்ளே புழுங்கி ஒடுங்கும் நிலையும் தொடர்கின்றது. ஒருசிலர் வெளியில் சொன்னாலும் பலருக்கு நீதிக் கிடைப்பதில்லை. மாறாக அவமானங்களும் சுயமரியாதை இழப்புகளும்தான் பரிசாகக் கிடைக்கின்றன.

**உள்ள உறுதி**



பெண்கள் உரிமையுடன் வாழத் துணிந்து தனக்கெதிரான கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் மாற்று வழிகளைத் தேடி வாழவும் முன் வந்துவிட்டனர். குடும்ப வன்முறையிலிருந்து விடுபட்டு வாழவும் தன்நிறைவுடன் தன் காலில் நிற்கவும் துணிந்து விட்டனர். மணிமேகலை எழுந்த சூழலில் பெண்களுக்குக் கற்பை ஒரு புறம் வலியுறுத்திய சமூகம் மறுபுறம் பரத்தமையை ஆதரித்தது. பரத்தமையை வெறுத்த மாதவியும், மணிமேகலையும் பௌத்தத்துறவியாக வாழத் தலைப்பட்டனர்.

ஒரு பெண் சுய சிந்தனையுடன் சுய முடிவு எடுத்துத் தன் வாழ்வை அமைத்துக்கொள்ளும்போது அவளைச் சமூகம் தூற்றுகிறது. ஊர்தூற்றுவதற்குப் அஞ்சித் தன் வாழ்வை மாற்றிக் கொண்டு அடிமைத்தன வாழ்வை மேற்கொள்கின்றனர். இங்கு மாதவியின் தாயும் ஊர்மக்களும் உதயகுமரன் போன்றோரும் தூற்றுகின்றனர். அத்தனை விமர்சனங்களையும் இருவரும் காதில் வாங்காமல், பொருட்படுத்தாமல் உள்ள உறுதியுடன் துறவு மேற்கொள்கின்றனர். மணிமேகலை உதயகுமரானிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் காயசண்டிகை உருவத்திற்கு மாறுகிறாள். அவள் பின் சென்றான் உதயகுமரன். இதனைக் கண்ட காயசண்டிகையின் கணவன் உதயகுமரனைக் கொலை செய்கிறான். இதனை அறிந்த அரசி மணிமேகலையைப் பழிவாங்கக் கல்லா இளைஞனை அனுப்பித் தூற்றுகிறாள். இதனை, “கல்லா விளைஞ னொருவனைக் கூஉய், வல்லாங்கு செய்து மணிமே கலைதன், இணைவள விளமுலை யேந்தெழி லாகத்துப், புணஉகுறிச் செய்து பொருந்தின ளென்றும், பான்மைக் கட்டுரை பலஉக்குரை யென்றே” (மணி 23:43 – 47 வரிகள்) என்னும் கூற்று மெய்ப்பிக்கிறது. இரசாமாதேவி மணிமேகலையைப் பைத்தியக்காரியாக்கி மருந்தூட்டச் செய்து, அவளைக் கற்பழித்தவன் என்று பழிசுமத்த முயன்றாள். புழுக்கறையிலே அடைத்துப் பட்டினிப் போட்டாள். இத்தனைக் கொடுமைகளுக்கும் இடையில் மணிமேகலைத் துணிந்து நின்று தம் பணியினை மேற்கொள்கிறாள். எதனையும் பொருட்படுத்தாமல், சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கி, பசிப்பிணிப் போக்கும் தம் பணியினைத் தொடர்ந்துச் செய்தாள். மணிமேகலையைத் தொடர்ந்த உதயகுமரன் தன்னை இகழ்ந்தான் எனினும் அவன்பின் மனம் செல்கிறது. இது காமத்தின் இயல்பெனின் இதன் வலிமை கெடுதல் வேண்டும் என்று கொண்டது விடாமைப் பண்புடன் மணிமேகலை உறுதியாக இருப்பதைக் காட்டுகிறது. இதனை, “இகழ்ந்தன னாகி நயந்தோ னென்னாது, புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்சம், இதுவோ அன்னாய் காமத்தியற்கை, இதுவே யாயிற் கெடுகதன் திறம்” (மணி 5 : 88 – 91 வரிகள்) என்னும் கூற்று விளக்குகிறது.

மணிமேகலை, மாதவி, கண்ணகி இவர்களின் துணிவின் திறம் இன்றுள்ள பெண்களுக்கும் ஒரு பாடமாகும். மணிமேகலைத் தன்னைச் சுட்டிக்கூறும் சமூகக் குற்றச் சாட்டுக்கும் விமர்சனத்திற்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எவ்விடத்திலும் பதில் கூறுவதற்கான பதிவுக்

காணப்படவில்லை. அக்(தன்)காலச் சூழலில் ஒரு பெண்ணின் தனிப்பட்ட வாழ்வியல் முடிவுக்கான ஒத்துழைப்பு கிடைக்காது என்பதை உணர்ந்துக் கொள்கிறாள். முடிவான தன் இலக்கு நோக்கிச் செயல்படுகிறாள். தன் பணி பசிப்பிணி அகற்றுவதும், சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுவதும் என்று தனக்கான வாழ்க்கையைத் தெரிவு செய்து அதன்படி வாழவும் செய்கிறார். இதற்கு ஏற்பட்ட பல்வேறு தடைகளையும் தாண்டித் தன் பணியில் வெற்றியும் பெறுகிறாள். இது மணிமேகலையின் துணிவைக் காட்டுகின்றது. இக்காலத்திலும் பொதுவாழ்வில் ஈடுபடும் பெண்களுக்குச் சமூக அங்கீகாரம் பெரும்பாலும் கிடைப்பதில்லை. தன் குடும்பம், குழந்தை, தன் கணவனைச் சார்ந்தவர்களுக்காக, கணவனின் கையை எதிர்பார்த்து, உடல் வருத்தி, தேவையின்றிச் சிரித்து, கணவனுக்குப் பிடித்தவகையில் தன்னை அலங்கரித்து அவன் சிரிக்கும்போது சிரித்து வருந்தும்போது அழுது, தன்தேவைகளை நிறைவேற்றும் நிலையிலிருந்து விட்டுவிடுதலையாகிக் களத்தில் இறங்கிப் பணிசெய்து வாழநினைக்கும் பெண்களைப் புரிந்துகொள்ளாமல் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்படுத்தி, அவமானப்படுத்தித் தவறான கோணங்களில் பாரக்கும் நிலையும் தொடர்கின்றது. இவற்றையெல்லாம் முன்மொழிவதாக மணிமேகலை அமைந்துள்ளது. அதேவேளையில் இவற்றையெல்லாம் தாண்டி வாழ வழிகாட்டுகிறது. அடக்கியாளும் அடிமைநிலையிலிருந்து விடுபட்டுத் தன் வாழ்க்கையைத் தானே முடிவுசெய்யும் உள்ள உறுதி இன்றுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் வேண்டும் பண்பாகக் காட்டுகிறது.

மணிமேகலை, சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படும் தாழ்நிலைகளை, விதவைநிலை, கைம்மை நோன்பு, உடன்கட்டை ஏறுதல், கொடுமைகளுக்கு உள்ளாதல், கணவனால் கைவிடப்படுதல், தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமையின்மை, இயலாமை, போன்ற பல இழிநிலைகளை முன்னிறுத்தி அவற்றை நீக்க முயலுகிறது. பெண்களின் மனஉணர்வு, உள்ளக் குமுறல்கள், பெண் அடிமைக் கட்டுகளிலிருந்து விடுபட்டுத் தான் விரும்பும் வாழ்வை வாழ நினைப்பது மன உறுதியை, ஆவேசத்தை வெளிப்படுத்த முயலுகிறது. பெண் உரிமைக்காகவும் தன் இருப்புக்காகவும் போராடும் பெண்கள் ஓரின மனப்பான்மையுடன், தோழமையுடன் சிக்கல்களை

எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தை சுதமதி, மணிமேகலைப் பாத்திரங்கள் நமக்குக் காட்டுகின்றன. தன்மீது திணிக்கப்பட்ட அதிகாரங்கள், அடக்குமுறைகள், கொடுமைகள், ஏமாற்றம், இழிநிலைகள், சமயச் சடங்களின் வழியாகப் பின்பற்றப்படும் பால்யவிவாகம், பரத்தமை, தூய்மை, தீட்டு போன்ற பழமைவாதங்களால் பூட்டப்பட்டிருந்த விலங்கை உடைத்தெறிய வழிதேடுகிறது. விடுதலையை விரும்பும் ஒவ்வொரு பெண்ணுக்கும் தன்னம்பிக்கையை ஊட்டக்கூடிய வகையிலே மணமேகலைப் படைக்கப்பட்டுள்ளது.

முனைவர் சு.சீனிவாசன் – இந்தியா



# குறுந்தொகை முல்லைத்திணையில் தலைவியின் களவுக்கால நிலைகள்

சங்க இலக்கியங்கள் என்பவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவ்விலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்வியலை எடுத்துரைப்பன. எட்டுத்தொகை நூல்களுள் நல்ல என்னும் அடை மொழியோடு விளங்குவது குறுந்தொகை என்பதிலிருந்து இந்நூலின் தன்மையை அறியமுடியும். முல்லை என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். காடும், காடு சார்ந்த இடம் முல்லை நிலம். செம்மண் பரந்திருத்தலால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நிலம் முல்லை மலரைத் தழுவிப் பெயரிடப்பட்டது. 'மாயோன் மேய காடுறை உலகமும்' எனத் தொல்காப்பிய நூற்பா முல்லைப் பற்றிக் கூறுகிறது. முல்லைத் திணையில் தலைவி கூற்றாக முப்பது பாடல்கள் அமைந்திருக்கின்றது. இப்பாடல்களில் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை, பல நிலைகளில் பேசப்படுகின்றது. இவற்றில் தலைவி எவ்வெவ் சூழல்களில் தன் நிலைகளை உணர்ந்து ஆற்றிக்கொள்கிறாள் என்பதை இக்கட்டுரை விரிந்துரைக்கிறது.

பொதுவாகத் தலைவியின் நிலைகளைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் கொள்ள இடம் உண்டு. 1.தலைவி தன்னையே ஆற்றிக்கொள்ளுதல் 2.தலைவியை ஊரார் அலர் தூற்றல் 3.தலைவனுக்காகத் தலைவி காத்திருத்தல் 4.தலைவன் தன்னை நினைத்து ஏங்குவாரோ என தலைவி எண்ணுதல் 5.தலைவன் பிரிவால் தலைவிக்கு ஏற்படும் பசலை நோய் 6.தலைவன் வராமையால் தலைவியின் வருத்தம் 7.தலைவியின் களவுகால நினைவுகள் 8.தலைவனை நினைத்து தலைவி ஆற்றியிருப்பது ஆகியனவாம்.

**ஆற்றுதல்**

ஆற்றுதல் என்பது வருந்தாமையாகும். அதாவது, கார்க்காலத்தில் வருவேன் என்று பிரிந்த தலைவன் எப்படியும் காலம் தவறாமல் வந்துவிடுவார். ஆதலினால் இதனை உண்மையான கார்க்காலத் தொடக்கமாகக் கொள்ள மாட்டேன் என்று தலைவி தன்னையே ஆற்றிக்கொள்வதாகக் கூறுவதாகும்.

**தலைவி தன்னையே ஆற்றிக்கொள்ளுதல்**

தலைவி, தோழியிடம் வண்டுகள் வந்து படியும்படியாகச் செறிந்து மலர்ந்த பூங்கொத்துக்களைக் கொண்ட மகளிருடைய கூந்தலைப் போல கண்ணுக்குக் காட்சி நல்கும் புதிய பூக்களைக் கொண்ட கொன்றை மரங்களையுடைய காடானது இது கார்ப்பருவம் என்று உரைத்த மொழியை அத்தலைவர் பொய் கூறமாட்டார் என ஏற்கவில்லை. கார்ப்பருவம் வந்தவிட்டது என்று கொன்றையுடன் தோன்றும் காடு கூறுவதை ஏற்க மறுத்து என் தலைவன் பொய் கூறமாட்டான் என்று தலைவி தன்னையே ஆற்றிக்கொள்ளும் மனநிலையைக் காண முடிகிறது. இதனை,

> “வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு
> பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
> கதுப்பிற் தோன்றும் புதப்பூங் கொன்றைக்
> கானம் கார்எனக் கூறினும்
> யானோ தேறேன் அவர்பொய் வழங் கலரே” (குறுந். 21)

இப்பாடல் வழி தலைவி தன்னையே ஆற்றிக்கொள்வதையும் தற்கால நாகரிக உலகிலும் தலைவனை நினைத்து தலைவி காத்திருக்கும் நிலையையும் காண முடிகிறது. நம் சங்ககால முன்னோர் மரபு

வழிப்பட்ட காதல் இன்றைய நிலையில் சிறு சிறு மாற்றங்கள் இருப்பினும் அதன் தொடர்ச்சி இருந்து கொண்டிருப்பதை அறிய முடிகிறது.

**தலைவியை ஊரார் அலர் தூற்றும் நிலை**

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் குறிப்பிட்ட காலத்திலும் வராமல் காலம் தாழ்த்த ஊரார் பழிப்புரைப்பதை கூறுவது அலர். இதனை,

"களவுங் கற்பும் அலர்வரை வின்றே" (தொல்.அகம்:களவு. 21)

களவொழுக்கம், கற்பொழுக்கம் ஆகிய இரண்டிலும், அலர்(பழி) தூற்றுதல் என்பது வரையறை செய்த தொன்றன்று. ஒரேவழி நிகழ்தலும் உண்டு, நிகழாமையும் உண்டு என்கிறார் தொல்காப்பியர். ஊரார் அலர் தூற்றுவதைத் தலைவி, வேப்பமரத்தினது ஒள்ளியவான பூக்களாகிய புதுவருவாயான இளவேனிற் காலம் என்னுடைய தலைவன் இல்லாமல் கழிவதோ? தலைவன் பிரிந்து சென்றமையால் கொடியோர்களாகிய மகளிர் பலர் அலர் தூற்றினர். இது ஆற்றின் அருகே ஒரு அத்திமரத்தினது ஒரு பழமானது ஏழுநண்டுகள் காலால் சிதைத்துக் குழைவது போல குழைந்து நான் வருந்தும்படி அலர் கூறிக் 'கல்'லென்ற ஆரவாரத்துடன் முழங்கின என எண்ணுகிறாள். மேலும் தலைவன் இளவேனிற் காலத்தில் திரும்புவதாக தலைவியிடம் கூறினான். ஆனால் வராமல் காலம் தாழ்த்த, ஊராரின் பழிப்புரை அடங்கவில்லை என்பதைத் தலைவி கூறுகிறாள். இதனை,

"கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ...
குழைய கொடியோர் நாவே
காதலர் அகல கல்லென்றவ்வே" (குறுந். 24)

என்னும் அடிகள் உணர்த்துகிறது. இப்பாடலின் மூலம் தலைவன் வாராமையால் பிரிவுத்துயரில் மெலிந்த தலைவி ஊரார் தூற்றும் அலரால் மேலும் மெலிந்து காணப்படும் நிலையைக் காணமுடிகிறது. இவ்அலர் துற்றல் என்னும் கருத்தானது இன்று பெரும்பாலும் கிராமபுறங்களில் காண முடிகிறது. நகர்புறங்களில் காண்பதற்கு வாய்ப்பு குறைவாகவே இருக்கிறது. காரணம் நகரத்தில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் பழகும் தன்மை குறைந்து வருகிறது எனலாம். சமூகத்தில் எல்லோராலும் அறியப்படுகின்ற, சிறந்து விளங்குகின்ற

கலைஞர்கள் அல்லது தொழிலதிபர்களின் காதல்கள் ஊடகங்களில் அலர் தூற்றுவது நோக்கத்தக்கது.

**தலைவனுக்காகத் தலைவி காத்திருத்தல்**

காத்திருத்தல் என்பது பிரிந்து சென்றவர் வரும்வரை அவருக்காக காத்திருப்பது. இக்காத்திருத்தலின் போது தலைவி கீழ்க்கண்ட நிலைகளில் வருந்தகிறாள்.

**மேகங்கள் நகைப்பிற்கு ஆளாகும் தலைவியின் வருத்தம்**

தலைவி தோழியிடம், இளமையினது அருமையினை எண்ணிப் பாராதவராய்ப் பொருளை விரும்பி என்னைப் பிரிந்து சென்ற தலைவர் இவ்விடத்திற்கு இன்னும் மீண்டு வந்தாரில்லை. அவர் எவ்விடத்தில் உள்ளாரோ என்று கேட்பது போல குளிர்ச்சியையுடைய கார்க்காலம் முல்லைக்கொடியினது தொகுதியான முகையைத் தன் விளங்கும் பற்களைக் கொண்டு நம்மைப் பார்த்து சிரிக்கின்றது. இதனை,

"இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்...
தொகைமுகை இலங்கு எயிறு ஆக
நகுமே தோழி நறுந்தண் காரே." (குறுந். 126)

இவ்வடிகள் உணர்த்துகிறது. இப்பாடல் வழி தலைவனுக்காகத் தலைவி காத்திருந்த நிலையை அறியமுடிகிறது. இதே போன்று 110, 155, 194, 220, 314 ஆகிய பாடல்களிலும் தலைவனுக்காகத் தலைவி காத்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

**தலைவனது தேர் வரவில்லை என வருந்தும் நிலை**

தலைவி தோழியிடம், உழவர்கள் காலையில் விதைப்பதற்காக விதையுடன் எடுத்துச்சென்ற சிறிய பனையோலைப் பெட்டிகள் மாலையில் அவர்கள் வீட்டிற்கு மீளும் காலத்து மலர்கள் நிறைந்து வழியுமாறு மாலைப்பொழுது வந்தது. தெளிந்த ஓசை பெற்ற மணிகள் மரங்கள் அடர்ந்த குறுங்காட்டில் ஒலிக்கும்படி அரிதான பாலை வழியைக் கடந்து மாலைக் காலத்தில் மிக்க சொல்லும் பேச்சு இன்னும் வரவில்லை. மாலைக்காலம் வந்தும் தலைவர் வரவில்லை என்று கூறுகிறாள். (பாடல் எண்: 155)

**மேகம், மயில் கண்டு வருந்தும் தலைவி**

*மின்னல் வெளிப்பட மேகம் எழுந்து வானில் ஒலிக்கின்ற செயல் மற்றும் காட்டிலுள்ள மயில்கள் விரைவனவாய் ஆரவாரிக்கும். இங்ஙனம் இரண்டும் சேர்ந்து கார்ப்பருவத்தைக் காட்டுகிறது. எனவே, கார்ப்பருவம் வந்து கூடியமையினால் என் உள்ளம் கலங்குகிறது என்று தலைவி தலைவனை நினைத்துத் தோழியிடம் கூறுகிறாள். (பாடல் எண்: 194)*

**முல்லைமலர் மணம் விசுவதைப் பார்த்துத் தலைவி வருந்ததல்**

*முன்பு பெய்த மழையினால் தழைத்த புனத்தில் முல்லை மலரானது பூத்து மணம்வீசி கார்ப்பருவத்தை உணர்த்துகிறது. ஆனாலும் பொருள் ஈட்டச்சென்ற தலைவர் வாராராயினார். நம்பால் அவர் வாராதிருக்கின்ற இந்நிலையினை நீயும் காண்பாயாக என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். (பாடல் எண்: 220)*

**தலைவன் தம்மைத் தழுவ வரவில்லை என வருந்துதல்**

*தலைவி தோழியிடம் துன்பத்தைச் செய்யும் இடங்களையுடைய பாலை நிலத்தைக் கடந்து சென்றவர் மின்னல் போல் ஒளிவிடும் ஆபரணங்களை அணிந்த இளமுலைகள் அழுந்தும்படியாக நம்மைத் தழுவுவதற்கு வாராராயினர் என்று கூறி வருந்தகிறாள். (பாடல் எண்: 314) மேற்கண்ட பாடல்களை நோக்கும் பொழுது தலைவனுக்காகக் காத்திருந்த தலைவியின் நிலையினை, 1.மாலைக் காலம் வந்தும் தலைவர் வரவில்லை என்று தலைவி கார்ப்பருவம் கண்டு வருந்தும் நிலை, 2.கார்ப்பருவம் வந்து கூடியமையினால் என் உள்ளம் கலங்குகிறது என்று தலைவனை நினைத்துத் தலைவி தோழியிடம் கூறி வருந்தும் நிலை, 3.தலைவன் வாராதிருக்கின்ற இந்நிலையினை நீயும் காண்பாயாக என்று தலைவி தோழியிடம் கூறும் நிலை, 4.தன்னைத் தழுவி மகிழ்வதற்குத் தலைவன் இன்னும் வாராராயினார் என்று தலைவி தோழியிடம் கூறி வருந்தும்நிலை என்றவாறு வெளிப்படுவதைக் காணமுடிகிறது.*

**தலைவன் என்னை நினைத்து ஏங்குவாறோ? எனத் தலைவி எண்ணுதல்**

*ஏங்குதல் என்பது தன் மனதுக்குப் பிடித்த ஒன்றை நினைத்துக் கொண்டே இருத்தல் நிலையைக் குறிக்கும். பிரிந்து சென்ற*

தலைவனை நினைத்து தலைவி ஏக்கமுறுதலைச் சான்றாக்கலாம். தலைவி தோழியிடம், பெரிய குளிர்ச்சியையுடைய மழைக்காலத்துக்கு உரிய அறிவின்மையையுடைய பிச்சியின் அரும்புகள் மாரிக்காலத்திற்கு முன்பேயே மிகுதியும் சிவந்து காணப்படுகின்றன. அதனைக் கண்டு யானோ கார்ப்பருவம் என்று மயங்கமாட்டேன். ஆயினும் பிரிந்து என்பால் இப்பொழுதும் மீண்டு வாராது தனித்திருப்பவராகிய தலைவர், அருவியானது பெரிய மலையிலே தத்தி விழும்படி தொகுதியாகிய பெரிய மேகங்கள் முழங்கும் ஓசையை நடுஇரவில் கேட்பாராயின், பிரிவுத் துயரால் மேலும் என்ன நிலையினை எய்துவாரே? அதனை எண்ணி யான் மயங்குவேன் என்று எடுத்துரைக்கிறாள். இதனை,

“பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே...
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதரும் குரலே” (குறுந். 94)

இப்பாடலின் மூலம் அறிய முடிகிறது. தலைவி, தலைவன் தன்னை நினைத்து ஏங்குவாரோ? என நினைத்துப் பாடுவது இங்கு புலனாகிறது.

**தலைவியின் பசலை நோய்**

பசலை நோய் என்பது தலைவியானவள் தன் தலைவனை நினைத்து நினைத்து உடல் மெலிந்து தான் செய்வதறியாமல் இருப்பது பசலை. தலைவி தோழியிடம் நான் பசலை படர்ந்து துன்பமுறுதலை அத்தலைவர் அறிந்திலர். அறிவாராயின் விரைந்தெய்த வாராமல் இருப்பாரோ? என் துயர நிலையைச் சென்று உணர்த்துவார் உளராயின் அவர் மீண்டுவரத் தூண்டுதலாயிருக்கும் எனக் கூறுகிறாள். இதனை,

“இன்னள் ஆயினள் நன்னுதல் என்றுஅவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத்து அலர்சில கொண்டே” (குறுந். 98)

இப்பாடல் எடுத்துரைக்கிறது. இதன்மூலம் தலைவி, தலைவன் வராமையை நினைத்துத் துன்பப்பட்டுப் பசலை நோய்க்கு ஆளாகும் நிலையைக் காணமுடிகிறது. மேலும், தலைவி பசலை நோய்

*வயப்படுதல் குறித்து 183, 289 ஆகிய பாடல்கள் பேசுகின்றன. மழைமுகம் காணாது பொலிவிழந்திருந்த காயாமரத்தின் மலர்கள் நிறைந்த காட்டிடத்தில் எம்மைப் பிரிந்து சென்று தங்கிய நாட்டிலே கொன்றை மரத்தின் மலர்கள் நம்மைப் போல் பசலை நிறத்தை அடையும். இக்காலத்தில் சிறிய தலையையுடைய பெண்மானை விட்டுப் பிரிந்த ஆண்மானையும் நம் தலைவர் காண்பாரோ? அப்படி காண்பாராயின் நம் நிலையினை உணர்ந்து விரைந்து வந்துவிடுவார் என தலைவி தோழியிடம் கூறுகிறாள். (பாடல் எண்: 183)*

*துன்பம் தரும் காமநோய் வளர்கின்ற பிறைபோல மேன்மேலும் பெருக்கமுற்று உடல்மெலிய முன்கை வளைகளைக் கழலப் பண்ணினமையால் தளிரைக் கசக்கினாற் போன்றநிலையை அடைந்தேமாய் மிக மெலிந்து துன்பம் தீர்ப்பதற்குரிய தலைவர் பக்கத்தில் இல்லாமையினால் நாம் துன்பப்படுவது அல்லாமல் இம் மழையும் மயங்கிப் பெய்தது. தலைவரைக் கொடியர் என உரைக்கின்றமை நோக்கி மேனிவேறுபட்டேன் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். (பாடல் எண்: 289)*

*இப்பாடல்கள் வாயிலாக தலைவியின் பசலை நோயினை அறிய முடிகிறது. மேற்கண்ட பாடல்களை நோக்கும் பொழுது, தலைவியின் பசலையை எண்ணிப் பார்க்கும் பொழுது, 1.பசலை படர்வதை தலைவர் அறியவில்லை என்பதையும், 2.கார்கால குறியீடுகளைப் பார்ப்பாராயின் வந்திருப்பார் என்பதையும், 3.தலைவன் பக்கத்தில் இல்லாமையால் தலைவியானவள் துன்பப்படும் நிலையினையும் காண முடிகிறது.*

**தலைவன் வராமையால் தலைவியின் வருத்தம்**

*தலைவன் வராமையால் தலைவியானவள் எவ்வாறு வருத்தத்தில் இருக்கிறாள் என்பதனை, தோழியானவள் இது கார்ப்பருவம் அன்று என்று தலைவியிடம் கூற அதை மறுத்த தலைவி கொன்றை மரம் குருத்த மரத்தோடு சேர்ந்து சுழலும் மிக்க குளிர்ச்சியையுடைய இந்தக் காலத்தையும் கார்காலம் அன்று நீ கூறுவாயாயின், இப்படித் தோன்றுவது எல்லாம் கனவுதானோ? யான் கேட்கிறேன். எதிர்மாற்றம் கூறுவாயாக என்று தலைவி வினவுகிறாள். இதனை,*

"குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்
கார்அன்று என்றி ஆயின்
கனவோ மற்றுஇது வினவுவல் யானே." (குறுந். 148)

*இப்பாடலின் வாயிலாக தலைவனை நினைத்த தலைவியின் வருத்தத்தை காண முடிகிறது. இதேபோன்று 186, 188, 234, 240, 387 ஆகிய பாடல்கள் தலைவியின் வருத்தத்தை எடுத்துரைக்கிறது.*

*தலைவி தோழியிடம் மிகுந்த முழக்கத்தையுடைய இடியேற்றோடு கார்க்காலமும் வந்து கூடின. முல்லை நிலத்திலுள்ள முல்லை மலர்களும் பூத்து குழுங்குகின்றன. எனவே, தலைவன் வாராமையால் தூக்கமின்றி வருந்துகிறேன் என கூறுகிறாள். (பாடல் எண்: 186)*

*தலைவி தோழியிடம், முல்லைக் கொடிகளிலே தோன்றிய அரும்புகள் முதிர்ச்சிபெற்றன. குளிர்ந்த கார்க்காலத்தைத் தழுவி முல்லை மலரானது பூத்து குழுங்கின. என்னுடைய அழகு பொருந்திய மேனி கெட கை வளையல்கள் நழுவும் படியான மாலைக்காலமும் வந்தது. ஆனால், என் தலைவர் இன்னும் வந்திலர் என்று வருந்துகிறாள். (பாடல் எண்: 188)*

*தலைவி தோழியிடம், அறிவு மயக்கமுற்றோர் சூரியன் மறைந்ததால் இரவுப்பொழுது உறுகின்ற வேளையில் முல்லை மலர்கள் வேளையே மாலைக்காலம் என்பர். ஆனால் துணை இல்லாதவருக்கு இராப்பொழுது புலர்கின்ற விடியற்காலமும் மாலைக்காலமாகும் பகற்காலமும் மாலைக்காலமாகும். அதாவது எல்லாப் பொழுதுகளுமே துன்பம் பயப்பனவாக அமையும் என்று வருந்துகிறாள். (பாடல் எண்: 234)*

*தலைவி தோழியிடம், குளிர்ச்சியையுடைய புதரின் மேலே படர்ந்த பசிய கொடியாகிய அவரையின் மலர்கள் முல்லை மலர்களோடு நெருங்கும்படி வாடைக்காற்று வீசுகின்றது. தலைவனது பிரிவை அவருடைய குன்றத்தைப் பார்த்து ஆற்றியிருந்தேன் அதுவும் இப்பொழுது இருளில் மறைவதால் ஆற்றினாயினேன் என்று தலைவி கூறி வருத்தமுறுகிறாள். (பாடல் எண்: 240)*

*தலைவி தோழியிடம், பகற்பொழுது நீங்கிப் போக, முல்லைக் கொடிகள் மலரத் தொடங்கச் சூரியனது வெப்பம் குறைந்த செயலறுதற்குரிய மாலைக் காலத்தை உயிரை எல்லையாகக் கொண்டு கடந்தேன். அதன்பின் வருகின்ற இரவின் மிகுதி கடலைக் காட்டிலும் மிகப் பெரிதாயுள்ளது. அதனைக் கடக்க முடியாதே! மாலைக் காலத்தை மட்டும் கடத்தலால் நேரும் பயன் யாது? என்று வனவி வருத்தமுறுகிறாள். (பாடல் எண்: 387)*

மேற்கண்ட பாடல்களை நோக்கும் பொழுது, தலைவன் வராமையால் தலைவியின் வருத்தத்தை, தோழி தலைவியிடம், இது கார்ப்பருவம் அன்று என்று கூறியதற்கு மறுப்பு தெரிவித்த தலைவி தோழியிடம் இது கனவுதானே என்று கூறி வருந்தும் நிலை, தலைவி தோழியிடம், தலைவன் வாராமையால் தூக்கமின்றி வருந்துகிறேன் என கூறும் நிலை, கார்காலம் வந்தும் தலைவர் இன்னும் வரவில்லை என்று வருந்துவது, தலைவி தோழியிடம், துணை இல்லாதவருக்கு எல்லாப் பொழுதுகளுமே துன்பம் பயப்பனவாக அமையும் என்று கூறி வறுத்தமுறுவது, தலைவி தோழியிடம், தலைவனை நினைத்து ஆற்றேனாயினேன் என்று கூறியது, தலைவி தோழியிடம், மாலைக் காலத்தை மட்டும் கடத்தலால் நேரும் பயன் யாது? என்று வினவுவது போன்ற நிலைகளில் வெளிப்படுவதைக் காண முடிகிறது.

## தலைவியின் களவுக்கால நினைவுகள்

களவுக்காலம் என்பது தலைவனும் தலைவியும் திருமணத்திற்கு முன் சேர்ந்திருப்பதைக் கூறுவது. தலைவி தன் களவுகால நினைவுகளை நினைத்துப் பார்க்கின்றாள். தலைவி தோழியிடம், அழகிய சுனையிடத்தே உள்ள பிளந்த வாயையுடைய தேரைகள் தட்டைப்பறை போல ஒலிக்கும் நாட்டையுடைய தலைவன் களவுக்காலமாகிய முந்தைய மாதத்தில் நெடிய வெண்ணிலா ஒளியிலே என் நீண்ட தோள்களைத் தழுவினான். அதனால் இப்பொழுதும் அவன் மேனியில் அணிந்திருந்த முல்லை முகையின் மணம் என் தோள்களிலே கமழும். இதனை,

> "மணந்தனன் மன்நெடுந் தோளே
> இன்றும் முல்லை முகைநா றும்மே." (குறுந். 193: 6–7)

என்ற பாடலின் வாயிலாக எடுத்துரைக்கிறாள்.

## தலைவனை நினைத்து, தலைவி ஆற்றியிருத்தல்

ஆற்றியிருத்தல் என்பது தலைவன் நம்மை மறந்தாலும் நாம் அவரை மறக்க மாட்டோம் என்று தலைவி தோழியிடம் ஆற்றியிருப்பது. தலைவி தோழியிடம், கார்காலத்துப் பெய்தற்குரிய மழையையுடைய மாலைக்காலத்தில் வரும் கரிய மேகங்கள், உழவர்க்கு இனிய ஓசையையுடைய இடியேற்றை உடையவாகி முழங்கும். முன்பு மழை பெய்த குன்றிடத்தே உள்ள மணக்கின்ற மலர்களை காற்று தாங்கி

வந்து தர, அருவி நீரும் விழும். கார்ப்பருவத்திற்கு முன்பே வருவேன் என்று கூறிச் சென்ற தலைவன் இன்னும் வந்து சேர்ந்தாரில்லை. அவர் உறுதியாக நம்மை மறந்தார் போலும் ஆயினும் நாம் அவரை மறவோம். இதனை,

"இழிதரும் புனலும் வாரார் தோழி
மறந்தோர் மன்ற மறவாம் நாமே" (குறுந். 200: 3–4)

இப்பாடல் மூலம் தலைவனை நினைத்துத் தலைவி ஆற்றியிருத்தலை அறிய முடிகிறது. இக்காலத்தோடு ஒப்பிடும்போது ஒரு பெண்ணும் ஆணும் காதலிக்கிறார்கள். ஏதோ ஒரு காரணத்தால் காதலியைக் காதலன் சிறிது காலம் பிரிய நேர்கிறது. எனவே, காதலன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பி வருவதாக சொல்லிச் செல்கிறான். காதலியானவளும் காத்திருக்கிறாள். பின்பு, அவன் குறிப்பிட்ட காலமும் வருகிறது ஆனால் அவன் வருவதாகத் தெரியவில்லை என்றதும் தன் குடும்பச் சூழலைக் கருத்தில் கொண்டு வேறு ஒரு தலைவனை மணக்கும் தலைவியையும் காண முடிகிறது. ஆனால் சங்கக் காலத்தில் தலைவன் வரும் வரை தலைவியானவள் தலைவனையே நினைத்துக் காத்திப்பதாகக் குறுந்தொகை பாடல்கள் வாயிலாக அறிய முடிகிறது. தலைவி தன்னையே ஆற்றிக்கொண்டு காத்திருக்கும் நிலையைக் காண முடிகிறது. தலைவியை ஊரார் அலர் தூற்றுதலை அறிய முடிகிறது. தலைவனுக்காகக் காத்திருந்த தலைவியின் நிலையினை, மாலைக் காலம் வந்தும் தலைவர் வரவில்லை என்று தலைவி கார்பருவம் கண்டு இரங்குவது, கார்ப்பருவம் வந்து கூடியமையினால் என் உள்ளம் கலங்குகிறது என்று தலைவனை நினைத்துத் தலைவி தோழியிடம் கூறியது, தலைவன் வாராதிருக்கின்ற இந்நிலையினை நீயும் காண்பாயாக என்று தலைவி தோழியிடம் கூறியது, தன்னைத் தழுவி மகிழ்வதற்குத் தலைவன் இன்னும் வாராராயினார் என்று தலைவி தோழியிடம் கூறியது, போன்ற கருத்துக்கள் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. தலைவி, தலைவன் தன்னை நினைத்து ஏங்குவாரோ? என நினைத்துப் பாடுவது புலனாகிறது. தலைவியின் பசலையை எண்ணிப் பார்க்கும் பொழுது, பசலை படர்வதைத் தலைவர் அறியவில்லை என்பதையும், கார்காலக் குறியீடுகளைப் பார்ப்பாராயின் வந்திருப்பார் என்பதையும், தலைவன் பக்கத்தில் இல்லாமையால் தலைவியானவள் துன்பப்படும் நிலையினையும் காணமுடிகிறது. தலைவன் வராமையால்

தலைவியின் வருத்தத்தைத், தோழி தலைவியிடம், இது கார்ப்பருவம் அன்று என்று கூறியதற்கு மறுப்புத் தெரிவித்த தலைவி தோழியிடம் வினவியதையும், தலைவி தோழியிடம், தலைவன் வாராமையால் தூக்கமின்றி வருந்துகிறேன் எனக் கூறியதையும், கார்க்காலம் வந்தும் தலைவர் இன்னும் வரவில்லை என்று வருந்துவதையும், தலைவி தோழியிடம், துணை இல்லாதவருக்கு எல்லாப் பொழுதுகளுமே துன்பம் பயப்பனவாக அமையும் என்று கூறியதையும், தலைவி தோழியிடம், தலைவனை நினைத்து ஆற்றேனாயினேன் என்று கூறியதையும், தலைவி தோழியிடம், மாலைக் காலத்தை மட்டும் கடத்தலால் நேரும் பயன் யாது? என்று வினவுவதையும் அறிய முடிகிறது. தலைவி தன் களவுக்கால நினைவுகளை நினைத்துப் பார்க்கும் நிலையைக் உணர முடிகிறது. தலைவனை நினைத்துத் தலைவி ஆற்றியிருத்தலை அறிய முடிகிறது. சங்கக் காலத்தில் தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையிலும், கற்பு வாழ்க்கையிலும் சிறந்து விளங்கினர். அதனால் தலைவனுக்காகத் தலைவி காத்திருத்தல் புலனாகிறது. ஆனால், தற்காலத்தில் கற்பு வாழ்க்கையைத் தொடர வாய்ப்பு குறைவாகவே உள்ளது. காரணம் சங்கக் காலத்தில் சாதி, மதம், போன்ற பாகுபாடுகள் இருந்ததில்லை. ஆனால் தற்காலத்தில் இத்தகையப் பாகுபாடுகள் நிறைந்து கிடைக்கிறது. இவ்வகைப்பட்டச் சமூக சூழ்நிலையே அவர்களை கற்பு வாழ்க்கையை தொடர விடாமல் தடுக்கிறது.

எம்.எம்.ஜெயசீலன் – இலங்கை




# பெரிய எழுத்து நூல்கள் - சில குறிப்புகள் -

வெகுசனத் தமிழ்ப் பண்பாட்டில் பெரிய எழுத்துப் பொஸ்தகங்கள் என்ற நூல்கள் இற்றைவரை புழக்கத்தில் உள்ளன. எளிதாக வாசிக்கக்கூடிய வகையில் வழமையான எழுத்துரு அளவிலிருந்து பெரிதாக அச்சிடப்பட்டுள்ள இந்நூல்கள், 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அதிகமாக அச்சிடப்பட்டுள்ளன. இந்நூல்கள் பிற்காலத்தில் மெல்ல மெல்ல செல்வாக்கிழந்து சென்றாலும் சடங்கு, வழிபாடு, கலை என்ற நிலையில் இன்றும் நிலைபெற்றே உள்ளன. எழுத்துக்களைப் பெரிதாக அச்சிட்டதன் முதன்மை நோக்கம், எளிமையான தொடர்களை வாசிக்கக்கூடிய அளவிலான எழுத்துப் பயிற்சியைப் பெற்ற முதலாம் தலைமுறை வாசிப்பாளர்கள் இலகுவாக வாசிப்பதற்காகும். உரைநடையில் மிகக் குறைந்த விலையில் மலினமான தாளில் (சாணித்தாள்), நேர்த்தியான வடிவமைப்பற்று ஐதீகப் படங்களுடன் இவை அச்சிடப்பட்டுள்ளன. இவையாவும் வாசிப்பு எளிமைக்கான உத்திகளாகும். அத்துடன் இந்நூல்கள் வெறுமனே வாசிப்பு எளிமைக்காக மட்டும் அச்சிடப்பட்டவையாகத் தெரியவில்லை. தமிழில் அச்சுப் பண்பாடு பரந்தளவில் பரவலாக்கம் பெற்றபோதே இந்நூல்கள் அச்சாக்கம் பெற்றுள்ளன.

தமிழ்ச் சூழலில் அச்சுமுறைமை போர்த்துக்கேயர் காலத்தில் அறிமுகமாகியிருந்தாலும் 1835ஆம் ஆண்டே சுதேசியர்கள் அச்சினைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்றனர். சுதேசியர்கள் அச்சுரிமையைப் பெற்றாலும் சுதேசிய மேட்டுக்குடிகளின் ஏகபோக உரிமமாகவே அச்சு நீண்ட காலம் செயற்பட்டுள்ளது. ஏறக்குறைய 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே அச்சு ஜனநாயகமயப்படத் தொடங்கியது. அக்காலத்திலேயே இத்தகைய பெரிய எழுத்து நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. உதாரணமாக, நல்லதங்காள் கதை 1869, தேசிங்குராஜன் கதை 1869, கோவிலன் கதை 1873, மின்னொளியாள் குறம் 1874, சித்திரபுத்திரநாயனார் கதை 1876, திரௌபதி குறம் 1880 போன்ற பெரிய எழுத்து நூல்கள் தொடக்க காலத்தில் அச்சிடப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக 20ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியிலேயே அதிகமான பெரிய எழுத்து நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. எனவே, அச்சுப் பண்பாட்டின் பரவலாக்கத்துக்கும் இந்நூல்களின் அச்சாக்கத்துக்கும் இடையே நெருங்கிய உறவிருந்திருக்க வேண்டும். அச்சுத் தொழில்நுட்பத்தின் பரவலாக்கம் நூல் உற்பத்தியிலும் நுகர்விலும் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒரே நேரத்தில் அதிக பிரதிகள், குறைந்த விலை என்பவற்றால் நூல்களின் பயன்பாட்டு எல்லை விரிவாக்கம் பெற்றது. வாசிப்பு, வாசகர் வட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதுவரை காலமும் சமூகத்தின் மேற்தளத்தில் வாழ்ந்த ஒரு குறுகிய வட்டத்தில் மட்டும் தேங்கிக் கிடந்த அறிவுச் சொத்துக்கள் சாதாரண மக்களை நோக்கி நகரத்தொடங்கின. அந்நகர்வு மொழி இலக்கியங்களின் பண்பிலும் வாசிப்பு முறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. அதன்போது மேட்டுக்குடியினரின் வாசிப்புத் தேவையை நிறைவு செய்யும் வகையில் செவ்வியல் நூல்களைப் பதிப்பித்தல், புதிய நூல்களை உருவாக்குதல், பத்திரிகை-இதழ்களை வெளியிடுதல் என்பவை இடம்பெற்றபோது அதற்குச் சமாந்தரமாகச் சாதாரண மக்களின் வாசிப்புத் தேவையை நிறைவு செய்யும் வகையிலான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பிரதானமானதாகவே பெரிய எழுத்து நூல்கள் அமைந்துள்ளன. அச்சு சுதேசியமயப்பட்டபோது மேட்டுக்குடியினர் அடித்தட்டு மக்கள் மத்தியில் நிலவிய சமய வழிபாட்டு மரபுகளையும் இலக்கிய வெளிப்பாடுகளையும் நிராகரித்ததோடு அவற்றுக்கு மாறாகத் தமது

வழிபாட்டு மரபுகளையும் இலக்கிய வெளிப்பாடுகளையும் அச்சுவாகனம் ஏற்றி ஆவணப்படுத்த முயன்றனர். உதாரணத்துக்கு, ஆறுமுகநாவலரின் அச்சுச் செயற்பாடுகளை நோக்கின், அவர் தானே எழுதி அச்சிடல், ஏற்கனவே எழுதப்பட்டவற்றை அச்சிடல் என இரு தளங்களின் செயற்பட்டுள்ளார். இவ்விருவகை அச்சுச் செயற்பாடுகளும் சாதாரண அடித்தட்டு மக்களை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டவை அல்ல அத்துடன் அடித்தளமக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கைகள், வழிபாட்டு மரபுகள் என்பவை சார்ந்ததாக அல்லாமல் மேட்டுக்குடி சார்ந்தனவாகவே அவை அமைந்துள்ளன. இந்நிலையிலேயே அச்சுத் தொழில்நுட்பம் சாதாரண மக்களைச் சென்றடைந்தபோது அவர்கள் மேட்டுக்குடி அச்சுப் பண்பாட்டுக்கு மாறான அச்சுப் பண்பாட்டைக் கட்டி




எழுப்பியுள்ளனர். அதனாலேயே செவ்வியல் மரபுக்கு மாறாக சாதாரண மக்கள் மத்தியில் தேங்கிக்கிடந்த கதைமரபுகளை அச்சுவாகனம் ஏற்றி, அவற்றை மதச்சடங்குகளின் ஓரங்கமாக்கிக் கொண்டுள்ளனர். கிடைக்கப்பெற்றுள்ள பெரும்பாலான பெரிய எழுத்து நூல்கள், புகழேந்திப் புலவர் என்பவரால் எழுதப்பட்டதாகவே அச்சிடப்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் காலம்காலமாக நிலவி வந்த கதைமரபுகளை உரைநடையில் தரும் செயற்பாட்டை இவர் செய்திருக்கிறார். இந்நூல்கள் யாவற்றையும் புகழேந்திப் புலவரே எழுதினாரா அல்லது அவருடைய ஆக்கங்களால் ஈர்க்கப்பட்டுப் பின்வந்த நூல்களுக்கும் அப்பெயரே இடப்பட்டதா என்பதை நிரூபிக்க இன்னும் போதிய ஆதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை. இந்நூல்களில் விரியும் கதைகள் செவ்வியல் நூல்கள் இடம்பெறாத பல புதிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. குறிப்பாக, பெரிய எழுத்து நூல்களில் அதிகமானவை மகாபாரத, இராமாயண கதைகளைத் தழுவியவையாகவும் அவற்றில் வரும் பாத்திரங்களின் கதைகளை விபரிப்பதாகவும் அமைந்துள்ளன. கர்ணன், அர்ச்சுனன் பற்றிய கதைகளே அதிகம் உள்ளன. அக்கதைகள் பல, மகாபாரதத்தில் இல்லாதவையாகும். குறிப்பாக, கர்ணன் பற்றிய கதைகளை எடுத்துக்கொண்டால், கர்ணமகாராசன் சண்டை,

பொன்னுருவி மசக்கை ஆகியவை கர்ணனை நேரடியாகவே பாடுகின்றன. புலந்திரன் களவுமாலை, அபிமன்னன் சுந்தரி மாலை, ஏணி ஏற்றம், பஞ்சபாண்டவர் வனவாசம், திரௌபதை குறம் ஆகியவற்றிலும் கர்ணன் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. இவற்றுள் இடம்பெறும் பல செய்திகள் மகாபாரதத்தில் இடம்பெறாதவையாகும். உதாரணமாக, ஏணி ஏற்றத்தில் பாண்டவர்கள் வனவாசம் சென்ற பின்னர் அர்ச்சுனனின் மனைவி சுபத்திரை அல்லியிடம் அடைக்கலமடைகிறாள். துரியோதனன் சுபத்திரையை அடைய விரும்புகிறான். கர்ணன் அவனைத் தடுக்கிறான். அதனைக் கேட்காத துரியோதனன் சுபத்திரையைக் கவர்ந்துவர அல்லியிடம் செல்கிறான். அல்லி ஒரு மாய ஏணியை செய்து அதில் துரியோதனனை வைத்து அஸ்தினாபுரத்துக்கு அனுப்புகிறாள். யாராலும் துரியோதனனைக் காப்பாற்ற முடியவில்லை. இறுதியில் கர்ணன் அந்த ஏணியை காலால் உதைத்து அதன் பின்னேயே செல்கிறான். ஏணி மதுரைக்குச் செல்கிறது. மதுரை வந்த கர்ணனை அல்லி வரவேற்று உபசரிக்கிறாள். கர்ணன் துரியோதனனின் குற்றத்தைப் பொறுத்து மன்னிக்க வேண்டும் எனக்கேட்க, அவள் மன்னித்து விடுவிக்கிறாள். இக்கதை பாரதத்தில் இல்லாததாகும். அதேபோல பொன்னுருவி மசக்கையில் பொன்னுருவியை மயக்கிவிட்டு கர்ணன் உறவு கொள்வது பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. அர்ச்சுனனின் தமிழ்க் காதலிகள் பற்றியே ஏராளமான பெரிய எழுத்து நூல்கள் உள்ளன. அத்துடன் கர்ணன் பற்றிய கதைகளில் சாதிய வசவுகளும் எதிர்ப்புகளும் பரவலாக இடம்பெறுகின்றன. பொன்னுருவி, புலந்திரன், துரியோதனன் எனப் பலரும் சாதியம் எனும் ஆயுதத்தால் கர்ணனை வதைக்கின்றனர். இதனைச் சாதாரண மக்களின் வாழ்வில் இணைந்திருந்த சாதியத்தின் வெளிப்பாடாகக் கருதலாம். இன்னும் சீதை, தமயந்தி, நல்லதங்காள், அல்லி, திரௌபதி, பவளக்கொடி எனப் பல பெண்களின் துயரம் நிறைந்த வாழ்வு, அவர்களின் துக்கம், அவர்களின் ஆவேசம், சிந்தனைத் திறம், ஆளுமை, வெற்றி என்பவற்றைப் பல கதைகள் விபரிக்கின்றன. அவற்றில் இடம்பெறும் செய்திகள் சாதாரண மக்கள் மத்தியில் இப்பெண் பாத்திரங்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணர்த்துவதோடு அப்பெண் பாத்திரங்கள் வாயிலாகச் சாதாரண பெண்களின் வாழ்வியலும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையால் பெரிய எழுத்து நூல்களை வாசித்தல் என்பது முக்கியமான

பண்பாட்டியல் நடவடிக்கையாக மாறியது. அதனாலேயே அந்நூல்கள் இற்றைவரை அச்சிடப்பட்டு புழக்கத்தில் உள்ளன.

பெரிய எழுத்து நூல்களை அச்சிடலும் செவ்வியல் அச்சுக்கு மாறாகவே அமைந்துள்ளன. சுத்தப் பதிப்பு, மூலபாடம் என்பனவற்றுக்கும் பெரிய எழுத்துப் பொஸ்தகங்களுக்கும் சம்பந்தம் இல்லை. எழுத்துப் பிழைகள், வசனப்பிழைகள் பல உள்ளன. நேர்த்தியாக அச்சிடலிலோ நேர்த்தியாக கட்டுதலிலோ ஆரம்ப காலத்தில் அக்கறைகொள்ளவில்லை. அதேவேளை பெரிய எழுத்து நூல்களை நுகரும் முறையும் மேட்டுக்குடி மரபுக்கு மாறாகவே அமைந்துள்ளது. தமிழ்ச் சூழலில் அச்சுப் பண்பாட்டின் பரவலாக்கத்தினால் மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கத்தினரிடையே தனிமையிலும் மௌனமாகவும் வாசித்தல் நிலைபெற்றது (விரிவுக்கு: வேங்கடாசலபதி: 2002). ஆனால், வெகுசனப் பண்பாட்டின் பெரிய எழுத்து நூல்கள் இற்றைவரை வாய்விட்டு வாசிப்பதாகவும் கூட்டு வாசிப்பாகவுமே இடம்பெற்றுவருகின்றன. எனவே, பெரிய எழுத்து நூல்களானவை வெறுமனே வாசிப்பு எளிமைக்கான நூல்களாக மட்டுமல்ல அவை மேட்டுமைப் பண்பாட்டுக்கு எதிரான பண்பாட்டு வடிவமாகவும் விளங்கியுள்ளன.

வழிபாடு, சடங்கு, வாசிப்பு என்ற தளத்தில் முதன்மைப் பெற்றிருந்த இப்பெரிய எழுத்து நூல்கள் கல்வி நூல்களாகவும் பொழுதுபோக்கு வாசிப்பாகவும் துயர், சஞ்சலம் நீக்கும் மருந்தாகவும் கலை வெளிப்பாட்டுக் கருவியாகவும் சாதாரண மக்கள் மத்தியில் நிலைபெற்றிருந்துள்ளன. உதாரணமாக, மலையகத்தில் ஆரம்பத்தில் நிலவிய நிறுவனம் சாராத கல்வி முறையான லயன் பாடசாலையில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் பற்றி முழுமையான தகவல்கள் எம்மிடம் இல்லை. எழுத்து, வாசிப்பு, கணக்கு என்பன கற்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு வாசிப்பில் எவை வாசிக்கப்பட்டன என்ற கேள்வியைப் பலரும் எழுப்பி இல்லை. ஞானமுத்து அவர்கள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய ஒழுக்கம் சார்ந்த நூல்கள் கற்பிக்கப்பட்டதாகக் கூறுவதோடு எழுத்துக்களை வாசிக்க முடியாதவர்களுக்கு மாலை வேளையில் அல்லது விசேட நிகழ்வுகளில் வாசிக்க தெரிந்த ஒருவர் புராணங்களை, பண்டைய கதைகளை வாசித்துப் பொருள் கூறுவார் என்று கூறுகின்றார் (Gnanamuthu, *1977: 18*). இங்கு அவர் எவ்வகையான புராணங்கள் என்று

கூறவில்லை. மலையகச் சமய மரபோடு இணைத்து நோக்கும்போது செவ்வியல் புராணங்கள் மலையகத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றதாகத் தெரியவில்லை. எனவே, அங்கு இத்தகைய பெரிய எழுத்து நூல்களே வாசிக்கப்பட்டிருக்க வேண்டும் எனலாம். பொழுது போக்கு, கலை வெளிப்பாடு எனும்போது பல்வேறு கூத்துக்கள் இப்பெரிய எழுத்து கதைமரபுகளை அடிப்படையாகக் கொண்டு அரங்கேற்றப்பட்டுள்ளன. உதாரணமாக, பவளக்கொடி மாலை, அல்லிஅரசாணி மாலை, பாண்டவர் வனவாசம், அரிச்சந்திரன் கதை போன்றவற்றைக் குறிப்பிடலாம். பெரிய எழுத்து நூல்கள் பெரிதும் பாரத கதைமரபுகளையும் அதில் வரும் பாத்திரங்கள் பற்றிய கதைமரபுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதில் இடம்பெறும் பாத்திரங்களில் சாதாரண மக்கள் தம்மை இனங்கண்டதோடு அப்பாத்திரங்களின் துயரங்களில் தம் துயரைக் கண்டுள்ளனர். அத்தோடு அக்கதைகளில் இடம்பெறும் கதைத் தலைவன், தலைவி எல்லாத் துன்பங்களையும் கடந்து பெறும் வெற்றிகள் இவர்களுக்கு ஆறுதலைத் தந்துள்ளன. அதனால் அக்கதைகள் துயர், சஞ்சலம் நீக்கும் மருந்தாகவும் அமைந்திருந்துள்ளன. இன்றும் அப்புத்தளை பிரதேசத்தில் இடம்பெறும் நல்லதங்காள் சடங்கில் அதன் பாடல்களைப் பாடும்போது பல பெண்கள் அழுது புலம்புகின்றனர். இது நல்லதங்காளில் தம்மை, தம் போன்றவர்களை உணர்வதன் வெளிப்பாடே ஆகும். சி.வி. வேலுப்பிள்ளையின் வீடற்றவன் நாவலில் வரும் ஒரு காட்சியும் சஞ்சலம் நீக்க பெரிய எழுத்துப் புத்தகம் படித்தல், கேட்டல் இடம்பெறுவதை கூறுகின்றது. பெரியசாமி கங்காணி தன்னைத் தோட்டத்தைவிட்டு வெளியேற்றப் போகிறார்கள் என்ற அச்சத்தில், சஞ்சலத்தில் இருக்கும்போது அவர்கள் வீட்டுக்கு வரும் பழனிமாமா, ‘நளச்சக்கரவர்த்தி கதை, விக்கிரமாதித்தன் கதை இவைகளை நெடுநேரம் படிப்பார். பெரியசாமி கங்காணியும் காமாட்சி அம்மாளும்



வெகு ஆர்வத்தோடு கதையைக் கேட்டு சாந்தியடைவர்...' (வேலுப்பிள்ளை,1987: 80) இந்தக் குறிப்பு பெரிய எழுத்து நூல்கள் மன சாந்தியைத் தரும் நூல்களாகவும் விளங்கியமைக் காட்டுகின்றது. தமிழ் அச்சுப் பண்பாட்டில் பெரிய எழுத்துப் பொஸ்தகங்களின் அச்சாக்கமானது, வெகுசன அச்சுச் செயற்பாட்டின் ஓர் அங்கமாகவும், மேட்டுக்குடி அச்சுப் பண்பாட்டுக்கு எதிரான அச்சுச் செயற்பாடாகவும், வெகுமக்கள் மத்தியில் நிலவிய கதைமரபுகளை அச்சு வாகனமேற்றும் செயற்பாடாகவும், முதலாம் தலைமுறை வாசிப்பாளரின் வாசிப்புத் தேவையை நிறைவு செய்யும் அச்சு முறைமையாகவும் இடம்பெற்றுள்ளதோடு பின்நாளின் வெகுமக்களின் முக்கியமான பண்பாட்டியல் நடவடிக்கையாக மாறி சடங்கு, வழிபாடு, கலை முதலிய தளங்களில் புனித நூல்களாக நிலைபெற்றுள்ளன.

**உசாத்துணை நூல்கள்**


1. வேங்கடாசலபதி, ஆ. இரா,**நாவலும் வாசிப்பும் : ஒரு வரலாற்றுப் பார்வை,** நாகர்கோவில்: காலச்சுவடு, 2002.
2. வேலுப்பிள்ளை, ஸி.வி, **வீடற்றவன்,** சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், 1987.
3. *Gnanamuthu, G.A,* ***Education and the plantation workers in Sri Lanka,*** *Colombo: Council of Churches, 1977*

/ கட்டுரை /

ம.கலைச்செல்வன் – இந்தியா



# பகையின் நிலமே பாலை நிலம்

சங்ககால மக்களின் ஐவகை நிலப்பாகுபாட்டில் மணலும் மணல் சார்ந்த தன்மையதான பாலை நிலமும் ஒன்றாகும். இப்பாலைநிலம் குறித்த செய்திகள் பற்றி தமிழில் கிடைத்த முதல் நூலான தொல்காப்பியம் முதல் சங்கப்பாடல்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. இவ்-ஐவகை நிலப்பாகுபாட்டில் பாலைநிலத்தைக் குறித்த ஒரு நுண்வாசிப்பு இங்கு நிகழ்த்தப்படவுள்ளது. தமிழரின் நில வகைப்பாட்டில் உள்ள பாலை நிலமானது தமிழ்நாட்டின் எந்தப்பகுதியில் இருந்தது என்பதை இதுவரை அறிய இயலவில்லை. ஆனால் பாலைநிலம் குறித்த தமிழ் இலக்கியச் சான்றுகள், இலக்கணநூல்கள் பாலை நிலத்திற்கு வகுத்திருக்கும் கருப்பொருள், உரிப்பொருள் அடிப்படையிலான இலக்கண வரைமுறைகளையும் ஆராய்கையில் தனியே பாலை என்னும் நிலம் இருந்திருக்க வேண்டும் என்றே கருதமுடிகிறது. ஆனால், இன்றைய பாலை நிலமான, சஹாரா, கோபி, கிப்சன் போன்றவற்றைப் போல் அன்றைய பாலை நிலத்தன்மை அமைந்திருக்கவில்லை.

அப்படியானால் இப்பாலை நிலம் தமிழகத்தில் எவ்வாறு உருவாயிருக்கக்கூடும்? என்பது ஆய்வுச்சிக்கலாக உள்ளது. பாலைநிலம் பற்றிப் பேசும் முதல் நூலான தொல்காப்பியத்தில் தொல்காப்பியர், பாலை என்ற சொல்லை வெளிப்படையாகப் பயன்படுத்தவில்லை. அதாவது நிலத்தை வகுத்துக்கூறும் தொல்காப்பியர்,

"நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திரப் பண்பே"

என்றுதான் கூறுகிறார். மேலும்,

"மாயோன் மேய காடு உறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே"

என்று நிலத்திற்கு உரித்தான இறைவர்களை எடுத்துரைக்கையில் பாலை நிலத்திற்கெனத் தனியே இறைவகைச் சுட்டிக்காட்டாமை இங்கு உற்று நோக்கத்தக்கது. பாலை என்ற நிலத்தைத் தனியே குறிப்பிடாத தொல்காப்பியர், ஐந்திணைக்குரிய கால முறைமைகளை எடுத்துரைக்கையில், பாலை நிலத்திற்கு

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"

என்றே கூறுகிறார். இங்கும் பாலை என்ற சொல்லை வெளிப்படையாகப் பயன்படுத்தவில்லை. இச்சான்றாதாரங்களை ஆராய்கையில் தொல்காப்பியர் பாலை என்ற சொல்லை வெளிப்படையாகப் பயன்படுத்தாமையை நோக்குகையில், தனியே பாலை என்றநிலம் இருந்ததா? என்ற ஐயம் எழுகிறது. ஆனால் பாலை என்னும் பெயரை வெளிப்படையாக ஓரிடத்தில்

"வாகை தானே பாலையது புறனே"

என்று புறப்பொருளில் அமைக்கிறார். தொல்காப்பியர் மறைமுகமாகக் கூறும் இத்தகைய பாலை நிலத்திற்குப் பல காலம் கழித்து இலக்கணம் பகர்கிறார் இளங்கோவடிகள்,

"முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப்
பாலை யென்பதோர் படிவம் கொள்ளும்"

என்னும் சிலப்பதிகார வரிகளின் குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் (குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடைப்பட்ட பகுதி) வேனிற்காலத்தில் பாலை நிலமாக உருப்பெறும் எனச் சுட்டுகிறது. இங்கு, பாலை என்ற சொல் வெளிப்படையாகப் பயின்று வந்துள்ளமைததான் உற்றுநோக்கத்தக்கது. சிலப்பதிகாரத்தில் கூறுவது போல் வேனிற்காலத்தில் உருப்பெறும் பாலை நிலம் மீண்டும் குறிஞ்சியாகவோ முல்லையாகவோ தன் இயல்புநிலைக்குத் திரும்பியதற்கான அகச்சான்றுகள் ஏதும் இல்லை. பாலை நிலத்திற்கு விளக்கம் கூறும் உ.வே.சா அவர்கள் பாலை என்று தனிநிலம் இல்லை என்கிறார். குறிஞ்சி நிலத்தில் விலிமையுடன் காணப்படும் யானைகள் வேனிற்காலத்தில் பாலை நிலமாகத் திரிந்து காணப்படுவதால் வலிமையிழந்து காணப்படுகின்றன என்னும் சங்கப்பாடலை இதற்குச் சான்றாக முன்வைக்கிறார். அப்படியானால் இலக்கணநூல்கள் பாலை என்ற நிலத்திற்கெனத் தனியொரு இலக்கணம் வகுத்திருப்பதை ஆராய்கையில், ஒரு நிலம் நீண்ட காலம் தனக்கெனத் தனிப் பண்பாட்டுக் கூறுகளைப் பெற்றிருந்தால் மட்டுமே தனியே அந்நிலத்திற்கு உரிப்பொருளும், கருப்பொருளும் வகைப்படுத்தப்பட்டிருக்க முடியும். எனவே பாலை நிலம் இயல்புநிலைக்கு மாறாமல் நீண்ட காலம் பாலையாகவே இருந்திருக்கக்கூடும் எனக்கருத இடமுண்டு. இப்பாலை நிலம் நீண்டகாலம் பாலையாகவே இருந்திருக்க இரண்டு காரணங்களைக் கூறி அவற்றுள் இரண்டாம் ஒன்றை இவ்வாய்வு ஆராயமுற்படுகிறது.

1. மிக நீண்டகால வறட்சியின் காரணத்தால் உருவான பாலைநிலம்.
2. மன்னர்கள் மேற்கொண்ட கொடூரமான போர்முறைகளால் உருவான பாலை நிலம்

**சங்ககாலப் போர் முறைகளால் உருவான பாலைநிலம்**

சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மீது குமட்டூர்க் கண்ணனார் பாடியிருப்பார். அதனில்,

“தொறுத்தவயல் ஆரல்பிறழ்நவும்,
ஏறுபொருதசெறு உழாதுவித்துநவும்,
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்கண் எருமையின் நிரைதடுக் குநவும்,

கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்
வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும்,
ஒலிதெங்கின், இமிழ்மருதின்,
புனல்வாயில், பூம்பொய்கை,
பாடல் சான்ற பயம்கெழு வைப்பின்,
நாடுகவின்அழிய, நாமம்தோற்றிக்
கூற்(று)அடூஉ நின்ற யாக்கை போல,
நீசிவந்(து)இறுத்த நீர்அழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லென,
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகள் கழு(து)ஊர்ந்(து)இயங்கி
ஊரிய நெருஞ்சி நீ(று)ஆடு பறந்தலை
தா(து)எரு மறுத்த கலிஅழி மன்றத்(து)
உள்ளம் அழிய, ஊக்குநர், மிடல்தபுத்து,
உள்ளுநர் பனிக்கும் பாழா யினவே"

என்னும் இப்பாடல், பசுமையாக இருந்த நிலம், மன்னன் ஒருவன் போர் மேற்கொண்ட பிறகு பாலைநிலமாக ஆன செய்தியைப் பதிவு செய்துள்ளது. அதாவது இமயவரம்பன் படையெடுத்த பிறகு அந்நாட்டின் இயற்கைவளம் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளது. கரும்பு விளைந்த நிலத்தில், முள்மரங்கள் வளர்ந்துள்ளன. மேலும் பசுக்கள் தங்கும் மன்றங்களில் பசுக்கூட்டங்கள் தங்க இயலவில்லை, சாணமும் இல்லை என்னும் செய்தி வறட்சியின் உச்சத்தை வெளிப்படுத்துகிறது. போரின் பின் அப்பகுதிக்குப் போவதற்கு எவருக்கும் மனத்துணிவு இல்லை என்னும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பாடல் ஒரு இயற்கை நிலம் படிப்படையாகப் பாலையாவதைக் காட்சிப்படுத்துகிறது.

**மருதநிலம் போருக்குப் பின் பாலைநிலமாக மாறியமை**

| **மருதம்** | **பாலை** |
|---|---|
| கழனி | வறண்டநிலம் |
| கரும்பு | நெருஞ்சிமுள் |
| ஆம்பல் மலர் | - |
| மருதமரம், தென்னைமரம் | விடத்தேரை மரம் |
| துணங்கையாடுதல் | பேய்மகளிர் |
| உழவர் உழாமலே வேளாண்மை மேற்கொள்ளுதல் | புழுதி படிந்த நிலம் |
| இயற்கை உணவுண்ணும் எருமைக்கூட்டங்கள் | மன்றங்களில் தங்க இயலாத பசுக்கூட்டங்கள் |

முன்னைய பாடலில் உள்ள **“தாது எரு மறுத்த…”** வரியின் என்னும் செய்தி நீரோட்டம் இல்லாத நிலத்தில் பசுக் கூட்டங்கள் தங்காது என்பதையும், மேலும் வறட்சியின் காரணமாகச் சரியான உணவின்றி சாணமும் இடவில்லை என்பதையும் புலப்படுத்துகிறது.

பகைநாட்டின் இயற்கை வளங்களை அழிப்பதுதான் போரின் முக்கியச் செயலாக இருந்ததைப் புறநானூற்றின் வழியாக அறியலாம்

“புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம்பு உகளத்
தேர்வழங்கினை நின்தெவ்வர் தேஎத்து”

என்னும் பாடல் பறவைக் கூட்டங்கள் உணவு உண்டு ஆராவாரம் மிகுந்த விளைவயலைத் தேரை இட்டு அழித்துப் பாழ்படுத்தியமையை எடுத்துரைக்கிறது. போரில் வென்ற வஞ்சி மறவர்கள் பகைநாட்டின் உழவு நிலங்களைத் தீயிட்டு அழிக்கும் செயலை **‘உழுபுலவஞ்சி’** என்று வகைமைபடுத்தியுள்ளமையைப் புறப்பொருள் வெண்பாமாலை மூலம் அறியமுடிகிறது.

“நேராதார் வளநாட்டைக்
கூர்எரி கொளீஇயன்று”

போரின் போது பகை நாட்டுத் தலைவனைச் சிறைபிடிப்பது மட்டுமின்றி அந்நாட்டின் இயற்கை வளங்களை முற்றிலும் சீர்குலைத்துப் பாழ்படுத்துவதே பிரதான செயலாகக் கொண்டிருந்ததற்கானச் சான்றுகள் இன்னும் பற்பல சங்கப் புறப்பாடல்களில் அகச்சான்றுகளாகக் காணக்கிடைக்கின்றன. குறிஞ்சியோ முல்லையோ மருதமோ எதுவாயினும் பகைவரின் நிலம் என்பதால் அது பாலையாகத் திரிக்கப்படவேண்டும் என்பதுதான் சங்ககால மன்னர்களின் செயல்பாடாக இருந்துள்ளது. இதுபோன்ற பல்வேறு ஆய்வுச்சிக்கல்களைக் கொண்டுள்ள பாலைநிலத்தினைப் பற்றி மேற்கண்ட சான்றாதாரங்களைக் கொண்டு ஆராய்கையில், பாலை என்னும் நிலம் உருவாவதற்கு இயற்கையின் செயற்பாடுகளைக் கடந்து மன்னர்கள் மேற்கொண்ட செயற்கைப் போர்முறைகளும் வழிவகுத்துள்ளன என்றும் மேலும் இயற்கை வளம் நிறைந்த நிலங்களெல்லாம் மன்னர்களாலும் முறைமையின்றித் திரிக்கப்பட்டுப் பாலைநிலமாக்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.

இராமசாமி விஜயகுமார் - இலங்கை



# இலங்கையின் மலையகப் பெருந்தோட்டத் தமிழர்களின் நிலவுரிமை

மனிதன் மனிதனாகப் பிறந்த காரணத்தால் அவனுக்குரிய உரிமைகளினை மனித உரிமைகள் என்று குறிப்பிட வேண்டும். உடை, உறையுள், உணவு என்பவை மாந்தனுக்கு அடிப்படையாகக் காணப்படவேண்டும். மனிதனின் இன்றியமையாத தேவைகளை அடிப்படையாகக் கொண்டும் உலக நாடுகளின் மூலச்சட்டங்களைக் கருத்தில் கொண்டும் இந்த மனித உரிமைகள் வடிவமைக்கப்படுகின்றன. இவற்றில் இன்றைய நவீனத்துவ உலகில் முக்கிமான உரிமைகளில் ஒன்றான உறைவிடவுரிமைக்கு நிலவுரிமை அடிப்படையாகிறது. இன்று நிலவுரிமை என்பது எல்லோருக்கும் ஒரு பொதுவிடயமாகக் காணப்பட்டாலும் பல்வேறு பிரசினைகளை உருவாக்கியுள்ளதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

*இந்தியாவில் உழவு நிலங்களுடைய உரிமையாளர்களின் வேறுபாட்டைக் குறைக்கும் நோக்குடன் 1961 ஆண்டு தமிழ்நாட்டில் நிலசீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. பாகிஸ்தான் நாட்டில் நிலமற்றவர்களிடையே அதிக வறுமை காணப்படுகிறது. தென்னாப்பிரிக்காவில் நிலம் தொடர்பான பிரச்சினைகள் பலகாலமாக இருந்திருக்கிறது. இதற்காக நிலமற்ற மக்கள் இயக்கம் என்று அங்குள்ள குடிசையில் வாழும் மக்கள் ஆரம்பித்து அரசுக்கு எதிராகவும், பாராளுமன்றத் தேர்தல்களைப் புறக்கணித்ததோடு தென்னாபிரிக்காவில் மிகவும் பிரபலம் அடைந்ததுடன் பல்வேறு கிளைகளையும் ஆரம்பித்து அழுத்தங்கள் கொடுத்துள்ளது.*

*இலங்கையில் நிலச் சட்டம் என்பது அரசக்காணிகள் கட்டளைச் சட்டம் (1947 ஆம் ஆண்டின் 08 ஆம் 09 ஆம் இலக்கம் மற்றும் 1949 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டங்கள்) இது இலங்கையில் உள்ள அரசுக்கு உரிமையான காணிகளை அளிப்பதற்காகவும் உடைமையைக் கற்றவும் அத்தகைய காணிகளையும், கடற்கரைகளையும் நிர்வகிக்கவும், முகாமைத்துவம் செய்யவும், குளங்களிலும், பொதுநீர் அருவிகளிலும் நீர்ப்பாவனையை நெறிப்படுத்தவும், இவ்விடயங்களுடன் இணைந்த ஏனைய விடயங்களுக்காக ஏற்பாடுகளை உருவாக்கவும் செயற்படுத்தப்பட்டதொரு கட்டளைச் சட்டமாகும். இலங்கை நாட்டில் நிலம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் பல்வேறு பிரதேசங்களில் காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையின் உள்நாட்டுப்போரின் காரணமாகத் தமது சொந்த இடங்களைவிட்டு மக்கள் நாட்டுக்குள்யேயே இடம்பெயர்ந்துள்ளனர். பின்னர் 30 தசாப்தங்களின் பின்னர் யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் மக்களுடைய நிலங்கள் இராணுவத்திடமிருந்து மக்களுக்கு குறிப்பிட்டளவு மீள் அளிக்கப்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கு மக்களுக்குத் தங்களுடைய சொந்தநிலம் அவர்களுக்கு உறுதிசெய்யப்பட்டு மீளளிக்கப்பட்டு வருகின்றன.*

*மனித உரிமையின் 17ஆவது சட்டப்பிரிவின் படி ஒவ்வொருவருக்கும் சொத்து வைத்திருக்கும் உரிமை உள்ளது. இலங்கையின் 80 சதவிகித நிலப்பகுதி அரசுக்குச் சொந்தமானது மற்றும் அதன் நிர்வாகம் அரசால் நிர்வகிக்கப்படுகிறது. நில ஆணை* (SLO), *நிலமேம்பாட்டு ஆணை* (LDO) *மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் குறிப்பிடுகின்றது.* (OXFAM RESEARCH REPORTS, 2020).

யுத்ததிற்குப் பின்பு வடக்கு-கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு நிலவுரிமையினைப் பெற்றுக்கொடுக்கப்பட்டது போன்று பல்வேறு நிலம் தொடர்பான பிரச்சினைகள் இலங்கையில் வேறு பிரதேசங்களில் காணப்பட்டாலும் அதற்கானத் தீர்வுகள் காணப்படுகின்றன. ஆனால் பெருந்தோட்டமக்களின் நிலப்பிரச்சினை என்பது அவர்களுடைய வாழ்க்கைப் போராட்டமாக மாறியுள்ளது. இவ்வாறு பல்வேறு நிலம் தொடர்பான விடயங்களுக்காக ஆரம்பகாலங்களிலேயே போராட்டங்களும் நிகழ்ந்து நில உரிமையைப் பெற்றுள்ளனர். இலங்கையில் மலையகத்தில் நிலம் அற்றவர்களாகக் காணப்படுகின்றமை என்பதை இங்கு யாரும் பார்க்கவில்லை. ஒரு சமூகம் என்பதை அதற்கென தனித்த மொழி, உணவுகள், பழக்கவழக்கங்கள், சடங்குமுறைகள், தனியான வாழ்வியல் முறைகள், குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நிலம் என்பனவற்றைக் கொண்டு வரையறுக்கப்படுகிறது. இதில் நிலம் என்பது சமூகத்தின் அடையாளமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு ஆய்வுப் பிரதேசத்திலும் நிலம் என்பது ஒரு முக்கியமான ஒருவிடயாமாகக் காணப்படுவதோடு அங்கு நிலம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. நிலத்திற்கும் பண்பாட்டுக்கும் இடையிலான முக்கியப் பிரச்சினை காணப்படுகின்றது. மேலும் நிலமற்றவர்கள் என்ற நிலைக்கு பெருந்தோட்ட மக்கள் வலிந்து உட்படுத்தப்படுகின்றனர். நிலத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பற்ற நிலையினைக் கொண்டுள்ளனர். நிலம் பெருந்தோட்டத் தொழிலாளர்களிற்கும் ஏனையவர்களுக்கும் இடையிலான சமூக மதிப்பைத் தீர்மானிப்பதாக இன்று மாறியுள்ளது.

பெருந்தோட்டமக்களின் தனியாள், பொருளாதார, கலாச்சார, குடும்பம், சமூகம் போன்ற பல்வேறு காரணிகளில் நிலம் என்பது செல்வாக்கு செலுத்துகின்றது. சமகால உலகில் மனித உரிமை தொடர்பான பல்வேறு சட்டங்கள், பன்னாட்டு ஆணைக்குழுக்கள் போன்ற அமைப்புக்கள் உருவாகிருயிக்கின்ற வேளையிலும் வெறுமனே யுத்தம், மீள்குடியேற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு மனித உரிமை தொடர்பான ஆய்வுகளும், அதற்கானத் தீர்வுகளையும் எதிர்பார்க்கும் வேலை ஏன் இந்தப் பெருந்தோட்டத் தொழிலாளர்களினுடைய பிரச்சினை



சர்வதேசரீதியில் பேசப்படவில்லை என்பதனை வெளிப்படுத்துவதற்கான ஆய்வானது அவசியமாக உள்ளது. பிரித்தானியர் ஆட்சிகாலத்தில் கொண்டுவரப்பட்ட நலன்புரித் திட்டங்களில் நிலத்தை அவர்கள் ஒரு பிரச்சினையாகப் பொருட்படுத்தவில்லை. இலங்கையானது ஒரு நாடாகக் காணப்பட்டாலும் இதில் ஒரு தனியான நிர்வாகக் கட்டமைப்பாகப் பெருந்தோட்டம் காணப்பட்டது. அதாவது (Plantation-Raj) பெருந்தோட்ட இராச்சியமாகக் காணப்பட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நிலமற்றவர்களாகக் காணப்படுகின்றமைக்கு மற்றுமொரு காரணமாகத் தோட்ட முகாமையாளர்கள் தங்களை ஒரு ராஜாவாகக் கருதி மக்களை நிர்வகித்தமை. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களுடைய வறுமையினைப் போக்குவதற்காகவே இங்கு வந்தார்கள் என்பதனைப் புரிந்துகொண்டு இவர்களுடைய வேறு உரிமை விடயங்களில் செல்வாக்குச் செலுத்தவில்லை, நிலம் என்ற உரிமையினை இல்லாமல் செய்தனர். இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பின் தனித்தனியான சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு என எந்த விதமான அடிப்படை நலன்புரித் திட்டங்களையும், சட்டங்களையும் கொண்டுவரப்படாமை இவர்களுடைய நிலவுரிமையினை இல்லாதொழிக்க வழி அமைத்தது. மலையகத்தில் ஆரம்பகாலங்களில் தோன்றிய தொழிற்சங்கங்கள் பின்னர் கட்சிகளாக மாறினாலும். நிலவுரிமை தொடர்பான விடயங்களினை

வலுவாகப் பேசவில்லை. அதற்கான காரணம் இவ்வாறு கட்சிகள் ஆரம்பித்தவர்களும் பலர் பெருந்தோட்டத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ளவர்கள் என்பதால் ஆகும். சுதந்திரத்தின் பின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டனர். அவர்களிடம் பணம் இருந்தாலும் நிலத்திற்குச் சொந்தக்கார்களாக ஆக்கப்படாத நிலைமைக்குப் பிரஜாவுரிமை எனும் விடயம் இவர்களின் பிரச்சினைக்கானக் காரணமாக அமைந்தது. சுதந்திரத்திற்குப் பிற்பட்டுவந்த அரசியல் சீர்திருத்தங்களில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு என நிலவுரிமை தொடர்பான எந்தவிதமான ஒருவிடயமும் முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடதக்கதாகும். 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெருந்தோட்ட நிலங்கள் தனியார் மயப்பட்டுத்தப்பட்டமையானது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நில உரிமையினைப் பெற்றுக்கொள்தவற்கான சாத்தியத்தினைச் செய்துள்ளது என்று குறிப்பிடலாம். ஆனால் முதலாளித்துவக் கொள்கைக் காரணமாக நிலவுரிமை அற்றவர்களாகத் தொடரச்செய்தும் வருகிறது. பெரும்பான்மைச் சமூகப் பிரிவினரின் வயமாக்கப்பட்டமையானது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மேலும் உரிமையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பண்பாட்டு ரீதியான சவால்கள் என்று நோக்கும்போது தமிழ்ச் சமூகத்தில் நிலத்திற்கும் மனிதனுக்கும் உள்ள உறவு என்பது மிக முக்கியமானதாகவும், ஒரு சமூகப் பிணைப்பினையும் கொண்டதாகவும் காணப்படுகின்றது. ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர், நிலத்தினுடைய பிணைப்பு அற்றவர்களாக வெளிக்காட்டப்படுகின்றனர். பெருந்தோட்ட மக்கள் நிலம் அற்றவர்களாக இருப்பதால் அவர்கள் வாழ்கின்ற நிலங்களின் மீது உணர்வு அற்றதான மனநிலையையேப் பெற்றுள்ளனர். அதாவது தங்களைத் தாங்களாகவே சுய அந்நியமயப்படுத்தப்படுகின்றமை. இன்னும் கூறிச்சென்றால் நிச்சயமற்றத் தன்மையில் வாழ்தலால் ஏற்படும் ஒருவகையான உளவியல் தாக்கத்தில் ஆட்பட்டுள்ளனர். சமூக அந்தஸ்திற்கும் நிலத்திற்கும் இடையில் மிக நெருக்கமான உறவு உள்ளது. நிலம் உள்ளவர்கள் சமூக அந்தஸ்தில் உயர்ந்தவர்களாகவும் நிலம் அற்றவர்கள் சமூக அந்தஸ்தில் குறைந்தவர்களாகவும் சமூக மட்டங்களில் அடையாளப் படுத்தப்படுகின்றனர். அந்த வகையில்தான் பெருந்தோட்டத்

தொழிலாளர்களின் பிரச்சினையானது காணப்படுகின்றது. மலையகத்திற்குள்ளேயே நகரப்பகுதியில் உள்ளவர்கள் தங்களுக்கென சொந்தமான நிலத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். ஆனால் பெருந்தோட்டக் கூலித் தொழிலாளர்கள் நிலமற்றவர்களாகவும், லயன் குடியிருப்புக்களில் வாழ்பவர்களாகவும் காணப்படுகின்றமை சமூகத்தில் அந்தஸ்த்து நிலையில் பிரச்சினையினை ஏற்படுத்துகின்றது. இலங்கையில் வாழும் ஏனைய சமூகபிரிவினரான வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய முஸ்லிம், சிங்கள இனத்தவர்களும் இவர்களை ஒரு சமூக அந்தஸ்த்து நிலையில் குறைவாக மதிப்பிடும் தன்மையினையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வுளவியலை அவர்களால் புறக்கணிக்கவும் முடியவில்லை. அதற்கு நிலமிடலித்தன்மைதான் ஆகப்பெருங் காரணம். இதனால் பெருந்தொட்ட மக்களின் திருமணமுறையில் நிலம் உள்ளவர்களுக்குத் திருமணம் செய்துகொடுப்பது என்பது இங்குக் கேள்விக்குறியானதாகும். ஏனென்றால் நிலம் உடையவர்களின் அந்தஸ்தில் நிலம் அற்றவர்களுக்கு இடமில்லை என்ற ஒரு வேறுபாடும் உள்ளதால்! பற்றுதல், பிடிமானம் என்பவை வாழ்க்கை முறையின் போக்கும், அவனுடைய அன்றாடச் செயல்பாட்டின் பழக்கவழங்கங்களாளும் தீர்மானிக்கின்றன. அந்தவகையில் இவ்வாறான நடத்தைகளினைத் தம்முடைய சமூககட்டமைப்புக்குள்ளே உள்வாங்கிக்கொண்டு இருப்பவனாகவும் மனிதன் காணப்படுகின்றான். இவ்வாறான சமூகக் கட்டமைப்பு என்பது ஒரு உறுதிப்பாடானதாகக் காணப்படவேண்டும். பெருந்தோட்ட மக்களிடம் காணப்படும் சமூகக் கட்டமைப்பு என்பதும் இவ்வாறான ஒன்றாகத்தான் காணப்படுகின்றது. ஆனால் இன்றைய சமூகச் சூழ்நிலையானது இவர்களுடைய சமூக உறுதிப்பாடு (Social Solidarity) நிலவுரிமை மீது நிச்சயமற்றத் தாக்கத்தைச் செலுத்தி, கல்வி, உணவு, வேலைவாய்ப்பு போன்ற மிகமுக்கியமான வாழ்வியல் போக்குகளை நிலைகுலையச் செய்கிறது. மேலும் இந்நிச்சயமற்ற தன்மையால் உள்நாட்டில் தங்களுடையதொழில், கல்வி நிமிர்த்தமாக கட்டாய இடம்பெயர்வுக்கு உள்ளாகியுள்ளனர். பெருந்தோட்டமக்களிடம் சுயமாகச் சிந்தித்து வாழ்வாதார செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் காணப்படுவதற்குக் காரணம் அவர்கள் தங்கி வாழும் நிலைமையில் உள்ளதால் ஆகும். இதனை **குந்தர் பிரரேங்**, தங்கியிருத்தல் கோட்பாட்டின் வழியாக

எடுத்துக் கூறியுள்ளார். அதாவது பெருந்தோட்டமக்கள் குறைவிருத்தியின் விருத்தியில் காணப்படும் மக்களாகவே இருக்கின்றார்களே தவிர விருத்தியடைய சமூகநிலையில் இவர்கள் இருக்கவில்லை என்பதாகும். இவர்களுடைய நிலப்பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்கும் நோக்கில் பின்வரும் விடயங்களினை முன்வைக்கலாம். நிலக்கொள்கையினை மீள் திருத்தம் செய்து நிலம் அற்றமக்களுக்கு நிலத்தைப் பெற்றுக்கொடுத்தல், பத்து வருடத்துக்கு மேல் மலையகத்தின் ஓரே இடத்தில் வாழும் மக்களுக்கு நிலத்தைப் பெற்றுக்கொடுத்தல், அரசக்காணிகளைச் சரிசமமாகப் பகிர்ந்தளித்து முதலீட்டுத் திட்டங்களினை உருவாக்குதல், பெருந்தோட்டத்துக்கான நிதி ஓதுக்கீட்டைப் பாராளுமன்றப் பாதீட்டில் உள்வாங்குதல், 7 பேர்சஸ் காணி என்பதை இல்லாமல் செய்து 20 பேர்சஸ் காணிகளை ஏனைய வடக்கு, கிழக்கு மக்களுக்குப் போன்று பெற்றுக் கொடுத்தல், கவனிப்பாரற்றுக் கிடக்கும் தேயிலைத் தோட்டங்களைப் பெருந்தோட்ட மக்களுக்குப் பகிர்ந்தளித்துச் சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுதல், தரிசுநிலங்களை இளைஞர்களுக்கு வழங்கி புதிய தொழில்முயற்சிகளை ஏற்படுத்தல், தனியார் கம்பனிகளின் நிர்வாகமுறையில் நிலத்தை மக்களுக்குப் பிரித்துக்கொடுத்து இலாபத்தைத் தனியார் கம்பனிகள் பெற்றுக்கொள்வது போன்று தனிநபர்களும் பெற்றுக்கொள்வதற்கான சிறப்புவேலைத் திட்டங்களினை உருவாக்குதல், அரசநிலங்களாகப் பெருந்தோட்ட நிலங்கள் காணப்படுவதால் பாராளுமன்றச் தனிச்சட்டத்தினால் நிலங்களை மக்களுக்கு நியாமான முறையில் பகிர்ந்தளித்தல். பெருந்தோட்டச் சமூகத்திற்கு நிலமின்மையால் நாட்டின் நிலையான அபிவிருத்தியினைக் கொண்டுவருவதற்கும், சுதந்திரம், கலாசாரப் பாதுகாப்பு, ஒருங்கிணைப்பு, சமத்துவம், ஜனநாயகத்தை நிலைபெறச் செய்வதற்கும் பாரிய சவாலாக உள்ளது. எனவே பெருந்தோட்ட மக்களுக்குச் சொந்தநில உரிமை என்பது மிகவும் அவசியமான மற்றும் அடிப்படையான உரிமையியல் விடயமாகும் என்பதைக் கடந்து, இன்றைய இலங்கைளின் வருவாய்க் காரணியின் ஸ்திரத்தன்மை ஏற்புடுத்துவதற்குமான மூலதனமாகக் கொள்ளவேண்டும்.

/ கட்டுரை /

சி.சிவகஜன் – இலங்கை




# இலங்கையில் தமிழ் மீதான சவால்கள்

தற்காலத்தில் உலக அரங்கிலும் சரி, இலங்கையிலும் சரி சனநாயகம் பற்றிய கலந்துரையாடல்கள் அதிகரித்திருக்கும் வேளையில் தேசிய இனங்களின் உரிமை மறுப்புக்களும் அவை மீதான அடக்குமுறைகளும் தொடர்ந்தும் இடம் பெறுவதோடு மறைமுகமான ஊடுருவல்கள் மூலமான அடையாளவழிப்புச் செயன் முறைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திற்கு முதலிலிருந்து ஒரு நூற்றாண்டு காலமாக ஈழத் தமிழர்கள் தொடர் தோல்விகளையே சந்தித்து வருகின்றனர். மொழி, கல்வி, பண்பாடு, பொருளாரம், அரசியல் என்று ஓரினத்தின் அடிப்படைத் தளங்கள் அனைத்துமே ஊடுருவல்களால் ஆட்டம்கண்டு வருகின்றன. இலங்கையில் இறுதிக்கட்டப் போருக்கு முன்னதாகவே தமிழ் மொழி, பண்பாடு மீதான நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை அதிகார வர்க்கங்களின் துணைகொண்டு மிகவும் இலாவகமாகச் செய்து முடிக்கப்பட்டதோடு, இன்றும் இடம் பெற்றுவருகின்றன.

வெளிப்படையாக இடம் பெற்ற தமிழ் இருப்பழிப்பானது இன்று மறைமுகமாக மெல்ல நகர்ந்து வருகின்றது. நாமும் அவற்றில் சிலவற்றை அறிந்தும் அறியாமலும் ஏற்றுக்கொண்டு வருகின்றோம். ஒருதேசம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள தாயகப்பகுதி (நிலம்), மொழி, பண்பாடு, வரலாறு, பொருளாதாரக் கட்டமைப்பு, கல்விக் கட்டமைப்பு, வரலாறு போன்ற அடிப்படை மூலக்கூறுகள் அவசியமானவையாகும். இவற்றுள் ஒன்றோ, பலவோ அழிப்புக்குள்ளாக்கப்படும் பொழுதோ, சிதைக்கப்படும் பொழுதோ, திரிபுபடுத்தப்படும் பொழுதோ அந்த இனத்தின் அடித்தளமே ஆட்டம் கண்டுவிடுகின்றது. இவை எதிர் தரப்பால் வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்படுமானால் அவ்இனத்தின் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டு வரலாற்று ஆவணங்களில் மட்டுமே அறியப்படக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். இது போன்றதொரு நிலையினைப் பல தேசிய இனங்கள் பலவும் சந்தித்துவிட்டன.

ஒருதேசிய இனம் தன்னை ஒரு மொழியினைக் கொண்டே அடையாளப்படுத்திக் கொள்கின்றது. மொழியொன்று இல்லாமலாக்கப்பட்டால் அந்த இனக்குழுவும் இல்லாமல் ஆக்கப்பட்டுவிடும் என்பது வெளிப்படை உண்மை. தமிழரது தாய்மொழியான தமிழைச் சிதைக்கும் செயன்முறை, நாகரீகத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த நாடுகள் பலவும் சுதந்திரத்தின் பெயரால் மாற்று அடிமைத்தனத்தையே ஏற்றுக் கொண்டுள்ளன. அதற்கு நாமும் விதிவிலக்கில்லை. நாம் வேற்றுமொழிகளைக் கற்றுக் கொள்ளும் அதேவேளை நமது தாய்மொழியின் தனித்துவத்தைக் குறைத்துவிடாது காத்தல் வேண்டும். ஒருவனது சிந்தனையானது அவன் வேறுமொழிகளில் சிந்திப்பதனைப் பார்க்கத் தன் தாய்மொழியில் சிந்திக்கும் போதே கூர்மையடைகின்றது. ஒருவனது சிந்திக்கும் ஆற்றலை, சமூகம் பற்றிய பார்வையைத் தீர்மானிப்பதில் மொழி, செல்வாக்குச் செலுத்துகின்றது. தன் "தாய்மொழியில் கற்றவன் படைக்கிறான், கல்லாதவன் பயன்படுத்துகின்றான்" என்பதனை நாம் சரிவர புரிந்து கொள்ளவேண்டும். தமிழரது தாய்மொழிச் சிதைப்பானது 1952 ஆண்டு தனிச்சிங்களச்சட்டம் மூலம் முதல் முதலில் அரங்கேற்றப்பட்டது. இந் நிலைமை 1978 அரசியலமைப்பில் 13ஆம் திருத்தம் கொண்டுவரப்படும் வரை

*நீடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. தனிச்சிங்களச் சட்டம் இனப்பிரச்சினை துளிர்விடுவதற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகும். அண்மைக் காலங்களில் கூட தமிழ் மொழியிலான பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழியானது முழுமையான பிழைகளுடன் பிரசுரமாவதோடு, அரசு முக்கிய ஆவணங்கள் கூட தனிச் சிங்களத்தில் மட்டுமே இன்றும் வழங்கப்படுகின்றன. அதன்படி வடகிழக்கு மாகாணத்தில் தமிழே முதன்மை வகிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதும் அடுத்துவரும் ஆட்சியாளர்கள் எவரும் அதனைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. அண்மையில் கூட யாழ்ப்பாணத்தில் நெடுந்தூரப் போக்குவரத்திற்கென நிர்மாணிக்கப்பட்ட பேருந்துநிலையத்தில் தமிழ் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்ட நிலை உள்ளிட்ட பல சம்பவங்களை எடுத்துக்காட்டாகக் காட்டமுடியும்.*

*இலங்கையில் தமிழர்கள் பூர்வீகக்குடிகள் என்று அறியப்படுகின்ற நிலையில் தமிழர் வரலாற்று அழிப்புச் செயன்முறை வலுவேகமடைந்து வருகின்றது. இங்குத் தமிழர்களது வரலாற்று ஆவணங்கள், தொல்பொருட்கள் அழிப்புக்கு உள்ளாக்கப்படவோ அல்லது பூசிமெழுகவோ படுகின்றன. இவற்றுள் மிகப் பிரதான அம்சம் மாணவர்களது பாடப்புத்தகத்தில் தமிழர் வரலாறுகளானவை திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருங்காலப் பிள்ளைகளுக்கு வரலாற்றைக் கொண்டுசெல்வது இல்லாமல் செய்யப்படுகின்றது. இதுவே வரலாற்று அழிப்பில் ஏனைய அம்சங்களைவிட மிகப் பிரதானமானதாகும். தமிழர் வரலாறு கல்வியில் உள்ளடக்கப்படாதது மிகவும் ஆபத்தானதொரு விடயமாகும். இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு வரலாற்றுத்தடயம் ஒன்றைப் பெரும்பான்மை இனத்தவருடையது என்ற அடிப்படையில் நிறுவுவதற்கு முயற்சிக்குமே தவிர, அது உண்மையில் யாருடையது என்பதைக் கண்டறிய முயற்சிக்காது. இன்னொருவகையில் கூறின் சிலை ஒன்றைத்தாமே புதைத்துவிட்டு மீள அதனைத் தோண்டி எடுத்துப் பெரும்பான்மை இனத்தவருடையது என்றுரைக்கும் நிலையில் உள்ளது. இந்தவாறாக வரலாற்றுச் சிதைப்பும் அருகாமையில் நிகழ்ந்தவண்ணமே உள்ளது. கடந்தவருடம் (2021) சனவரி மாதமளவில் கூட தமிழர் தொல் நிலமான முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர் மலையில் தொல்லியல் ஆய்வு என்ற*

பெயரில் தமிழர்கள் காலங்காலமாக வழிபாடு ஆற்றிவந்த ஆதிசிவன் ஐயானார் ஆலயச் சூழலில் புராதன விகாரை இருந்ததாகக் கூறி சூலம் பிடுங்கி எறியப்பட்டு அங்குத் தொல்லியல் ஆய்வுகள் புத்தபகவானின் திருவுருவச் சிலை வைத்து வணங்கி தொடங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசியல் யாப்பு எனும் நூலில் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடுவது போல, கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாகத் தமிழ் மக்கள் தமக்கு எதிரான அடையாளவழிப்புச் செயன்முறைகளினை எதிர்கொள்வதில் தொடர் தோல்விகளினையே சந்தித்து வருகின்றனர். நாம் ஏன் தோல்வியுற்று வருகின்றோம் என்று கேள்விகேட்டு அதற்குப் பதில்காணத் தமிழர்கள் நாம் தயாராகவில்லை? தோல்விகளிலிருந்து பாடங்களைக் கற்று வெற்றிக்குரிய வழிவகைகளைத் தேடுவதற்குத் தயாரில்லை என்றால், நாம் எம்மைத் தொடர்ந்து தோல்விகளுக்குத் தயாராக்குகின்றோம் என்பதே பதில். ஒரு நாகரீகத்தின் சிறப்பு மேன்மையும் அது தனக்கு ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொண்டு அதனை வெற்றி கொள்வதிலேயே தங்கியுள்ளது. தொன்மையான வரலாற்றையும் செழுமையான மொழியையும் வளமானப் பண்பாட்டையும் கொண்ட ஈழத்தமிழினமானது தனக்கு ஏற்பட்ட சவால்களை ஒரு நூற்றாண்டுக்கு மேலாய் எதிர்கொண்டு வெற்றிகொள்ள முடியாமல் அல்லற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து தம் அடையாளத்தைத் தற்காத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும். தற்காலத்தில் நேருக்குநேராக நின்று யுத்தம் மூலம் அழிப்பை மேற்கொள்வதைவிட யுத்தத்தின் மறுமுகமான இனத்தின் அடிப்படை மூலாதாரங்களை முக்கியமாக மொழியை அழிப்பதன் மூலமான இனவழிப்புச் செயன்முறை வேகமுற்று வருகின்றது. இனியும் தமக்கு முன்னுள்ள சவால்களை எதிர்கொள்வதற்குத் தகுந்த தகுதியையும் திறமையையும் இன்மேலாவது காட்டத் தவறினால் ஈழத்தமிழினம் என்றொரு பண்பாட்டினம் விடைபெற்று அருங்காட்சியகத்தில் வெற்றுக் காட்சிப்பண்டமாய் குடிபுகுந்துவிடும்.



/ கவிதை /



செ.சுதர்சன் கவிதைகள்
(இலங்கை)

# தாயிரங்கு பாடல்கள்

## 01. காலே பரிதப்பினவே!

எங்குற்றாய்...!

போர் நெடும்பாலை
குருதியை விரிக்குமெனில்
உள்ளாயா? இல்லாயா?

கவர்ந்தவர் தெருவெலாம்...
கண்ணொளி புதைத்தும்
கால்கள் தொலைத்தும்
செல்வழி வினவினேன்.

இருக்கிறாய் என்றனர்.
இல்லையுமென்றனர்.

ஆருயிர் பிசைந்து
அமுதையும் ஊட்டேன்.
கல்லறை மீதிலோ
மலரையும் தூவேன்.

வரைந்ததோர் உருவொடு
வழியிற் கிடக்கிறேன்.

ஊழே நீ பாழி...!

# 02. இது என் பாவைக்கு இனிய நன் பாவை

சிறகுகள் ஆயிரம்
விரிந்த தீயினாள்
கூட்டைச் சிதைத்துக்
கிளியைத் துரத்தினாள்

மேகமாய் ஊஞ்சலில்
அசைவுறு குழலினாள்
தாகமாய் விடுதலைத்
தனிச் சுடர் ஏந்தினாள்.

இது அவள் இழைத்த
ஊமற் பாவை!
இது அவள் பிடித்த
களிமண் பிள்ளை!
இது அவள் ஓட்டும்
குரும்பைச் சிறுதேர்!
இது அவள் உண்ணும்
இன்சுவைக் களியென
...
உண்ணாதிருக்கிறேன்.



நிலம் நினைந்து...
விடிவொளிர் வெள்ளி
சுடர்விடு கண்ணொடு
நீங்கினளோ!
உயிர் போக்கினளோ!

# 03. மக்கள் போகிய அணிலாடு முன்றில்

என் பிறை நேசர்கள் எங்கு தொலைந்தனர்!
சேவல் கூவியேன் இருள் வரவைத்தது!
மலர்ந்த காலையும் மரணித்துப் போனதேன்!

நிலமே கூறு...
நின் மடிப்பிள்ளை எங்கே?

நல்லூர் மணிக்குக் குல்லா சரித்தனர்.
பள்ளி அழைப்பினை
நெஞ்சிற் குலுக்கினோம்.

ஊரே உளமாய்க் குழைந்திடு மனமும்,
வேரே தமிழாய்க் குடித்திடு செவியுமாம்
வாழ்வுத் திருவிழா வற்றிப் போய்விட,
இருமணி நேரத் துரத்தும் அழைப்பை
கொடுமுரசறைந்துமே
அழைப்பாய்க் கொடுத்தாய்!



மொழியினாற் பின்னி, அன்பினில் வேய்ந்த
குடிசையின் குலைவும், ஐம்பது காசும்,
ஒட்டிய உடையுமாய் ஓடத் துரத்தலும்,
பொன் பொருள் கவ்விய சூறையாடலும்,
முகங்கள் இருளவே முற்றத்தில் ஆடின.

களித்த மண்மணம், களப்பலி நாயகர்
வலிக்கும் மனத்தோள்
மூட்டையில் சுமந்தனர்.

கூட்டினைக் கலைத்தாய்!
'புத்தரின் படுகொலை' பாடிய புலவனை
இத்தரை நீக்கினாய்.

ஜின்னா வெளியின் வெப்ப மூச்சும்
ஒஸ்மானியாவின் விம்மலும் பெருகி,
சோனகத் தெருவில் வீழ்ந்த விழிநீர்
நந்திக் கடலாய்ப் பெருகியதென்னே...!
ஐப்பசிக் கறுப்பேன் வைகாசி உடுத்தது...!

# 04. ஒரு மகள் உடையேன் மன்னே!

**கூற்று 1 – மகளைப் புலி பறித்தவழித் தாய் புலிக்குச் சொல்லியது.**

'நாட்டுக்கு ஒரு மகள் நட வேண்டும்'
என்றீர்!

வீட்டினுட் பாய்ந்தீர்!
விம்மிய பிள்ளையின் சிறுமுடி பற்றினீர்!
பற்றியிழுத்த கால்களைப் பற்றினேன்.
காடுகள் வென்ற கால்களும் உதைத்தன!

கண்ணுள்ளிருந்த
என் கருமணிப் பாவையைக்
கழற்றி உமது வண்டியுள் வீசினீர்!

தாயம் உருட்டும் சோகிகள் சோர
தலைமடி வைத்த அசைவுகள் சோர்ந்தன.
திண்ணையில் பாடிய மென்சுரம் சோர
பின்னலில் ஆடிய குஞ்சமும் சோர்ந்தது.

தூங்காத் துயரைத் தூக்கி அலைந்தேன்.
நெஞ்சிலே மகளெனும் ஓவியம் வாழவே
நஞ்சினைஅருந்திடு சாவையும் நீக்கினேன்.

ஒரு மகள் உடையேன்...!
ஒரு மகள் உடையேன்...!
மண் சோறுண்டு
ஒரு மகள் பெற்றேன்.
மண்ணுக்காய்ப் பறித்தீர்
மகட் பிச்சை தாரீரோ...?



## கூற்று 2 – மகளை ஆமி கவர்ந்துழி, தாய் ஆமிக்குரைத்தது



சாமத்தில் வந்து
சல்லடை போட
காக்கிச் சட்டையுள்
காமத்தை உடுத்தீர்!

காதலன் உறங்கிடு கல்லறை ஏகிய
கால்களை மிதித்தீர்!
நெய் விளக்கேற்றி மனமலர் தூவிய
கைகளைக் கட்டினீர்!

கதவுகள் எங்கும்
தலையினால் தட்டினேன்.
தாழிட்டு மூடின
பாழ் பெருங் கதவுகள்!

உச்ச ஏணியில் ஏறிய பூவினை
மச்சப் பாம்பு மடக்கி விழுங்கிற்று.

ஒரு மகள் உடையேன்!
ஒரு மகள் உடையேன்!
என்னுயிர் ஊற்றி
இன்னுயிர் வளர்த்தேன்!

தின்னப் பறித்தீர்...
எங்கே வீசினீர்... ?

## கூற்று 3 – மகளைத் தலையாட்டி பறித்ததுற்றுத் தாய் சொல்லியது



'நண்டூர நரியூர...'
பாடிய பிள்ளையைப்
புலியூர்ந்து பின்னே
நரியூரும் துயர்க் காலம்

முற்றத்தில் சிறுமலர்
நறுமலர் கொய்கையில்,
தாடிகள் சூடி,
என் தளிரையும்
கொய்தீர்.

புத்தகப் பையுள்
படமொன்று இருந்ததாம்.
நெஞ்சுளே கடித
நெருப்புக் கிடந்ததாம்.

உணவுள் உளவுக்
கறிகளும் போனதாம்.
பொய்கட்டி...
பொய்கட்டி...
விளையாட்டுத் துவக்கும்
விசாரிக்கப்பட்டதாம்.

மென்மகள் ஆடிய
ஒழுங்கையின்
கிடுகினைச்
சுடலைக் குருவியேன்
வாசித்துச் சென்றது!

கண் வழி நீரிலே
வரும் வழி பின்னினேன்,
இழைத்த கூடலேன்
கூடாது போயிற்று!

ஒரு மகள் உடையேன்
ஒரு மகள் உடையேன்
கொள்ளிக்கிருக்கும்
ஒரு மகள் அவளே!

தனி மகள் கொய்தீர்
தலையோடு சாய்வீரே!

# 05. நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே

யுகமாய் எழுந்த பெருங்கனவொன்றை
நீலமிடற்றில் செம்பட்டி சூடி,
நிகரில் சூதில் நிணக்கூழ் நயக்கும்
ஆண்பாற் பேய்மகள் ஊழி விழுங்கிற்று!
யுகமே யுகமே எங்கெரியுற்றாய்!
வானிடை எகிறிப் பாய்ந்தெழு கொடியே,
வருபகை மடித்த மார்பெழு புகழே
ஏனிடருற்றாய்! எங்கெரியுற்றாய்!
மூதின் முல்லைப் பெருங்கடல் அன்னாய்!
முள்ளிவாய்க்காற் சிறுமணற் கும்பிகாள்!
முடிவைக் கரைத்த நந்திக்கடலே!
மனத்துள் மண்ணை மகிழ்விற் சுமந்து
களப்பெருஞ் சுரவழி நடைநின்றொழுகி,
நன்றென நின்றவர் நாடு பாடினர்.
காதம் நான்கின் வழிகளுந் தொலைய,
கந்தகக் களிறால் எறிந்து வீழ்த்தி,
காடே ஆற்றாக் காடு பாடினை.
நெல்மணிச் சோறு, நெய்யெரி விளக்கு,
நேர்த்திச் சேவல், நெடுகுலை வாழை
படைத்துப் பரவும் கடவுளர் பரவேன்.
ஊழி யுகத்தின் மக்களைக் காண…
வெளியிடையிரைந்த காற்றைத் தேடினேன்!
காற்றில் எழுந்த அழுகுரல் தேடினேன்!
கருகிய மரத்து நிழற்கால் தேடினேன்!
நெடுங்கடல் அலையின் துயரிசை தேடினேன்!
நிலமிசை வீழ்ந்தவர் பூந்துகள் தேடினேன்!
கரத்திடை மண்ணில் கால் தடம் தேடினேன்!
கண்ணீர் மாலைப் படையலை விரித்து,
நெஞ்சின் வழியாய் நிலமிசைப் பரவினேன்…
'மண்' என்ற சொல் முன்நின்றவரோ…
காய்ந்த என் மனத்துள் 'கல்நின்றாரே'… !



குறிப்பு:

('காலே பரிதப்பினவே' – குறுந்தொகை 44:1,
'இது என் பாவைக்கு இனிய நன்பாவை' – ஐங்குறுநூறு 375:1,
'மக்கள் போகிய அணிலாடு முன்றில்' – குறுந்தொகை 41:4,
'ஒரு மகள் உடையேன் மன்னே' – நற்றிணை 184:1,
'நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே' – புறம் 335:12)

சபாநாதன் கிசாந்தி – இலங்கை

# விடிவுக்காகக் காத்திருப்போம்



காற்றாடி வாழ்க்கையிது
கலைந்தாடும் மனிதர்கள் !
வற்றாத சோலையாம்,
வறண்டு கெட்ட உலகிது!
புலனாகும்
பொருளெலாம் விலைமுட்ட
பொறுமையுடன் உழலவோ?
இல்லமெலாம்
இருட்கூட்டத் தாண்டவம்!
இருள் சூழ்ந்து முடக்கிற்று
வேதனைப்படுவோனை!
வேடிக்கையாய் எண்ணுவார்கள்
வேசத்தில் சிறந்தோனை!
கையெடுத்துப் போற்றுவார்கள்
ஏன் இந்த வரமென்று!
எரிச்சலூட்டுகிற உள்ளத்தில்
எதிர்காலம் எங்கேயென
ஏறிட்டுப் பார்க்கையில்!
திருப்தியில்லா வாழ்விதல்லோ!
அஸ்தமிக்கும் சந்திரனும்
உதயமாகும் சூரியனும்
திடமாக உள்ளனரோ?
விடியாத இரவுகளைக்
கழிப்பதற்காய்ப் போராடும்
புதிரான வாழ்க்கையிது!
விடிவுக்காகக் காத்திருப்போம்!
கொஞ்சம் விரைந்து வரட்டும்!

அ.கண்மணி – இந்தியா



## வரம் கேட்ட மரம்

*நாணலும் நடுங்கி உணங்கி*
*தீயின்றிப் புகையும் பொட்டல்.!*
*தாராளத் தடயங்கள்*
*கிடக்கும் மணற்பாதை.!*
*நா வறண்டும் நடக்கும்*
*நிர்பந்தத்தில் நான்*
*நெடுந்தொலைவில்*
*மடல் செதுக்கி*
*முளைக்கீறிவிட்ட*
*ஒற்றைச் சிறுபனை.!*
*தமிழ் வாத்தியார் சொல்லியிருக்கிறார்*
*பூலோகக் கற்பக விருட்சம்.!*
*ஏகத்துக்கும் எதிர்பார்ப்போடு*
*கிட்டிச் சேர்ந்தேன்.*
*மரம் கேட்டது,*
*“நிழல் தா! நிழல் தா!” என்று..!*

சிறீபாஸ்கரன் சகிர்தா– இலங்கை




# இருண்ட வாழ்வின் சுகமான இரவுகள்

**வா**ய்முதல் வயிறுவரை வெறுமை
உச்சி முதல் உள்ளங்கால் வரை கருமை
உடல் எது உடை எது தலை எது
கண் எது எதுவும் புரியவில்லை
துணைக்குக் காற்செருப்பும் அவனிடமில்லை.
கணப்பொழுதில் கனக்கும் கனவுகள்
சாலையில் சஞ்சரிக்கும் வாகனங்களில்
வைத்துவிட்டு மறந்து தேடுகின்றான்!
கானல்நீராய்க் காட்சிகள் தென்பட இடம்மாறி யிருந்து
மரியாதை வார்த்தைகளைத் தட்டுடன் நீட்டுகின்றான்!
சிலபோது சில்லறையும் சிலபோது சிரிப்பும்
வயிற்றுக்கும் மனதுக்குமாய் விழுகின்றன.
கருமையும், அழுக்கும் தேகத்துக்குத்தான்!
உள்ளத்தில் எப்போதும் பலவர்ணக் கலர்ப்படம்.
நிறங்களை ஒன்றுபடுத்திய ஒளிவிடும் கண்களின்
வெள்ளொளியில் எல்லாம் தூய்மைதான்!
அனைவரும் அம்மா!அய்யா !
சிறுமிகளைத் தீண்டியதோ நாயை ஏசியதோ இல்லை
நேர்மையிலும், விழுந்த சிலசில்லறையிலும்,
வயிற்றுடன் மனதையும் நிரப்பிக்கொண்டு
சாலையில் எச்சில் காய்ந்த ஓரம்பார்த்து
மூச்சுவிட்டுத் தூங்குகின்றான்!
அவனுக்கு இருண்ட வாழ்விலும் சுகமான இரவுகள்.

சி.விஜய் – இந்தியா

# தோகையர் மேன்மை

அடர்வனத்துக் குளிரின்
அருமையை அனுபவித்து
ஈர இறகை மென்காற்றில்
உலர்த்திச் சிலிர்க்க
எத்தனித்தபோது.!
பட்டப்பெயர் பேகனின்
வள்ளன்மைப் பசிக்காய் வீசப்பட்ட
போர்வைக் கட்டுக்குள் முடங்கி
புழுக்கத்தில் அழுந்தும்
தோகையர் கோடி!
அக்கினிக் குஞ்சொன்றை
அப்போர்வைக்குள் வைப்போம்.!
வெந்து தணியட்டும் காடு.!
பேகன்களின் வள்ளன்மையோடு!



வி.விமலாதித்தன் – இலங்கை

# உறைந்த காலத்தின் உள்ளே



கனவுகள் இல்லாத
ஆழ்ந்த துயிலின் போது,
உன் வெள்ளைச் சிறகை மடித்தபடி
என்னருகே வந்து அமர்ந்தாய்!

திசைகளைச் சூழ்ந்த
கரிய இருட்போர்வைக்குள்
என் நினைவுகள்
ஓடி ஒளிந்து கொள்ளும் வண்ணம்
ஒளிபொருந்திய விரல்களால்
மார்பை வருடினாய்.

எக்கணமும் சுழன்று சிதைக்கும்
விதி அப்படியே உறைந்தது.
கொடுமையான என் பாவங்கள்
மெல்ல மெல்ல அகன்று போயின.
உன்னுடைய அருகாமையில்
என் எல்லைகள் அறுந்தன.

கட்டற்றுத் திறந்த காலத்தில் நான் கரைந்தேன்.
உன் மௌனக்கடலுக்குள் தேகம் அமிழ்ந்தது.

களிப்பென்னும் கார்முகில் வந்து
வெடித்துப் பிளக்க,
உன்மத்த ஊழியின் விளிம்பில் ஏறி நான் ஆடத்தொடங்கினேன்.

தளைகள் வெடித்தகன்று செத்தன.

வெட்டவெளிதனில்
ஆடி மகிழ்வுறு
பித்தன் எனப்படுக.

களிபொங்கிப் பெருகி
எங்கும் ஒளியலை
மோதிச் சிதறிடுக.


# இனிது



**ப**ண மழை அலுமினியக் கூரையைப் பிய்த்துக்கொட்ட
பஞ்சம் மாற வாத்துகள் கும்பலாகக் கூத்துப்பாட
கொண்டாடும் மனசு கணக்கில்லை!
வாரிசுகள் ரம்பூத்தான் மரத்தினடி விளையாட்டுக் காண
எம்.ஜி.ஆர் பாட்டுப் பாடும் சோலைதான் எங்குமுள்ளது!
சட்டியில இறைச்சிய பிரட்டிச் சோறு செஞ்சுவச்சு
சந்தியில கூக்குரலிட எல்லாப் பிள்ளையும் சாப்பிடும்.
அப்துல் ரகீமின் வீட்டோரமே இறால்வடை வாடை வீச
சீனப் பாட்டி வளர்த்த கோழிக் கூட்டில்
பெரிய முட்டைகள் இட்டுப் போக!
நல்லப் பண்டிகையென அப்பா டி.வியொன்று வாங்கிவர
போட்ட முதல் படத்தில் ஊரே கூட, கூடாரம் கட்டித் தங்க,
நமக்குக் கோரேங் பீசாங் செஞ்சு ஊட்டுவாள்
அண்டைவீட்டு அக்கா!
தோள்ல தராசுத்தட்டிருக்க தாத்தா கையில் மீன்கள் இருக்க
புளி கரைச்சு வச்ச நல்ல கறியை,
அக்கா நீ எப்போ சமைப்பே?
அலசிய மீன் எல்லாம் மொளவாய்
மஞ்சள்தூள், உப்பு போட்டபின்
அடுப்பில வச்சப்பின் தன் கையால பொரிச்சுக் குடுப்பாள்.
புதுச் சப்பாத்துப் போட்டுகிட்டு அப்பாக்கூட
ஊடான் புடிக்கப் போகையிலே
ராத்திரியெல்லாம் குத்தவச்சு உட்காந்து
நான் வழுக்கித் தரையிலே விழுந்து எழுந்தேன்! . . . .
எண்ணங்களை எண்ணுகிறேன்! நினைவுகள் இனிது…

| | | |
|---|---|---|
| ரம்பூத்தான் | - | சிங்கப்பூர்போன்ற நாடுகளில் வளரும் ஒரு பழமரம் |
| கோரேங் பீசாங் | - | மலாய்க்கார்கள் வாழைப்பழத்தைப் பிசைந்து செய்யும் ஒரு இனிப்புப் பலகாரம் |
| சப்பாத்து | - | மலாய் மொழியில் காலணி |
| ஊடான் | - | மலாய் மொழியில் இறால் |

# அலையாத்திக்காட்டின் தேன்



சுந்தரக் கானகம்!

வங்கப் புலிகளின் தாயகம்!

கடல் அலைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி நிலத்தைக் காப்பதால் 'அலையாத்திக் காடுகள்' என இதற்குக் காலம் காலமாக உள்ளது இப்பெயர். அரும்பெரும் பொக்கிஷமாக எங்கும் தென்படாத மலைத்தேன் இங்கு கிடைக்கிறது. அவ்வப்போது பெயர் தெரியாத மரத்தொன்றில் தொங்கிக்கொண்டிருக்கும் மலைத்தேனைக் கண்டு மலைத்துவிட்டு ஏக்கப்பெருமூச்சும் இட்டுவிட்டு இரை தேடச் செல்வதுதான் அச்சுந்தரவனத்துச் சுந்தரனான பியாயிகோவின் வாடிக்கை! அது சரி! முடவன் கொம்புத்தேனுக்கு அசைப்படலாமா?

இந்த ஆசையை வளர்த்து விட்டவள் அவன் மனைவி குயாயு. இரை தேடப் போகும் வழியில் கால்கள் புதையும் அளவிற்குச் சேற்றில் சிக்குண்டான். ஒரு வேளைக்கு உணவுக்கு ஆகும் இரையாக வேண்டிய புள்ளிமானும் அங்கே இவனைக்கண்டு தப்ப முற்பட அதுவும் சேற்றில் மாட்டிக் கொண்டது. ஆனால் பியாயிகோ மாட்டியது சேற்றில் மட்டுமல்ல, அங்கு வந்த வங்கப்புலியிடமும். புலியின் பாய்ச்சலிலிருந்து தப்பிக்கும் ஒருவித வித்தையைக் கற்றுவைத்திருந்தான். கொஞ்சம் அதற்குப் போக்குக் காட்டி,

"பு.. இ.. யூ . . ."

"பு.. இ ..யூ . . ."

எனக் கத்தினான். புலி தன் காதினை அடைத்துக்கொள்ள முடியாமல் பிடறியடித்துக்கொண்டு ஓடியது. இவனைப்போலே புலிக்கு அஞ்சி குரங்கு ஒன்று தென்படாமலிருந்த அலையாத்திக் காட்டின் மலைத்தேன் கூட்டைத் தன் கைகளால் மரத்தில் தவ்வி ஓட முயன்றபோது பிய்த்துக் கீழெறிந்தது. கீழே கிடந்த தேன் கூட்டினைக் கண்டு மகிழ்வு தாழாது சத்தமிட்டு அடங்குவதற்குள் இவனை, கூட்டைச் சுற்றி வட்டமிட்டக் கொடுந்தேனீக்கள் கொடூரமாகத் தாக்கின. எப்படியே தேனீக்களில்லாத் தேன்கூட்டை எடுத்துத் தன் மடிக்கச்சையில் கட்டிக்கொண்டு இருப்பிடம் நகர்ந்தான். ஆசை வளர்த்த ஆசை மனைவிக்கு ஆசையாய் மலைத்தேனைப் பரிசளித்தான். அழுது புலம்பிய அவள், பியாயிகோவின் முட்டி முளைத்த கொப்பளங்கள் கண்டு வழிந்த தன் கண்ணீரைக் கொஞ்சம் எடுத்து வீக்கங்களின் மேல் ஒத்தடம் தந்தாள். அன்பில் ஊறிய உவர் கண்ணீராக, பியொயிகோவிற்கு அலையாத்திக் கானகத்தின் உண்மையான தேன் கிடைத்துவிட்டது.



# அன்பு குளோரிஸ்!

*அன்பு குளோரிஸ்!*
*நமக்குள் காதல் என்றவொன்று*
*இல்லாமலிருக்கலாமே என்று*
*இனி நீ கேட்பாய்!*
*காதலெனில் காதலனிடமிருந்து*
*நீங்கித்தான் ஆகவேண்டுமெனில்...*
*அதிகம் நினையாதே,*
*உற்ற நண்பனாவேன் நான் அன்பே!*

*என் குளோரிஸை நான் விரும்பினாலும்*
*எனக்குள்ள ஒரு நாவால் அடக்கிவியலாத*
*என்னன்பைக் கூறாமல்போனாலும்*
*ஒரு போதும் இனி வெளிப்படுத்தேன்!*
*நன்மொழியைக் கூறியே காலங்கழிப்பேன்!*

*நாள்தோறும் உனைப்பேணும் பெரும்பணி*
*என்னுடையதுதான் என்றாலும்,*
*கனாக்களில் வந்துதித்த*
*முன்னை வண்ணக் கற்பனைகளை*
*இதயத்தினுள்ளேயே போராடித் தாழிடுவேன்!*
*உனக்கென உள்ள மாண்பை நான் கொடுப்பேன்!*
*இனி இவைதான் உனக்கென்று*
*என் மாண்பு காப்பேன்!*

**ஆங்கில மூலம்**
***இராபர்ட் பர்ன்ஸ் (1759-1796)***

பல

இடையூறுகளுக்கு மத்தியில்,
சவால்களுக்கு முகங்கொடுத்து
முன்னேறும் இவ்விதழை,
ஆதரவுக் கரங்களெனும்
காற்றால் அரவணைக்கும்,
எழுத்துலகச் சிற்பிகளின்
கரங்களையும்
நன்றியுணர்வோடு பற்றிக்கொள்கிறோம்.
உங்கள் தொடர்ச்சியான
ஆதரவையும் பங்களிப்பையும்

நெற்கதிர்
வேண்டிநிற்கிறது.

ISSN 2815-0333

9 772815 033009